பக்கங்கள் : முப்பத்திரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை (09.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :133

# தலைநகரில் விடுதலைக்காக ஒளிர்ந்த சுதந்திரச் சுடர் அணைந்து விட்டது!



## விக்னேஸ்வரனுக்கு மாமனிதர் கௌரவம் தேசியத் தலைவர் பிரபாகரன் அறிக்கை



கிளிநொச்சி,ஏப்.9

திருகோணமலையில் ஒட்டுப்படைகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனுக்கு தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருதை வழங்கிக் கௌரவித்திருக்கிறார் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

விக்னேஸ்வரனுக்கு மாமனிதர் விருது வழங்கப்படுவது தொடர்பாக தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையை விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தாயக விடுதலையைத் தனது வாழ்வின் அதியுயர் இலட்சியமாக வரித்து, அந்த உயரிய இலட்சியத்துக்காக அயராது உழைத்த உன்னத மனிதரைத் தமிழீழத் தேசம் இன்று இழந்து விட்டது. எமது தாயகத்தின் தலைநகரில் விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு சுதந்திரச் சுடர் ஒன்று அணைந்துவிட்டது. தமிழர் தேசியத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுப்படைகளை ஒடுக்க உறுதி புலிகளுக்கு ஜனாதிபதி தெரிவிப்பு

## இயன்ற அனைத்தையும் செய்வார் என நோர்வேத் தரப்பு ஊடாகத் தகவல்

லண்டன்,ஏப்.9

கடந்த பெப்ரவரியில் ஜெனீவாவில் நடைபெற்ற முதல் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட முடிவுகளை நடை முறைப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற அனைத்தையும் தாம் செய்வார் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வே அனுசரணைத் தரப்பு ஊடாகப் புலிகளுக்கு உறுதிமொழி வழங்கியிருக்கின்றார்.

இவ்விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் எழுப்பியுள்ள அம்சங்கள் குறித்து திட்டவட்டமான - தீர்க்கமான - உறுதியான நடவடிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயலில் காட்டுவாரானால் ஜெனீவாவில் நடைபெறும் அடுத்த சுற்று அமைதிப் பேச்சுகளில் தாங்கள் நிச்சயம் பங்குபற்றுவார்கள் எனப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் புலிகளுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் எதிராக வன்முறைகளைப் புரிந்துவரும் தமிழ் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றின் வன்முறை நடவடிக்கைகளுக்கு முடிவுகட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மேற்படி உறுதிமொழியும் நிலைப்பாடும் நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)



அன்புவழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் விக்னேஸ்வரனின் சடலம்.

# சிறுப்பிட்டியில் குண்டு வெடிப்பு சிப்பாய், வயோதிபர் காயம்!

## வீதியால் சென்ற பலர் படையினரால் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.9

நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ஒரு வெடிப்புச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் வயோதிபர் ஒருவரும் காயமடைந்தனர்.

பருத்தித்துறை வீதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றினை இலக்கு வைத்து சிறுப்பிட்டிச் சங்கக்கடையடியில் கிளைமோர் கண்ணி ஒன்று வெடிக்க வைக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு விரையப்பட்டார். அப்பகுதியில் நின்றுருந்த சிதம்பரம் நடராசா என்ற அறுபது வயதுடைய வயோதிபருக்கு கால்களில் காயங்கள் ஏற்பட்டன. அவர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பொலீஸ் குழு விசாரணை

திருகோணமலை,ஏப்.9

திருகோணமலை நகரில் நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உயர் மட்டப் பொலீஸ் குழு ஒன்று நேற்று திருமலை வந்து சேர்ந்துள்ளது. ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் திருமலைக்கு வந்த பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ சம்பவ இடங்களைப் பார்வையிட்டார். அவரின் பணிப்பின் பேரில் விசேட குழு ஒன்று நேற்று அங்கு வந்து (20ஆம் பக்கம் பார்க்க)

# மாமனிதரின் உடல் நாளை கிளிநொச்சிக்கு வந்து சேரும்

## திருமலையில் செவ்வாயன்று இறுதிச் சடங்கு

திருகோணமலை,ஏப்.9

திருமலை மக்கள் பேரவையின் தலைவர் 'மாமனிதர் விக்னேஸ்வரனின் உடல் மக்களின் இறுதி வணக்கத்திற்காக திருமலையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்திற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அன்புவளிபுரத்தில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் மாமனிதரின் உடல் இன்று காலை அங்கிருந்து புலிகளின் நிர்வாகப் பகுதியான மூதூர் கிழக்குக்கு எடுத்துச் (20ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை தோப்பூர் பகுதியில் படையினர் - புலிகள் மோதல்!

## போராளியும், சிப்பாயும் உயிரிழப்பு

திருகோணமலை,ஏப்.9

திருகோணமலை தோப்பூர்ப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேரடியான துப்பாக்கிச் சமர் இடம்பெற்றிருக்கிறது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தோப்பூர், பட்டியடியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேச எல்லையில் புலிகளின் நிலை மீது இராணுவத்தினர் முன்னேறி வந்து தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்த மோதல் மூண்டது என்று விடுதலைப் (20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நல்லூரில் ஆறு வீடுகளில் கொள்ளை வாள்களுடன் வந்த கும்பல் அட்டகாசம்

## பணம், நகை தர மறுத்தோருக்கு வாள்வெட்டு

வலி.கிழக்கு,ஏப்.9

நல்லூரில் சட்டநாதர் வீதி, சங்கிலியன் வீதிப்பகுதிகளில் நேற்று அதிகாலை கொள்ளைக்கோஷ்டி ஒன்று பல வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததுடன் தங்க நகை, பணம் மற்றும் பொருள்களையும் கொள்ளையிட்டிருக்கின்றது.

முகத்தைக் கறுப்புத்துணியால் மறைத்துக் கட்டிக்கொண்டு வாள்கள், கிறிஸ் கத்திகளுடன் காணப்பட்ட கொள்ளையர்கள் வீடுகளை அடித்து நொறுக்கி உள்நுழைந்து அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி, மிரட்டிகொள்ளையில் ஈடுபட்டிருக்கின்றனர். சுமார் இருபது இருபத்தைதந்து பேர் அடங்கிய கொள்ளைக் கும்பல் ஒன்றே இவ்வாறு பெரும் அடாவடித்தனமான செயலில் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணிக்குப் பின்னர் நல்லூர் சட்டநாதர் வீதியில் - அருகருகே அமைந்துள்ள இரண்டு வீடுகளில் முதலில் கொள்ளையர்கள் நுழைந்தனர். முதலாவது வீட்டின் கதவுகளை அடித்துப் பெயர்த்துத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த மூவரையும் கத்தி முனையில் மிரட்டினர். தொலைபேசி இணைப்பைத் துண்டித்தனர். வீட்டில் இருந்த கைத்தொலை பேசியையும் அபகரித்துக் கொண்டனர். அறைகளில் தேடுதல் நடத்தி பொருள்களைத் அபகரித்தனர். பெண்ணொருவர் அணிந்திருந்த தங்க நகைகளையும் பறித்தெடுத்தனர். வீட்டில் இருந்த இளைஞனை வாளால் வெட்டவும் முயற்சித்தனர். பின்னர் அங்கிருந்து வெளியேறி பக்கத்து வீட்டின் ஓடுகளைப் பிரித்து, கூரை சீலிங்குகளைத் தகர்த்துக்கொண்டு உள்ளே இறங்கிய கொள்ளையர்கள் அந்த வீட்டில் இருந்தோரைப் பயமுறுத்தி தங்க நகைகளையும், பணத்தையும் கேட்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த போது குடும்பஸ்தரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர்.

பின்னர் அங்கிருந்து சுமார் 16 ஆயிரம் ரூபா பணம், கைத்தொலைபேசி, 5 பவுண் நகைகளைக் கொள்ளையர்கள் அபகரித்தனர். வாள்வெட்டுக்கு இலக்கான ரமேஸ் என்பர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

**வீதிக்கு வந்தோர் விரட்டப்பட்டனர்**

கொள்ளையர்கள் வீடுகளின் கதவுகளை அடித்துத் திறக்கும் சத்தம் கேட்டு எழுந்த அயலவர்கள் சிலர் வீதிக்குவர முற்பட்ட போது வீதிகளில் வாள்கள், பொல்லுகளுடன் தயார் நிலையில் நின்றிருந்த கொள்ளையர்கள் அவர்களை மிரட்டி வெளியே வர விடாது தடுத்துவிட்டனர். சட்டநாதர் வீதியில் கொன்றலடி வைரவர் கோயிலுக்கு அருகே உள்ள அந்தணர் ஒருவரின் வீட்டினுள்ளும் கொள்ளையர்கள் நுழைந்தனர். அங்கு சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டனர். பின்னர் சங்கிலியன் வீதியில் உள்ள மூன்று வீடுகளினுள்ளும் கொள்ளையர்கள் நுழைந்து அடித்து நொறுக்கி அட்டகாசம் புரிந்தனர். கையடக்கத் தொலைபேசி, பணம், தங்க நகைகளைக் கொள்ளையிட்டனர்.

ஒரு பகுதியில் பல மணி நேரம் தங்கி நின்று கொள்ளைக் கும்பல் நடத்திய இந்தத் துணிகரமான கொள்ளைச் சம்பவங்கள் நல்லூர் பகுதியில் பெரும் பரபரப்பையும் மக்கள் மத்தியில் பீதியையும் உருவாக்கி உள்ளது.

இராணுவம் மற்றும் பொலீஸ் காவல் நிறைந்த வீதிகளில் கொள்ளையர்கள் நீண்டநேரம் தங்கி நின்று அட்டகாசம் புரிந்துள்ளனர். இது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

**கோப்பாய் பொலீஸார் விசாரணை**

இதேவேளை -

கொள்ளைச் சம்வங்கள் இடம்பெற்ற ஆறு வீடுகளுக்கும் சென்ற கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அங்கு விசாரணைகளை மேற்கொண்டார். கைரேகை அடையாளங்களும் தடயங்களும் சேகரிக்கப்பட்டன.

பொதுமக்களைப் பீதிக்குள்ளாக்கும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை அடுத்து இவற்றைத் தடுப்பதற்காக பொலீஸார் இரவு ரோந்துப் பணியைத் தீவிரமாக்க உள்ளனர் என்றும் -

இரவு வேளைகளில் அநாவசியமாக வீதிகளில் நடமாடுவதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் -

கோப்பாய்ப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-180-15)(30)



யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நேற்று மாலை நடைபெற்றது. வெள்ளோட்டத்துக்கு முன்பாக புதிய தேருக்கு சமயக்கிரியைகள் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. (படம்: ஒளி அதிரன்)

# நல்லூரில் கொள்ளையர்களிடமிருந்து 5 சைக்கிள்களைப் பொலீஸ் மீட்டது!

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படும் சந்தேகநபர்கள் இருவர் யாழ். பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படுபவர்கள் நல்லூர் பகுதியில் கைவிட்டுச் சென்ற ஐந்து சைக்கிள்களையும் பொலீஸார் மீட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருநெல்வேலி, மணல்தறை ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து திருட முயற்சித்த இருவர் அப்பகுதிப் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் கொக்குவில் தலையாளிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் 18வயதுடையவர் என்றும் மற்றைய நபர் 26 வயதுடையவர் என்றும் கூறப்பட்டது. இந்த இருவரும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை-

நல்லூர் சங்கிலியன் வீதி, சட்டநாதர் வீதிப் பகுதிகளில் நேற்று அதிகாலை பெரும் கொள்ளையில் ஈடுபட்ட கும்பல் தொடர்பாக யாழ். பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு பொலீஸார் விரைந்து சென்றனர் என்றும் பொலீஸாரைக் கண்டதும் தம்வசம் இருந்த சைக்கிள்களைக் கைவிட்டுக் கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர் என்றும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

ஐந்து சைக்கிள்களையும் பொலீஸார் மீட்டெடுத்து யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு வந்தனர். அவற்றில் மூன்று பெண்களுக்குரியவை. இரண்டு ஆண்களுக்குரிய சைக்கிள்கள் ஆகும்.

இதேவேளை-

மணற்தறை ஒழுங்கைப் பகுதியில் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் ஏற்கனவே யாழ். நகரை அண்டிய பகுதியில் இடம் பெற்ற திருட்டுக்கள் பலவற்றுடன் தொடர்புடையவர் என்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றார் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-7)

# சந்தேகத்திற்கிடமானோர் குறித்து தகவல் தர படையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

சந்தேகத்திற்கிடமானவர்கள் குறித்த தகவல்களைப் பொதுமக்கள் தந்துதவ வேண்டும் என்று படையினர் அறிவித்துள்ளனர்.

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த புதன் கிழமை இரவு அடுத்தடுத்துச் சில வீடுகளில் கொள்ளைகள் இடம்பெற்றன. இதனையடுத்து நேற்றுமுன்தினம் பிற்பகலில் வாகனத்தில் ஒலிபெருக்கி பொருத்தி வீதிவீதியாகப் பொலீஸார் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:-

இரவுவேளைகளில் படையினரும் பொலீஸாரும் நடமாடுவதால் கொள்ளைச் சம்பவங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பிருப்பதாகச் சந்தேகம் கொள்ளவேண்டாம். பொது மக்களைப் பாதுகாக்கவே நாம் பணியாற்றுகிறோம். இரவு வேளைகளில் படையினரோ, பொலீஸாரோ வீடுகளுக்குள் நுழைவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை. இதற்குப் படையினராகிய நாம் உத்தரவாதமளிக்கின்றோம்.

இரவுநேரங்களில் சீருடையுடன் வீடுகளுக்குள் நுழைவதற்குக் கோரினால் அதனை அனுமதிக்கவேண்டாம். இத்தகைய சந்தர்ப்பத்திலோ சந்தேகப்படும்படியாக எவரேனும் நடமாடினாலோ 222 2267 அல்லது 222 3398 அல்லது 222 7190 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவியுங்கள்.

- இவ்வாறு பொலீஸார் அறிவித்துள்ளனர். (ஐ-ஒ-3-15)

# வங்கியாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும், இலங்கை வங்கியின் திருமலைக் கிளை அதிகாரியுமாகிய வன்னியசிங்கம் விக்னேஸ்வரினின் படுகொலையை யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக வங்கியாளர் சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை வங்கி திருகோணமலைக் கிளையின் அதிகாரியான எமது வங்கிச் சமூகத்தின் மூத்த உறுப்பினர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் 07.04.2006 வெள்ளிக்கிழமை கடமையில் ஈடுபட்டிருந்தபோது இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை வங்கிச் சமூகத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படியான செயல்கள் வங்கியாளர்களையும் பொதுமக்களையும் மிகவும் பாதித்து நிர்வாகச் சீர்குலைவுகள் ஏற்பட இடமுண்டு.

எனவே, இதற்குக் காரணமானவர்களை கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்துவதுடன் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசை இத்தால் கேட்டுக்கொள்கின்றோம்.

இத் துர்ப்பாக்கிய சம்பவத்தால் துயரப்படும் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் அவர்களது குடும்பத்தினருக்கு வங்கிச் சமூகத்தின் சார்பில் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(30)

# கலப்படம் செய்த எரிபொருள் விற்பனை செய்யத் தடை

## விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவுறுத்து

எரிபொருள் விற்பனையில் ஈடுபடுவோர் விற்பனை செய்யும் எரிபொருள்களில் கலப்படம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

எரிபொருள் விற்பனையில் ஈடுபடுவோர் தாம் கொள்வனவு செய்த எரிபொருள்களில் கலப்படம் செய்வதையோ கலப்படஞ்செய்யப்பட்ட நிலையிலான எரி பொருள்களைக் கொள்வனவு செய்வதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எரிபொருள்கள் கலப்படம் செய்யப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்படுமாயின் விற்பனை செய்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி மேலும் தெரிவித்துள்ளது.

இந் நடைமுறை கடந்த வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-203)(30)

# போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும். அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

14ஆம் திகதி வெள்ளிக்கிழமை புதுவருடப் பிறப்புப் பிரார்த்தனை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ)(30)

# நடமாடும் இரத்ததான முகாம்களின் ஒழுங்கமைப்பாளர்களுக்குச் செயலமர்வு

நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்குபடுத்தும் வடமாகாண ஒழுங்கமைப்பாளர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இச் செயலமர்வில் சகல இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நாளுக்குநாள் இரத்தத்தின் தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதனால், குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளதால் இச் செயலமர்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-202)(30)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 'ட்றீம்ஸ் சொலுஸன்ஸ்' நிறுவனத்தால் யாழ். நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வர்த்தகக் கண்காட்சி நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகிய போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் க.பொன்னம்பலம் மங்களவிளக்கேற்றுவதையும் யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜனக்குமார் நாடாவை வெட்டி காட்சிக் கூடத்தினைத் திறந்து வைப்பதையும், காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஒளி அதிரன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சு திட்டமிட்டபடி நடந்தேறுமா?

அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சுக்கு இன்னும் பத்து நாள்கள் தான் உள்ளன. திட்டமிட்டபடி அந்தப் பேச்சு நடைபெறுமா என்ற கேள்வியே இலங்கைத் தீவு மக்களின் மனதில் இன்று நெருடும் விடயமாகும்.

முன்னைய ஒழுங்குகளுக்கு அமைய பேச்சுகள் நடைபெறும் என்று இலங்கை அரசுத்தரப்பும் நோர்வே அனுசரணைத் தரப்பும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றன.

ஆனால், உத்தேசப் பேச்சில் பங்குபற்றுவதா என்பதை மீளாய்வு செய்யும் நிலைக்கு புலிகளின் தலைமை தள்ளப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அதுவும் கடந்த வெள்ளியன்று காலை திருகோணமலை தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் ஒட்டுப்படைகளால் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர், இதுவிடயத்தில் தீர்க்கமான - தீவிரமான - திட்டவட்டமான - ஒரு முடிவை எடுக்கும் நிலைக்குப் புலிகள் தள்ளப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

ஒட்டுப்படைகள், துணைப்படைகள் போன்றவற்றின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றின் வன்முறை நடவடிக்கைகளுக்கு முடிவுகட்டப்படும் என ஜெனீவாவில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சில் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வரும் இலங்கை அரசு, அந்த முடிவுக்குத் தலைமாறாக - தலைகீழாக - ஒட்டுப்படைகளை வைத்துத் தமது கைங்காரியத்தைத் தீவிரப்படுத்தி வருகிறது எனப் புலிகள் கருதுகின்றனர்.

கடந்த சுற்றுப் பேச்சில் கலந்துகொண்ட இலங்கை அரசின் பொலீஸ்மா அதிபரோ, துணைப்படை என எதுவுமே இல்லையென்று கையை விரித்து முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்றார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகரான முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனியாவோ, ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களையுமாறு கோரும் தார்மீக உரிமை 'பயங்கரவாதிகளான' புலிகளுக்குக் கிடையாது எனத் தத்துவம் பேசுகின்றார்.

இலங்கை இராணுவத் தளபதியோ, யுத்த நிறுத்த காலத்தில் தங்கள் படையினர் தேடித் தாக்கி அழித்த நடவடிக்கைகளின் தீவிரத்தைத் தாங்க முடியாமல்தான் புலிகள் வேறுவழியின்றி பேச்சு மேசைக்கு வர இணங்கினார்கள் எனத் தம்பட்டம் - வீண் ஜம்பம் - அடிக்கின்றார். என்றாலும் அந்த சுய பிரலாயத்துக்கு மத்தியிலும் புலிகளைத் தேடித் தாக்கும் நடவடிக்கையில் தங்கள் துருப்புகள் ஈடுபட்டன எனப் 'பெருமையுடன்' ஒப்புக்கொள்ள அவர் தவறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான, ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரர் கோட்டபாய ராஜபக்ஷவோ, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவருடனான தமது சந்திப்பில், அவருடன் வாய்த்தர்க்கப்பட்ட போது, கருணா குழுவை வைத்துப் புலிகளை ஒடுக்கிக்காட்டுகிறேன் பாருங்கள் என்று சூளுரைத்து வாய்ச் சவடால் விடுகிறார் எனத் தகவல்கள் கசிகின்றன.

இவ்வளவுக்கும் மத்தியில் புலிகள் தாம் அளித்த வாக்குறுதிப்படி வன்முறைகளை நிறுத்தி, தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சமாதானப் பேச்சுக்கு வாய்ப்பளித்து அமைதி காக்கின்றார்கள்.

ஆனால், கிழக்கில் புலிகளின் நிலைகள் மீது - கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது - ஒட்டுப்படைகளின் வலிந்து தாக்குதல்கள் தொடர்கின்றன.

அரச படைகளின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாப்போடு ஒட்டுப்படைகள் பகிரங்கமாக மக்கள் முன் சர்வசாதாரணமாகத் தோன்றி தமிழ் மக்களை அச்சுறுத்தி அடிபணியவைக்கும் தந்திரம்கூட தமிழர் தாயகத்தில் வெளிப்படையாக இடம்பெற ஆரம்பித்துள்ளன.

புலிகளுக்கு ஆதரவாகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் குரல் கொடுக்கின்ற பிரமுகர்கள், அரசியல் வாதிகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் போன்றோர் ஒட்டுப்படைகளால் கேள்வியின்றிச் சுட்டுக்கொல்லப்படுகின்றார்கள்.


இவ்வளவு அவலங்களும் தொடருகின்ற போது-

முதல் சுற்றுப் பேச்சின் முடிவில் பகிரங்கமாக ஒப்புக்கொண்ட அம்சங்களை நடைமுறைப்படுத்த இணங்காமல் - பிடிவாதம் பிடித்து - மறுத்து வருகின்ற அரசாங்கத்தோடு -

ஏமாளிகள் போல அடுத்த சுற்றுப் பேச்சுக்குப் போய் அமர்ந்திருந்து கலந்துரையாடிப் பேசிக் கலைவதில் - பேசிக் களைப்பதில் - அர்த்தம் ஏதும் உண்டா? அப்படி செய்வது வெறும் அபத்தமல்லவா? என்று புலிகளின் தலைமை சிந்திப்பது நியாயமாகவே தோன்றுகின்றது.

வெளிப்படையாக அமைதி முயற்சி என்ற மூலக்கதையின் அடிப்படையில் சமாதானப் பேச்சு நாடகத்தை அரங்கேற்ற முனையும் அரசு, அதை வைத்து சர்வதேச ஆதரவையும், உதவிகளையும் திரட்டிக்கொண்டு, மறுபுறத்தில் புலிகளை இராணுவ ரீதியில் அடக்கி, தமிழரின் விடுதலை உணர்வை ஆயுத முனையில் ஒடுக்கும் திட்டத்துடன் பெரும் இராணுவத் தயாரிப்பு வேலைகளில் - போரியல் ஏற்பாடுகளில் - மும்முரமாக முனைந்திருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இத்தகைய ஏமாற்று நாடகத்தில் புலிகளும் ஒரு பாத்திரம் ஏற்று நடித்துத் தாமும் சேர்ந்து ஏமாற வேண்டுமா என்பதே புலிகளின் தலைமை எழுப்பும் வினா. அதில் அர்த்தமும் ஆழமும் நிறையவே பொதிந்துள்ளன என்பது தெரிகின்றது. (27)



வேலணைப் பிரதேச செயலக கலாசார பேரவை ஏற்பாடு செய்த கலை இலக்கிய பெருவிழா வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலய மண்டபத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. பிரதேச செயலாளர். மு.நந்தகோபாலன் மற்றும் பொதுமக்கள் கலை நிகழ்வுகளை பார்வையிடுவதையும் கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் எஸ்.அற்புதன் உரை நிகழ்த்துதையும் நிகழ்வில் இடம்பெற்ற நாடகத்தில் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஒளிஅதிரன்)

# இணைத் தலைமையின் தூதர்கள் திங்களன்று கிளிநொச்சி விஜயம்

கிளிநொச்சி, ஏப். 9

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் தூதர்கள் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு வருகின்றார்கள்.

அன்று முற்பகல் 10 மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதானசெயலகத்தில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவை தூதர்கள் சந்திக்கவிருக்கின்றனர்.

நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் நெதர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதர்களே கிளிநொச்சி வருகின்றார்கள்.

தற்போது களத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து அறியும் நோக்குடன் வரும் இந்தத் தூதர்கள், ஜெனீவாவில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின் போது எட்டப்பட்ட இணக்கத்தின் அமுலாக்கம் குறித்தும் கேட்டறிவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த கட்டப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை தூதர்கள் விடுதலைப் புலிகளிடம் வலியுறுத்துவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டை அரசு நடைமுறைப்படுத்தாததால் அரசின் மீது தாங்கள் கொண்டுள்ள அவநம்பிக்கையைத் தூதர்களிடம் புலிகள் எடுத்து விளக்கவிருக்கின்றனர். (உ-3)

# ஜே.வி.பியைப் புறக்கணித்துவிட்டு ஐ.தே.கவை நாட ஜனாதிபதி முடிவு?

## சொல்ஹெய்மிடம் அவரே கோடி காட்டினாராம்

கொழும்பு, ஏப்.9

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இனிமேலும் ஜே.விபியின் ஒத்துழைப்பை நம்பிக் கொண்டிருக்கப் போவதில்லையென்றும், இதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பையும் உதவிகளையும் தாம் பெற்றுக் கொள்ளப் போகிறார் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவுசெய்து விட்டார்.

கடந்த வியாழன்று தம்மைச் சந்தித்த இலங்கை அமைதி முயற்சிகளுக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடமே ஜனாதிபதி இவ்வாறு கோடி காட்டியிருக்கிறார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தன.

அமைதி முயற்சிகள் மற்றும் அமைதி முயற்சிகளுக்கான அனுசரணையாளர்கள் தொடர்பில் ஜே. வி. பியினர் மேற்கொண்டு வரும் விமர்சனங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது கடுமையான அதிருப்தியை வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைதி முயற்சிகளுக்கான எதிர்ப்புகளை இனிமேலும் தாம் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லையென்றும் தெரிவித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

அமைதி முயற்சிகளை வலுவாக முன்னெடுக்கத் தாம் யோசனை கொண்டிருப்பதால் ஜே. வி. பியை விடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைபைத்தாம் பெறவுள்ளார் எனவும் இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன் உத்தியோகபூர்வ பேச்சுகளைத் தாம் நடத்தவுள்ளார் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்திருக்கிறார் என்று மேலும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, அமைதி முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையிலான முக்கிய பேச்சுகள் வெகுவிரைவில் நடைபெறவுள்ளன எனக் கூறப்படுகின்றது. (க-3)

# வண்ணை சிவன் ஆலயத்தில் நாளை காலை தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.9

வண்ணார் பண்ணை ஸ்ரீமதி வாலாம்பிகை ஆலய பார்த்திப வருடத் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று 10 மணிக்கு பஞ்சரதபவனி இடம்பெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

காலை 5 மணிக்கு நடராஜா அபிஷேகமும் 7.30 மணிக்கு பூசையும் வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

தொடர்ந்து முற்பகல் 11மணிக்கு தீர்த்தமும் நடைபெறும். இதனையடுத்து நண்பகல் 12 மணிக்கு யாககும்ப அபிஷேகமும் இடம்பெறும்.

12 ஆம் திகதி பூங்காவனம் இடம் பெறும். காலை 9மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் எழுந்தருளி முன் மண்டபத்தில் தபசு இருப்பார்

பிற்பகல் 3மணிக்கு சந்திரசேகரர் எழுந்தருளி மாலை மாற்றி திரு வீதி வலம் வருவர். 4 மணியளவில் கன்னி ஊஞ்சல் இடம்பெற்று திருக்கல்யாணம், திருவீதி வருதல் என்பன இடம் பெறும்.

ஆலயத்தில் அமைக்கப்பட்ட புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நேற்று மாலை இடம் பெற்றது. (3-203)

## நாளை

பங்குனி 27
திங்கட்கிழமை
10.04.2006
திதி :துவாதசி
பிற்பகல் 05.15
நட்சத்திரம் :பூரம்
பின்னிரவு : 05.25
சுபநேரம் : 12.06 - 01.36
ராகுகாலம் : 07.36 - 09.06
(யாவும் பழைய நேரப்படி)

# ஆழிப்பேரலை மறுவாழ்வுப் பணிகளை பிரிட்டிஷ் எம்.பிக்கள் நேரில் ஆய்வு

யாழ்ப்பாணம், ஏப்.9

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளைப் பார்வையிட பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர்.

பலாலிக்கு விமான மூலம் வந்தடைந்த இவர்கள் ஹெலி மூலம் நகருக்கு வந்து யாழ்.செயலகத்தில் அதிகாரிகளைச் சந்தித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அன்ருலவ், பிரியன் பில்லி ஆகியோரே யாழ்ப்பாணம் வந்தனர். அவர்களுடன் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் காம் விஜயரத்தின, 'ராடா' நிறுவனத்தின் அதிகாரி பிரசாதன் ஆகியோரும் வந்திருந்தனர்.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடிய பிரிட்டிஷ் எம்.பிக்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காடு, வடமராட்சி பிரதேச மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

புனர்வாழ்வுத்திட்டங்கள் குறித்தும் இவர்கள் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

## உதயவாக்கு

அன்பான சில செயற்பாடுகள், அன்பான சில வார்த்தைகள் இந்த உலகத்தை தேவலோகத்தைப் போல மகிழ்ச்சிகரமாக்கிவிடும். - எட்கார் ஏ.கெஸ்ட்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள **HP Leser jat Printer 1300, Epson LQ 300+ Printer** விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- வி.பிரணவயூகன் அராலி வீதி, சங்கானை. **T.P. 0776446490,0777570236** (49173)

யாழ்.நகரில் இயங்கும் நிலையிலுள்ள அரைக்கும் ஆலை விற்பனைக்குண்டு. தொடர்பு: 771, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P.: 077 9955846** (49054)

நல்ல நிலையில் உள்ள **Panasonic** டெக், வீடியோ கசட் சிலவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்) 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். **T.P.: 077 6648751** (49159)

**LML 125cc** ஸ்கூட்டர் 18000 **km** மாத்திரம் ஓடியது. உடன் விற்பனைக்கு உண்டு. இல. 115, பொன்னம்பலம் வீதி, அரியாலை. **T.P. 0776156127** (49106)

மோட்டோ ரோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.P. 0214591750, 0602212392.** (49096)

தரமான **NO.1 Prima** பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48714)

நல்ல பாவனையில் உள்ள டீ பிறிசர் உடன் விற்பனைக்கு உண்டு. ஐஸ்கிறீம் வியாபாரிகளுக்கு உகந்தது. தொடர்பு: கனகரட்ணம், 396, மணிக்கூண்டுவீதி, யாழ்ப்பாணம். (49113)

## காணி விற்பனைக்கு

நல்ல சூழலில் விவசாயம் செய்யக்கூடியதும் குடியிருக்கக் கூடியதுமான **4½** பரப்புக்காணி திருநெல்வேலி, இராச வீதிக்கருகில் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.:** 077 3114495, 0777 286175 (49073)

நுணாவில் கிழக்கு, **A9** வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 071 4269831 (49071)

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைதியான சூழலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை). தொடர்பு: **Rajith, T.P.:** 077 6510361 (49108)

அச்சுவேலி தெற்கு, பாம்பு தூக்கியில் 6 பரப்புக் காணியும், காளி கோயிலடியில் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **0773151395, 0773151396.** (49147)

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கோணாவளை ஒழுங்கையில் **1½** பரப்பு நீள் சதுரக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு ஆ.சுந்தரலிங்கம், இல. 85, கொழும்புத்துறை ஒழுங்கை, யாழ்ப்பாணம் **T.P. 0777420240, 021 222 8005** (49010)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கிரேட்டேயன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: **New R.S.K. Farm** மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில். (49094)

## வாகனம் விற்பனைக்கு

**M.F 240 Original England Tractor** விற்பனைக்குண்டு. தொடர்பு: **0773506811** (49120)

## மைனர் கார் விற்பனைக்கு

டாக்டரின் பாவனையிலுள்ள 1 சிறி மைனர் கார் (கறுப்பு) விற்பனைக்குண்டு. 12.04.2006 இற்கு முன் தொடர்பு கொள்ளவும். **2263310** (49121)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தும் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48695)

## திருமண சேவை

அடிக்கடி வசதியாக வந்து போக முடியாதவர்க்கும் வசதியுண்டு! உள்ளகச் செயற்பாட்டால் பொருந்தி வரும்போது வேல் அமுதன் தொடர்புகொண்டு அறியத் தருவார்!! தொலைபேசித் தொடர்புக்கென ஒதுக்கப்பட்ட திங்கள், புதன், வெள்ளி நாள்களில் பிற்பகல் 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையான நேர காலத்துள் மாத்திரம் தசாப்த விழா கண்ட 'சுயதெரிவு முறை முன்னோடி' புகழ்பூத்த மூத்த திருமண ஆற்றுப்படுத்துநர் குடும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனுடன் தொடர்பு கொண்டு விவரங்களை விசாரித்தறிக. வேல்அமுதனின் நேரடித் தொலைபேசி இலக்கங்கள் 2360488, 4514396, 0602158067. (சி-48743)

## மணமகள் தேவை

**Londan Computer Science** படிக்கும், மெல்லிய, அழகிய, உயரமான, யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு **London PR** உள்ள மணமகள் தேவை. தொடர்பு: **071 3055865** (49049)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஆஸ்திரேலியாவில் **PR** உள்ள, நற்குணமுள்ள மணமகனுக்கு படித்த, அழகிய, பண்பான, 36 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: **071 3055865** (49049)

கனடாவில் பிரஜாவுரிமையுடைய, யாழ். இந்து கௌரவ குடும்பம், 1974 திருவாதிரை, மிதுனராசி, உயரம் 5'7" கிரகபாவம் 48, எலக்றிக்கல் எஞ்சினியர் மணமகனிற்கும் ஆஸ்திரேலியாவில் குடியுரிமையுடைய 1977, ஆயிலியம், கடகராசி, 1இல் செவ்வாய், 5'6" உயரம், 64 கிரகபாவம் **Soft ware Engineer** மணமகனுக்கும் பட்டதாரி, அழகான மணமகள் தேவை. தொடர்பிற்கு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.** 0776528641. (49087)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், விவாகரத்தான, 1948 ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம், மகரராசி, 5'5" உயரம், ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியருக்கும் 1940 விசாகம், விருட்சிகராசி 5'3" உயரம் விவாகரத்தானவருக்கும், கனரக வாகன சாரதிக்கும் மணமகள் தேவை. தாரமிழந்தவர், விவாகரத்தானவர் விரும்பத்தக்கது. தொடர்பிற்கு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.** 0776528641. (49087)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1954 ஆம் ஆண்டு, அத்தம், கன்னிராசி, 8இல் செவ்வாய், 39 கிரகபாவம், தாரமிழந்தவர், பிரபல வர்த்தக மணமகனிற்கு மணமகள் தேவை. விவாகரத்தானவர், தாரமிழந்த மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனாவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.** 0776528641. (49087)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1963 இல் பிறந்த, மலேசியா பிரஜாவுரிமையுள்ள, சட்ட அதிகாரி (பரிஸ்ரர்) மணமகனுக்கு (லக்கினத்து செவ்வாய்) அழகிய, 35 வயதிற்குட்பட்ட, சைவ போசன மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2845 மே/பா. உதயன். (48940)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979 பூசம், கடகராசி, 17 கிரகபாவம், உயரம் 5'4" வெள்ளைநிறம், **B.A** பட்டதாரி மணமகளுக்கும் 1979 உத்திரம் கன்னிராசி 1 இல் செவ்வாய், கிரகபாவம் 41, உயரம் 5'4" **B.Com.** பட்டதாரி மணமகளிற்கும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் உள்நாடு அல்லது வெளிநாட்டு மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், இல.11 யமுனாவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P.** 0776528641. (49087)

## வீடு வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. நாள் வாடகைக்கும் திருமண வைபவங்களிற்கும் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் வழங்கப்படும். தொடர்பு: 077 3186842 . (49059)

பருத்தித்துறையில் இரண்டு பெரிய வீடுகள் வாடகைக்குண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021222 6923, 021 226 3537 (49072)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புங்கன்குள வீதியில் (கச்சேரியில் இருந்து 300 m இற்குள்) 4 பெரிய அறைகள், வாகனத்தரிப்பிடம், நவீன முறையில் அமைக்கப்பட்ட குளியலறை, நல்ல தண்ணீர் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பிற்கு **T.P.: 021 226 3097, 0776454368** (49130)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் நல்ல நிலையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **T.P.: 222 5058** (49153)

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. மாணவர்களிற்கான (ஆண்) அறைகளும் உண்டு. தொடர்பு:10/2, புகையிரதவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (உதய நாகபூசணி ஆலயத்திற்கு அண்மையில்) **T.P.: 0779578244** (பிற்பகல் 3 மணிக்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்). (49160)

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் சகல வசதிகளுடன் 6 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு/விற்பனைக்கு உண்டு. (**NGO** விரும்பத்தக்கது) தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 021-222 5283. (44133)

சகல வசதிகளுடனும் பெரிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 115, பொன்னம்பலம் வீதி, அரியாலை. **T.P. 0776156127.** (49105)

## தவறிவிட்டது

நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஒரு பவுணும் 1/4 மஞ்சாடிக்கு கூடிவுள்ள கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: அ.ரவீந்திரன் ,50/33, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். **T.P. 077 6184490** (49139)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரழிவு நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

*தொடர்பு:-* **BIOTEC INTERNATIONAL**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
**T.P.021 4590907**
32/3, ரெயில்வே அவனியூ, கொழும்பு -05.
**T.P.0112 852269**
(46357) (21.11.14)

## வைத்திய நிலையம் இடம் மாற்றம்

முன்பு கோப்பாய் சந்தியில் நடைபெற்று வந்த சிவன் கோயிலடி முறிவு நெறிவு வைத்தியசாலை தற்பொழுது கொக்குவில் மேற்கு நீதிராசா வீதி, ஐயனார் கோயிலுக்கும் ஞான பண்டிதா பாடசாலைக்கும் இடையில் இயங்குகின்றது.

பார்வையிடும் நாள்கள் சனி, ஞாயிறு காலை 9 மணி முதல் இரவு 7 மணிவரை விசேடமாக முள்ளந்தண்டு தொடர்பான நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்படும்.

**தொடர்பு: - 0777 72 7798** **Dr. சோமசுந்தரம் விஜயன்**
(401145) (27.21.16.11)

## Gateway2uk ·Education

**Education Provider DfES, BCS, Home Study, ACCA,**

## Free Spot Admissions Seminar 02/05/2006

Meet
Mr.Graham Minshaw (International Consultant),
Mr.Kiran. Nagpure (Regional Manager Gateway2UK).

**Courses:**

- Computing & Information Systems
- Business & Management Studies
- Accounting & Finance Facilities Management
- Hospitality, Travel Management, Medical and Nursing
- ACCA, Specialist and Professional Programmes
- Engineering, Medical related courses
- Information Technology
- Accountancy & Finance
- Business & Finance
- Marketing
- Economics
- BBA, MBA
- LLB
- HND
- IMIS

- Full visa support - No visa full fees refund after deduction of hundred pounds registration fee.
- Student loan support
- Scholarships application Welcome

**For Further Information:**
Gatway 2UK Education,
1,Sycamore Avenue, South Ealing, London,
W5 4LH, UK

**Venue:** Seminar on 2/5/2006 at 10am to 4pm book your appointment in advance.

**SriLanka Office**
**M.H.Riyas**

**SKY LINE Travels & Services**
**Professional Overseas Educational Consultants**

**No.7-1/2, W.A.De Silva Mawatha,(Facing Galle Road) Colombo-06, Sri Lanka.**
**Hotline: 0773 175 767**
**Office : 0114 942 337** (சி-48764)
Mail: mohamedhanifaa_riyas@yahoo.co.uk

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஏப்.9

சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

திருச்சபை போதகர் வண.பிதா எச்.வசந்தகுமார் அடிகள் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு சாவகச்சேரி அறவழி நிலையத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-117)(26)

## செயலமர்வு

தென்மராட்சி,ஏப்.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்புகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வருடம் தரம் 8 வகுப்புகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் விஞ்ஞான பாடப் புத்தகத்தினை (பழைய பாடத் திட்டம், புதிய பாடத் திட்டம்) கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (3-117)(26)

## அகராதி வெளியீடு

யாழ்பாணம்,ஏப்.9

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் அம்பலவாணர் சண்முகலிங்கம் எழுதிய 'கணக்கீடு, வணிகக் கல்வி, பொருளியல் 'அகராதி'யின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் கலாநிதி சபா. ஜெய ராசா, கல்வியியற்துறைத் தலைவர் மா.சின்னத்தம்பி, உயர் பட்டப் படிப் புகள் பீடம் பீடாதிபதி கலாநிதி க.கந்தசாமி, யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) த. அருணகிரிராஜா, நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோரும் கலந்து கொள்வர். (3-202)(26)

## மில் வீதி சேதம்

யாழ்பாணம்,ஏப்.9

ஏழாலைப் பகுதியிலுள்ள மில்வீதி நீண்ட காலமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

ஏழாலை மற்றும் குப்பிளான் பிரதான வீதிக்கு செல்லும் இந்தப் பாதை நீண்ட காலமாக குண்டும் குழியுமாக உள்ளதால் இந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (3-7)

# 2ஆம் கட்டப் பேச்சு......?

## கூடிப்பேசிக் கலையும் பேச்சில் பயனில்லை இணக்கப்பாடு நடைமுறையில் வேண்டும்

★ அடுத்தகட்டப் பேச்சு நடைபெறுமா?
★ அடுத்தகட்டப் பேச்சில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவரா?
★ பேச்சை இடைநிறுத்துவரா?

இப்படிக் கேள்விகள் எழுகின்ற நிலையில் திருகோணமலையில் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் எழுப்பிவந்த தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அரசின் - படையினரின் - ஆசியுடன் ஒட்டுக்குழு ஒன்றினால் இப்படுகொலை அரங்கேறப்பட்டுள்ளது என்றே சகல தரப்பிலும் நம்பப்படுகின்றது.

இப்படுகொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் தமது அதிர்ச்சியையும் கடும் கண்டனத்தையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய கொலைகள் எதிர்காலப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்றும் தன்னாட்சிக்கான போரை தமிழர் ஆரம்பிப்பதற்கான அவசியத்தை இக்கொலை உணர்த்தி நிற்கின்றது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இக்கொலையால் சீற்றமடைந்துள்ள பொது அமைப்புகள் பழிக்குப் பழி தீர்க்கத் துடித்துக் கொண்டு நிற்கின்றன. கதவடைப்பு, துக்கதினம் அனுஷ்டித்து அரசின் முகத்திரையை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்த அவை தயாராகி நிற்கின்றன.

**கொந்தளிப்பு நிலை உருவாகலாம்**

இந்தக்கொலை பெரும் பதற்றமான சூழலை தமிழர் தாயகப் பிரதேசத்தில் உருவாக்கியுள்ளது. இதன் விளைவுகள் பெரும் கொந்தளிப்பு நிலையை உருவாக்கக்கூடும் என எதிர்வு கூறப்படுகின்றது.



தாயகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள தேசப்பற்றாளரின் படுகொலைச் சம்பவம்

முதலாம்கட்டப் பேச்சில் இணக்கப்பாடு கண்ட விடயங்களை அரசுத்தரப்பு நடைமுறைப்படுத்தாததன் விளைவுதான் இதுபோன்ற கொலைகள் தொடரக்காரணம் எனத் தமிழர் தரப்பு குற்றஞ்சாட்டுகின்றது.

கடந்த பெப்ரவரி 22ஆம், 23ஆம் திகதியில் ஜெனீவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் -

யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியிருந்தால் -

வடக்கு - கிழக்கில் இருந்து ஒட்டுக்குழுக்களை வெளியேற்றியிருந்தால் - நிலைமை மோசமடையாதிருந்திருக்கும்.

"அரசு இணக்கப்பாட்டில் குறிப்பிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக, கிழக்கில், வடக்கில் ஒட்டுப் படைகளுக்கு ஊக்கமளித்து அவை பகிரங்கமாகச் செயற்பட அனுமதித்துள்ளது. இதுதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம்.

"தெற்கில் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் உருவாகியுள்ள சூழலில், இந்த இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தக் கால அவகாசம் அரசுக்கு உள்ளது.

"அடுத்தகட்டப் பேச்சுக்குமுன் இந்த இணக்கப்பாட்டை அமுலாக்கி, நல்லெண்ண சமிக்ஞையை அரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ விடுக்கவேண்டும்" - இப்படி விடுதலைப் புலிகளின் தலைமை, அரசிடம் கோரிநிற்கின்றது.

**புலிகளின் செய்தி ஜனாதிபதிக்கு**

கடந்த புதன்கிழமை வன்னிவந்த நோர்வேயின் விசேட ஆலோசகர் ஜோன் ஹன்சன் போவருடன் நடத்திய பேச்சுகளின்போது மேற்கண் ட விடுதலைப் புலிகளின் தலைமையின் நிலைப்பாட்டை - செய்தியை - நோர்வே ஊடாக அரசுக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் விடுத்திருந்தார்.

2ஆம் கட்டப் பேச்சு ஜெனீவாவில் எதிர்வரும் 19ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தப் பேச்சுக்கு இன்னமும் பத்துத்தினங்கள் உள்ளன. அதற்குள் அரசு கள நிலையில் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டியது அவசியம்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தலைமையின் செய்தியுடன் கொழும்புசென்ற நோர்வேயின் விசேட ஆலோசகர், அங்கு குறுகிய விஜயம் மேற்கொண்டுவந்த நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான எரிக்சொல்ஹெய்முடன் ஜனாதிபதியை வியாழன் சந்தித்தார்.

ஜெனீவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தாததால், விடுதலைப் புலிகள் தரப்பு கொண்டுள்ள நம்பிக்கையீனத்தையும் அதிருப்தியையும் நோர்வேத் தரப்பு ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளது.

ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதால், தமது பேச்சுக்குழுவினர் கட்டுநாயக்கா ஊடாகப் பயணம்செய்யப் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லையென்றும் அதன் காரணமாக கடல்விமானம் மூலம் பயணம் செல்ல ஆலோசனை வழங்கியுள்ளனர் என்றும் நோர்வேத் தரப்பு ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியது.

இந்தச் சந்திப்பையடுத்து வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்த எரிக்சொல்ஹெய்ம், ஜனாதிபதியுடன் நடந்த பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளார்.

**சொல்ஹெய்ம் கருத்து**

இருதரப்பில் இருந்தும் வன்செயல்கள் பெரியளவில் இடம்பெறாததால் பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடக்கும் வாய்ப்பு உள்ளது என்றும்-

கட்டுநாயக்கா ஊடாக விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவினர் செல்ல முழு அளவிலான பாதுகாப்பையும் அரசு வழங்கும் என்றும் - ஜனாதிபதி உறுதி வழங்கியுள் ளார் என்றும் - சொல்ஹெய்ம் தெரிவித்துள் ளார்.

அவர் இன்னுமொரு முக்கிய கருத்தையும் அங்கு வெளியிட்டுள் ளார்.

"கூடிப்பேசி கலைந்து போகும் பேச்சாக இந்தப் பேச்சு அமையுமானால் பயன் ஏதும் இல்லை. பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கங்கள் செம்மையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகத்தான் பேச்சுக்களை யதார்த்தபூர்வமாக்கலாம்" என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது கருத்து வரவேற்கத்தக்கதுதான். பேச்சுக்களில் கண்ட இணக்கத்தை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்பதை அவர் மறைமுகமாகக் கூறியிருக்கலாம்.

உண்மையில் ஜெனீவாவில் கண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், விடுதலைப் புலிகள் வன்முறைகள் எதிலும் ஈடுபடவில்லை. மாறாக அரசும் படையினரும் ஒட்டுக்குழுக்களும்தான் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன எனக் கூறலாம்.

கிழக்கில் பொதுமக்களைக் கடத்தல், கொலைகள், போராளிகளின் நிலைகள் மீது தாக்குதல்கள் என்றும்-

வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் படையினரின் தேடுதல்கள், ஆள்கடத்தல், இராணுவ நெருக்குவாரங்கள் என்றும் - வன்முறைகளை அரசு தான் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

அடிக்கடி படைத்தளபதிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள் என தாயகப்பகுதியில் உள்ள முகாம்களுக்குச் சென்று, படையினருக்கு உற்சாகம் வழங்கியும் -

**யுத்த நிலையை உருவாக்கும் படைகள்**

வேவுவிமானம், 'சீ-பிளேன்', ஹெலிகளின் நடமாட்டங்களை அதிகரித்தும் - மக்களை ஒரு பீதி நிலையில் - யுத்தநிலையில் - வைத்திருக்க படைத்தரப்பு முயன்று வருகின்றது என விடுதலைப்புலிகள் கூறுகின்றனர்.



நெருக்கடி நிலை உச்சமடையக் காரணமாக இருப்பவர்கள் படை யினரும் ஒட்டுக்குழுக்களும் என்றும் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தநிலையில் - இத்தகைய நெருக்கடி நிலைக்கு அடுத்த பத்து நாள்களில் - பேச்சு ஆரம்பிக்கும் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த உருப்படியான நடவடிக்கைகளை எடுத்தேயாகவேண்டும்.

திருகோணமலையில் விக்னேஸ்வரனின் கொலையின் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தியும் -

ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகளை முழுமையாக முடக்கியும் -

போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணி மேற்கொள்ள வழியை ஏற்படுத்தியும் -

**வாராந்த அரசியல் அலசல் - இகோ**

ஜனாதிபதி மஹிந்த நல்லெண்ணச் சமிக்ஞைகளை வெளிக்காட்டினால் அடுத்த கட்டப் பேச்சு - அடுத்த கட்ட நகர்வு - சீராக முன்னெடுக்கப்படும். இல்லையேல் விடுதலைப்புலிகள் பேச்சை இடைநிறுத்தலாம் அல்லது கால அவகாசம் ஒன்றை விதிக்கலாம்.

இந்நிலை ஏற்படுவதைத் தவிர்க்க அரசு விரைந்து செயற் படவேண்டும். அதுவே இன்று அவசியமும் அவசரமுமான தேவையாகும்.

**மக்களைத் துயில் எழுப்பும் கொள்ளையர்கள்**

இந்தச் சூழலில் -

குடாநாட்டில் இரவுநேரத்தில் தொடரும் களவுகள் மக்களைத் திகில் அடையவைத்துள்ளன.

அண்மைய நாள்களாக கேட்பார் யாருமின்றி மக்களை அச்சுறுத்தி கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வாள், கத்தி, பொல்லுகள் சகிதம் இரவு நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து உறக்கத்தில் இருப்பவர்களைத் தட்டி எழுப்பித் தமது கைவரிசையைக் காட்டும் குழுவால் மக்கள் நிம்மதியிழந்துள்ளனர்.

வீடுகளின் கதவைத் திறக்க மறுக்கும் போது வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை, வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்தும் சேதப்படுத்தும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

மக்களை அச்சுறுத்தும் இக்குழுவை சட்டத்தின் முன்நிறுத்த சட்டம், ஒழுங்கைப் பேணுபவர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாதா? என்று மக்கள் கேட்கின்றனர்.

இரவு முழுவதும் நித்திரையின்றி அவலப்படும் மக்கள் தமக்குத் தீர்வு கிட்டாதா என ஏங்குகின்றனர். கொள்ளைகளை முறியடிக்கும் நோக்கில் செயற்படும் விழிப்புக் குழுக்களைக் கூட இக்கொள்ளைக் குழு விட்டு வைக்கவில்லையாம். அவர்களையும் இக்கொள்ளைக் குழு தாக்குகின்றதாம்.

அச்சநிலைக்குத் தீர்வு கிட்டாதா என ஏங்கும் மக்களுக்கு சட்டம், ஒழுங்கை, கலாசாரத்தைப் பேணும் குழுவினர் உதவமாட்டார்களா என்ற ஏக்கம் மக்கள் மனங்களில் உருவாகியுள்ளது. ★

(33)

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை:- **கணனி நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்பாளர்**
**Computer Programmer**
தகைமை:- BIT கற்கை நெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணனிக் கல்வியில் பொது/சிறப்புப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
கணனி நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்புக் கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும், இரண்டு (02) வருட பட்டறிவும் உடையவராக இருத்தல்வேண்டும்.
ஊதியம்:- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நேரில் வருகை தரவேண்டிய காலம்:-2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை காலை 9 மணி.

02. பணிநிலை :- **தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
தகைமை :- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (NDT)
அல்லது
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
பட வரைஞர் DRAUGHTMEN SHIP
ஊதியம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அகவை :- 24 ஆண்டுகளுக்கு மேல்.
நேரில் வருகை தரவேண்டிய காலம் :- 2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணி.

03. பணிநிலை:- **வேலை மேற்பார்வையாளர் தரம் - 03**
தகைமைகள்:- க.பொ.த. சாதாரண தரத்தில் ஐந்து (05) பாடங்களில் ஒரேஅமர்வில் சித்தியடைந்திருப்பதுடன், கட்டுமானத் துறையில் வேலை மேற்பார்வையாளர் பணியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல்வேண்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 3,670 - 5,070 + 6,000 + 1,200
70 X 20
அகவை எல்லை:- 25-40 ஆண்டுகள்.
நேரில் வருகை தரவேண்டிய காலம் :- 2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை மு.ப. 11 மணி.

04. பணிநிலை:- **அலுவலக உதவியாளர் தரம் - 03**
தகைமைகள்:- I. க.பொ.த (சாதாரண தர) தேர்வில் கணிதம் (42/ கணிதம் II), தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும்.
II. ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 2,870 - 4,070 + 6,000 + 1,200
60 X 20
அகவை எல்லை:- 18-25 ஆண்டுகள்
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணி.

05. பணிநிலை:- **அலுவலக உதவியாளர் தரம் - 04**
தகைமைகள்:- I. க.பொ.த (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
II.ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 1,870 - 2,870 + 6,000 + 1,200
50 X 20
அகவை எல்லை:- 18-25 ஆண்டுகள்.
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி.

06. பணிநிலை:- **ஊர்தி ஓட்டுநர் தரம் - 03**
தகைமைகள்:- I. க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்வேண்டும்.
II. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல்வேண்டும்.
III. ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 3,310 - 4,510 + 6,000 + 1,200
60 X 20
அகவை எல்லை:- 25-35 ஆண்டுகள்.
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணி.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் ஆக்கப்பட்ட தன்விளக்கத்துடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் தமிழீழ வைப்பகம், நடுவப்பணியகம், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
02. பட்டறிவுச் சான்றிதழ்.
03. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
04. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.
05. நற்சான்றிதழ்.

**மனிதவள மேலாளர்,**
**மனிவளப் பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி/48750)(32-17-16)

### ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை பஞ்சரதப் பவனி

காரைநகர்,ஏப்.9

காரைநகர் ஈழத்துச்சிதம்பர பங்குனி மகோற்சவ பஞ்சரத பவனி நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணி முதல் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும்தொடர்ந்து காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று சோமாஸ்கந்தர் தமது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வருதல் இடம்பெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நடேசர் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

இதேவேளை- இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு பெரிய சப்பரமும் தொடர்ந்து விஷேட மேளக்கச்சேரி, கலைநிகழ்வுகள் மற்றும் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் உள்ள அறப்பணி நிலையம், அன்னதான சபை என்பவற்றில் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருவதுடன், யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.

(எ-73)(32)

### யாழ்.ஆஸ்பத்திரியில் தொண்டர்கள் பணியில்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக, தொண்டர் நிறுவனங்களில் இருந்து தொண்டர்கள் தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் ஆண்கள், பெண்கள் உட்பட 12 பேரும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவைச் சேர்ந்த 25 பேருமாக மொத்தம் 37 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வார முற்பகுதியில் இருந்து கடமையை மேற்கொண்டுள்ள தொண்டர்களைத் தொடர்ந்து மேலும் சில தொண்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என தொண்டர் நிறுவனங்களில் இருந்து அறியப்படுகிறது. (எ-15)(32)

## ஆறாத்துயரில் ஓராண்டு

மண்ணில் 16 * 08 * 1981



விண்ணில் 09 * 04 * 2005


### ஞானசேகரம் ஜயந்தன்

என் வயிற்றில் உதித்த
முதல் முத்தே!
உன் இழப்பால் உன்
தங்கைமார் இருவரும்
துடியாய் துடிக்கின்றனர்
மீண்டும் நீ எமது
குடும்பத்தில் வந்து உதிப்பாயாக!

புத்தூர். (49093) (23-32-16-17) ஞா.சர்வேஸ்வரி (தாய்).


சுயதொழில் பயிற்சி
ஸ்கிரீன் மற்றும் துணிகளில் பிரிண்டிங் பயிற்சி
வவுனியாவில்... அரிய சந்தர்ப்பம் !!

தைத்த ஆடைகள் மற்றும் துணிகளில் கோல்ட், கிலிட்டர், எம்போஸ், நோமல், பேர்ல், 4 கலர் போட்டோ மற்றும் விசிட்டிங்கார்ட், அழைப்பிதழ்கள், கலண்டர், ஸ்டிக்கர்கள் இன்னும் பல... குறைந்த முதலீட்டில் இலகு முறையில் 2 நாட்களில்....



தென்னிந்திய அர்ச்சனா அக்கடமியின் சான்றிதழ் உடன் வழங்கப்படும்.
காலம் : 2006 ஏப்ரல் 26, 27 (புதன், வியாழன்)
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
Archanah Academy / பிரவீணண் என்ரபிரைசஸ் 35 / 1, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
T.P. No. 024 4589707; 0777 767827
GL Media



வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சி மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை.
தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலை தடுக்கும். சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும்.
உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.
சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.
எடுப்பான கம்பீரமான தோற்றத்தை தரும்.

வேகமான செயற்திறன் மிக்க
மகா கினிராஜ தைலம்
சகல வாத நோய்களுக்கும், எரிவு, தகர்வு, வீக்கம், கடுப்பு, இடுப்புவலி, கைகால் விறைத்தல், மூட்டுவலி, நரம்பு வலிகள், தசை பிடிப்பு, குதிகால் வலி போன்றவற்றையும், தலைவலி, தடுமல் ஜலதோசம், மூக்கடைப்பு, தொடர் தும்மல், காதுவலி, பல்வலி, இளைப்பு, கன்னங்கட்டி போன்ற சரீரத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏற்படும் எந்தவொரு நோயையும் துரிதமாகக் குணமாக்குவதுடன், உடல் ரீதியான மற்றும் உளரீதியான சுகமளித்து உடலுக்கு புத்துயிரளிக்கும்.
நாட்டுமருந்துக் கடைகளிலும், பாமர்ஸிகளிலும் கிடைக்கும்.
(வெளிப்பூச்சுக்கு மட்டும்)

சஞ்சீவக்க
ஆயுர்வேத பற்பொடி
பல்வலி, முரசு கரைதல், இரத்தம் வடிதல், பல்ஆட்டம் காணுதல், மரத்துப்போதல், காவி படிதல், வாய் நாற்றம், பற்சூத்தை முதலிய உபாதைகளை விலக்கி பற்களை உறுதியாகப் பேணி வாயை நறுமணம் கமழ வைக்கும் அதேவேளை முத்துக்கள் போன்று பற்களை வெண்மை கொண்டதாக்கி முகத்துக்கு பொலிவைத் தரும்.

தயாரிப்பு:
சஞ்சீவக்க ஆயுர்வேத தயாரிப்பு,
152, சீ. .'.பாம்குரோவ் தோட்டம்,
பத்தலகெதர, வெயான்கொடை, ஸ்ரீலங்கா.
தொ.பே: 033-2287567 ஆயு.உ. 231
பெக்ஸ்: 033-2288288

மொத்த விற்பனை பிரதிநிதி:

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021--2222567

இராசையா மருந்துக்கடை,
202, பஜார் வீதி,
வவுனியா
தொ.பே: 4589727

(சி/487722)

# பாகிஸ்தானில் புஷ்ஷிற்கு கொடுக்காத ராஜமரியாதை மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டது ஏன்?



ஒரு தேசம் தனது வெளியுறவுக் கொள்கையினை மனம் போன படி பின்பற்றவும் முடியாது அதை நாம் மனம்போனபடி ஆராயவும் முடியாது.

வெளியுறவுக் கொள்கையில் இலங்கைக்கென்று தெளிவான வரையறைகள் உண்டு. அது நீளக்கயிற்றில் மேய்ந்தாலும் அதன் கழுத்துப் பிடியில் கயிறிறுக்கும். பாகிஸ்தான் நோக்கிய இலங்கையின் அடியெடுப்பும் அப்படித்தான்.

மாடு நீளக்கயிற்றில் மேயலாம். ஆனாலும் அது கட்டையைச் சுற்றித்தான் ஆகவேண்டும். ஆனபடியால்தான் ஜனாதிபதி ராஜபக்ஷ தான் பாகிஸ்தான் சென்று வந்ததும் அதை விளக்க புதுடில்லிக்கு ஒரு குழுவையும் தனது வெளிவிவகார அமைச்சரையும் அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

வெளியுறவுக் கொள்கை செயற்படும் விதம் மிகவும் கவனத்திற்குரியது. இதன் செயற்பாட்டு விதிகள் ஆழ்ந்த கவனத்திற்குரியவை.

கயிற்றுக் கட்டில் மேயும் மாட்டுக்கு மேய முடியுமேயாயினும் கயிற்றின் நீளத்தின் அளவுக்கே அதற்குச் சுதந்திரமுண்டு. மாடு தன் கால், கழுத்து என்பவற்றின் நீட்டுக்கேற்ப விளிம்பில் உன்னிச் சிறிது தூரத்தை நீட்ட முடியுமேயாயினும் அத்தகைய நீட்டம் சில வேளைகளில் மாட்டை மேலும் உள்ளுக்கிழுத்துக்கட்ட வழிவகுத்துவிடும்.

**அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு**

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தன் கயிற்றை மீறிக் கழுத்தை நீட்டினார். அதன் விளைவாக அவர் இந்திய இராணுவத்தை வலிந்தணைக்க நேர்ந்தது. பார்வைக்கு எதிர்மறையாகத் தோன்றும் ஒன்று செயலில் தன்மறையாகிவிடும். சிலவேளைகளில் எதிர்மறைகள்தான் தன்மறையைப் பலப்படுத்தும். ராஜபக்ஷவின் பாகிஸ்தானிய உறவை நாம் அப்படி விளக்க முடியும்.

சமூக விஞ்ஞானத்தின் ஆய்வுகூடம் வரலாறுதான். எனவே, வரலாற்று விதிகளை நாம் சரிவர எடைபோட்டு அவற்றால் இவற்றை நாம் அளந்து பார்க்கவேண்டும். தர்க்க பூர்வ விதிகளுக்கூடாக எதிர்காலத்தை நாம் கணிக்கவேண்டுமேதவிர கன்னா பின்னா என்று எதிர்காலத்தை ஓர் ஊகப் பொதியாக்கிவிடக்கூடாது. ஒவ்வொரு செயலுக்குமுரிய வீச்சையும் விதியையும் கண்டுவிளக்குவது சமூக விஞ்ஞானத்தின் தலையாய பணியாகும்.

### ராஜபக்ஷ பாகிஸ்தானுக்கு ரணில் இந்தியாவுக்கு

உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜே.வி.பியின் படுதோல்வி, ராஜபக்ஷவின் பாகிஸ்தானிய விஜயம், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் ஜனாதிபதியின் பாகிஸ்தானுக்கான விஜயத்தை விளக்க ஜனாதிபதியின் இந்திய விஜயக் குழு என்பனவெல்லாம் உடனெடுத்த நிகழ்வுகளாகும்.

சுதந்திரக்கட்சியின் இரைப்பைக்குள் 'இடதுசாரிகள்' ஜீரணிக்கப்படும் விதியின் புதிய கட்டமாய் ஜே.வி.பியின் தோல்வி அமைவது எப்படி ஒரு வரலாற்று விதியை விளக்கி நிற்கின்றதோ அப்படியே ராஜபக்ஷவின் பாகிஸ்தானிய விஜயத்திற்குச் சமாந்தரமாக ரணிலின் இந்திய விஜயமும், ராஜபக்ஷவின் இந்தியத் தூதுக்குழுவின் விஜயமும் இலங்கைக்கான வெளியுறவுக் கொள்கை விதியின் கடினத்தை விளக்கி நிற்கின்றது.

இத்தகைய விதிப்போக்கின் பின்னணியில் பாகிஸ்தானுக்கான ராஜபக்ஷவின் விஜயத்தின் எதிர்காலம் அரசிற் போக்கிற்கான விளைவுகளை நாம் ஆராய்வோம். ராஜபக்ஷவின் பாகிஸ்தானிய விஜயமும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிற்குக் கொடுக்காதளவு இராஜமரியாதையை ராஜபக்ஷவுக்கு பாகிஸ்தானிய அரசு கொடுத்துள்ளமை இந்திய அரசியலின் இதயத்துடிப்பில் நொதியங்களைத் தூவியுள்ளது.

இந்திய தேசியமானது அதன் உள்ளார்ந்த சக்திகளினால் கட்டி வளர்க்கப்பட்டுள்ளதை விடவும் பாகிஸ்தானிய எதிர்ப்பு, சீன எதிர்ப்பு எனும் நாளங்களால் அதிகம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. "பாகிஸ்தானிய ஆபத்து", "சீன ஆபத்து" என்ற மந்திர சொற்களுக்குள் இந்திய ஜனத்திரள் கட்டுப்பட்டு விடுகிறது. அது தன்னகத்தேயான அனைத்து இன, மொழி, சாதி பிரதேச வேறுபாடுகளையும் மறந்து ஒரு கோட்டில் நின்று விடுகின்றது.

இலங்கைத்தீவு தொடர்பான இந்தியாவுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்புப் பற்றி அச்சத்தை இந்திய ஆளும் குழாம் தூக்கி முன்னிறுத்த ராஜபக்ஷவின் பாகிஸ்தானிய விஜயமும் அதில் பாகிஸ்தான் நடந்துகொண்ட விதங்களும் இந்தியாவிற்கு இப்போதைக்குப் போதும். இது தமிழகம் தழுவிய பரந்த இந்திய தேசியத்தை ஒரு நிலைப்படுத்தவும் இலங்கை விவகாரத்தில் பாதுகாப்பு கொள்கையின் பெயரால் ஆளும் குழாம் தனக்கு வசதியான கொள்கையை வகுக்கவும் உதவும்.

### புதுடில்லிக்கு சங்கடம்

அதேவேளை, எதிர்க்கணிய வழியில் இன்னோர் அனுகூலமும் இந்தியாவிற்கு உண்டு. இப்போது தமிழக அரசியலானது கொழும்பிற்கு புதுடில்லி ஆயுத, இராணுவ உதவிகள் அளிப்பதை எதிர்த்து வருகிறது. அதை மீறி ஆயுத உதவி அளிப்பது புதுடில்லிக்கு ஒரு சங்கடமான நிலையாகும்.

ஆதலால் ராஜபக்ஷ அரசுக்கு பயங்கரவாத எதிர்ப்பின் பேரால் இஸ்லாமபாத் ஆயுத உதவி அளிப்பது புதுடில்லியின் அடிப்படை நோக்கத்திற்கு சாதகமாகும். அதாவது பாகிஸ்தான் புலிக்கெதிராக இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகள் புரிவதை உள்ளூர இந்திய மத்திய அரசு விரும்புகிறது. அதேவேளை அத்தகைய இராணுவ உதவியானது கொழும்புக்கு படை உதவி என்ற பரிமாணத்தை எட்ட இந்தியா அனுமதிக்காது.

## அமைதித் தீர்வுக்குத் தயாரானால் ராஜபக்ஷ கிளிநொச்சிக்குப் போகவேண்டும்

இதில் மேற்படி விரும்பார்ந்த கணிப்பீடுகளுக்கு அப்பால் இந்தியாவிற்கு கவலையளிக்கவல்ல ஒரு தர்க்க பூர்வ வளர்ச்சிப் போக்குக்கு வாய்ப்பிருக்கிறது. அதாவது பாகிஸ்தான் இலங்கை அரசுக்கு எவ்வளவுதான் இராணுவரீதியில் உதவினாலும் ஓர் எல்லைக்கப்பால் இலங்கையின் பெயரால் இந்தியாவுடன் ஒரு யுத்தத்தில் ஈடுபடுவதை பாகிஸ்தானிய அரச நலன்களும் பாகிஸ்தானிய அரசியற் பொருளாதாரமும் இடமளிக்காது. இதன்படி பார்க்கையில் இலங்கைக்கு பாகிஸ்தான் படைஉதவி அளிக்குமாயின் அது இந்தியாவுடன் போர்ப் பிரகடனம் செய்வதற்குச் சமமானது. ஆதலால் இந்தியாவைமீறி பாகிஸ்தான் தன் எண்ணப்படி படை இறக்கல் உதவியை இலங்கைக்கு செய்ய வாய்ப்பில்லை.

இது இந்தியாவுக்கு தெரியும். பாகிஸ்தானுக்கும்தெரியும். ஆனால், இதில் ஒரு விநோதமான வாய்ப்பிருப்பது தான் இதிலுள்ள பிரச்சினை. பாகிஸ்தான் இலங்கை அரசுக்கு இராணுவத்தளபாட ரீதியிலும் நிபுணத்துவப் பரிமாற்றல் ரீதியிலும் தொடர்ந்து ஆதரவளித்து வருதல் வளர்ச்சியடைவதன் பின்னணியில் பாகிஸ்தானின் பாரம்பரிய நண்பனான சீனா, பாகிஸ்தானுடனான தொடர் சங்கிலியில் தன்னையும் இணைத்துக் கொள்ளுமிடத்து நிலைமை கைகடந்தாகிவிடும். இது தவிர்க்க முடியாத தர்க்க பூர்வ வளர்ச்சிப் போக்காகும்.

இந்தவகையில் இந்த தர்க்கபூர்வப் போக்கு வளர்ச்சியடையும் நிலைமைக்கேற்ப இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிகம் அதிகம் கரிசனை செலுத்தும்; இலங்கைத்தீவில் பாகிஸ்தான், சீனா என்பன படையிறக்கக்கூடிய ஒரு நிலை தோன்றுமிடத்து இந்தியா வாழ்வா சாவாப் போராட்டத்தில் ஈடுபடவே முனையும். இலங்கை விவகாரத்தில் இந்தியாவுடன் ஒரு யுத்தத்திற்குப் போக சீனாவும் இன்றைய நிலையில் விரும்பாது.

சீனா தன்னை பொருளாதார ரீதியில் மேலும் பலப்படுத்த யுத்தமற்ற இன்னொரு பத்தாண்டு அதற்குத் தேவைப்படுகின்றது. எனவே இலங்கைக்காக இன்னொரு யுத்தத்திற்கு இந்தியாவுடன் போகச் சீனா தயாரில்லை. அதேவேளை வளர்ச்சிப் போக்கில் வாய்ப்புக்கள் துலாம்பரமாக இருந்தால் சீனா வாழாவெட்டியாய் இருக்குமென்றுமில்லை. ஆதலால் இப்போது ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிப் போக்கைக் கண்டு இந்தியா பார்த்துக்கொண்டிருக்கவும் மாட்டாது.

## இலங்கையில் பாகிஸ்தானின் வளர்ச்சி மறுவளம் அது இந்தியாவின் வளர்ச்சியே!

அடுத்து இதற்கான வளர்ச்சி நிலை இலங்கைக்குள் முற்றாக்கூடிய இதன் அகரீதியான தர்க்கபூர்வ வளர்ச்சிகளை அவதானிப்போம்.

பாகிஸ்தானிய, சீன உதவிகள் தமக்கு பலமூட்டுமென்ற எண்ணம் ஏற்கெனவே சிங்கள இராணுவத்தினரிடம் உண்டு. ராஜபக்ஷவின் விஜயத்தின் போதான பாகிஸ்தானின் ஆதரவு சிங்கள இராணுவத்தினரின் மனோநிலையைப் பல மடங்கு முன்னுக்கு உந்தித் தள்ளும். இதனால் இராணுவம் தனது அடாவடித்தனத்தை விருப்பார்வத்துடன் கட்டவிழ்த்துவிட முடியும். இது நிலமைகளை அதிகம் அதிகம் சீரழிக்கும். புலிகள் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்பதால் அவர்கள் பொறுமை காப்பதும் ஓரெல்லைக்கப்பால் கடினமாகிவிடும். மேற்படி தர்க்கங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று தொடர் வளர்ச்சி அடைவதால் குறைந்தபட்சம் அடுத்த ஆண்டு யுத்தாண்டாக அமைவதற்கேற்ற நிலைகளே வளர்ந்துசெல்கின்றன.

### தமக்குள் ஐக்கியப்படாதவன் எதிரிகளிடம் சரணடைகிறான்

ராஜபக்ஷ சமாதானத் தீர்வுத் தயாரென்றால் அவர் புதுடில்லி போவதை விடுத்து, இஸ்லாமாபாத் போவதைவிடுத்து கிளிநொச்சி போக வேண்டும். கிளிநொச்சியை அணைக்கத் தயாரில்லாத கொழும்பின் எந்தொரு அணுகுமுறையும், ஒரு யுத்த அணுகுமுறைதான். தன்னை நெறிப்படுத்தாதவன் பிறரிடம் தஞ்சமடைகிறான். தமக்குள் ஐக்கியப்படாதவன் எதிரிகளிடம் சரணடைகிறான்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை அது எப்பொழுதும் இலங்கை அரசின் ஆதரவாளர். அரசாங்கங்கள் எது இருப்பினும் அதற்குப் பிரச்சினை இல்லை. சீனாவைப் பொறுத்தவரையில் அது முதலாவது அர்த்தத்தில் இலங்கை அரசின் ஆதரவாளர்தான். ஆனால் அதற்கு அரசாங்கங்கள் பற்றிய தெரிவுண்டு. ஐ.தே.க. அரசாங்கமாயினும் சீனா பதவியில் இருக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும். ஆனால் ஐ.தே.க. அரசாங்கமா அன்றி சுதந்திரக்கட்சி அரசாங்கமா என்று கேட்டால் சீனாவின் தெரிவு சு.க. அரசாங்கம் தான். அதேவேளை சுதந்திரக்கட்சி அரசாங்கமா அல்லது ஜே.வி.பி. அரசாங்கமா என்று கேட்டால் சந்தேகமின்றி அது ஜே.வி.பி. அரசாங்கத்தைத் தான் தன் தலையாய தெரிவாகக்கொள்ளும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலுக்கு முன்பு ராஜபக்ஷ விடம் சீனா பொறுத்து ஒரு மெல்லிய கவலையிருக்க வாய்ப்பிருந்தது, ஜே.வி.பி. அரசாங்கம் அமைக்கக்கூடிய நிலையை நோக்கி வெற்றிமுகம் கொள்ளுமிடத்து சீனா ஜே.வி.பியை நோக்கி தனது சிந்தனைகளை மையப்படுத்திவிடும் என்றும் இறுதியில் ஜே.வி.பி. அரசாங்கம் அமைய சீனாவின் பங்களிப்பும் வழிவகுத்துவிடும் என்றும் ராஜபக்ஷ அரசாங்கம் தான் சீனாவின் முற்றுமுழுதுமான தெரிவாகி விட்டது. இது ராஜபஷவிற்கு நிறைவளிக்கும் விடயம் என்பதுடன் புதிய அரசியல் முனைப்புக்களுக்கும் வழிவகுக்கப் போகின்றது. ஆதலால் தீர்வுகாணுதலுக்கு எதிரான நிலைமைகள் வளர்ச்சி அடைவதற்கும் யுத்தசூழல் முற்றுவதற்குமான முகாந்திரங்களே வளர்ந்து செல்கின்றன.

ஜே.வி.பி. படுதோல்வி அடைந்தமையானது கொழும்பின் சக்திச் சமநிலைகளை மாற்றிவிட்டது. இது பிரச்சினைகளை இன்னொரு பக்கம் தள்ளி நிலைமைகளை வேறுவிதமாகக் குழப்பப்போகின்றது. ஜே.வி.பியின் தோல்வியுடன் அமெரிக்கா, இந்தியா, சீனா என்பன இலங்கை பற்றிய தமது அணுகுமுறையில் மாற்றங்களைக் கைக்கொள்ளும் அதேவேளை, உள்நாட்டு ரீதியில் பார்த்தால் ஜே.வி.பி. பதவிக்கு வரக்கூடிய அச்சநிலைகாரணமாக சு.கவும், ஐ.தே.கவும் ஒன்றுபடக்கூடியதாயிருந்த நிலை தளர்ந்து போய்விடும்.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் நிலையில் நின்று பார்த்தால், ஜே.வி.பி. அவர்களுக்கு ஓர் எதிர்மறை ஆசான் என்ற நிலையில் இருந்தது. அதாவது மாசேதுங் தனது எதிர்மறை ஆசான் சியாங்காய செக் என்று வர்ணித்தது போல புலிகளின் எதிர்மறை ஆசானாய் ஜே.வி.பி. விளங்கியது. அதாவது தமிழீழக் கோரிக்கையின் எதிர்மறை ஆசான் ஜே.வி.பி. என்ற நிலை இருந்தது. இதில் ஜே.வி.பியின் பாத்திரம் தன் பலத்தை இழந்தபோதிலும் இதில் புலிகளுக்கான வாய்ப்பு வேறொரு விதத்தில் அரங்கத்திற்கு வந்துள்ளது.

அதாவது ராஜபக்ஷ தீர்வு காணவேண்டியதற்கான நேரடிப் பொறுப்பிற்கு உள்ளாகிவிட்டார். அவர் ஒருபோதும் தீர்வுகாணக்கூடிய நடைமுறையையும் விருப்பத்தையும் கொண்டவரல்ல. எனவே, தீர்வு காணற்பொருட்டு புலிகளால் அவருக்கு கொடுக்கப்படும் சந்தர்ப்பமானது அவரை முழு அளவில் அம்பலப்படுத்திவிடும். தற்போது உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் மூலம் ஜே.வி.பி.,



ஹெல உறுமயவின் படுதோல்விகளும், ராஷ்பக்ஷ அலையும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய சூழலைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய அலையின் பின்னணியில் ராஜபக்ஷவின் கையில் தீர்வை நோக்கிய நகர்வுகளுக்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது. இந்த அலையின் வேகத்திற்கேற்ப புதிய நகர்வுகள் எதனையும் ராஜபக்ஷ இப்போது மேற்கொள்வதாய் தெரியவில்லை. ஆதலால் தமிழீழ போராட்டத்திற்கான இன்னொரு கதவு திறப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். அதாவது ஐ.தே.கவையோ அன்றி சு.கவையோ எதுவாயினும் சிங்கள ஆட்சியாளர் ஒருபோதும் தீர்வு காணும் சித்தமற்றவர்கள் என்பதே அது. தீர்வு காணும் சித்தமிருந்தால் ராஜபக்ஷ இந்த அலையோடு நாடாளுமன்றத்தைக் கலைத்து தன்னை தீர்வின் பொருட்டு பலப்படுத்த இந்த உடனடி நிலை வழிவகுக்கும்.

ஆனால், அவர் அதில் நாட்டம் காட்டுவதாய் தெரியவில்லை. அதாவது, நாடளாவிய உளவியலில் ஜே.வி.பி. தோல்வி அடைந்திருக்கும் பின்னணியில், எதிர்க்கட்சியும் பலவீனமடைந்தமை மட்டுமல்ல தலைமைத்துவப் பிரச்சினையால் பிளவுண்டிருக்கும் பின்னணியில் ராஜபக்ஷ மேலும் உறுதியான வெற்றிகளைப் பெற்று ஏகத்தலைவன், தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் தீர்வு காணக்கூடிய வாய்ப்புண்டு. அதற்கு அவர் இப்போது உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பது வாய்ப்பளிக்கும். சிலமாதங்கள் தாமதித்தாலே ஜே.வி.பி, ஐ.தே.க. பொறுத்து நிலைமை விருத்தியடைந்துவிட முடியும். ஆதலால் இப்போது நாடாளுமன்றத்தை கலைக்கவில்லையெனில், ராஜபக்ஷ தீர்வுக்கு ஒருபோதும் தயாரில்லை என்பதே பொருள்.

இப்பின்னணியில் நின்று பார்க்கையில் ராஜபக்ஷவிற்கு இப்போது ஏற்பட்டிருக்கும் வாய்ப்பு அவர் தன்னை அம்பலப்படுத்தவே உதவப்போகின்றது. இந்நிலை தொடருமிடத்து ராஜபக்ஷ அம்பலப்பட ஒரு குறுங்காலம் போதுமானது. இந்த வகையில் ஜே.வி.பி யின் தோல்வி இன்னொரு விதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாக புதியதோர் அத்தியாயத்தைத்திறந்துவிட்டுள்ளது.

(33-27-1[illegible])

## தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆறு மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்து தேர்தல்கள் ஆணையாளர் விடுத்த வர்த்தமானி அறிவிப்பை ஆட்சேபித்து, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

காத்தான்குடி நகரசபைக்குப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த சுயேச்சைக் குழு ஒன்றின் வேட்பாளர்கள் இருவரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

சாகுல் ஹமீட் முகமட், ஓமர் லெப்பை முஹமட் தெளபீக் ஆகிய இருவரே மனுதாரர்களாவர். (க)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக ராஜபக்ஷ

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நேற்று முன்தினம் மகரகமையில் இடம்பெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பதில் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை இக்குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்மொழிய தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் தி.மு.ஜயரத்ன வழிமொழிய ஜனாதிபதி பதில் தலைவராகப் போட்டியின்றித் தெரிவானார்.

முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு வெளிநாடு செல்வதற்கு முன்னர் கட்சியின் பதில் தலைவராக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை நியமித்து இருந்தமை தெரிந்ததே.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அமைச்சர்கள் சந்திரிகாவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இந்நிலையில் மஹிந்த பதில் தலைவராகியிருக்கின்றார். (க)


## 2 ஆம் ஆண்டு நெஞ்சம் நெகிழும் நினைவலைகள்

இன்பத்தின் நிறைவாய்
10 - 09 - 1983

துயரத்தின் இமயமாய்
01 - 04 - 2004



### செல்வன் தெய்வேந்திரம் வசீந்திரன் (வசி)

திதி: வளர்பிறை ஏகாதசி (09-04-2006)

(மு/மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவன்)

*கானமயிலாட கார் முகில்கள் திரண்டு நிற்க*
*வானம் மலர்தூவி புவி அன்னை நனைந்த வேளை*
*பொல்லா வான்வெளியில் பொல்லாங்கு நிகழ்ந்துவோ*
*பேரிடியாய் அனல் மின்னல் நம் மகிழ்வை நசுக்கியதோ!*
*நம் உறவுப்பூங்காவில் நறுமனம் வீசிய புது மொட்டே*
*வசி என்று வாய் நிறைய நாம் அழைத்த செல்வமே!*
*முற்றாத உன்வாழ்வ நம் முற்றத்தில் முழுவதுமாய்-*
*உதிர்ந்து சருகாகி கணப்பொழுதில் மறைந்ததுவோ!*

**உமது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நி.முகவரி: ஐயனார் கோயில் வீதி, கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை,
த.முகவரி: நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

என்றும் உமது நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(48955)(26.11)



## பதினெட்டாம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்
18 - 12 - 1922

மறைவு
28 - 03 - 1988



அமரர்

### வ.வ.கயிலாசபிள்ளை (V.V.K.)

(முன்னாள் கொக்குவில், கோண்டாவில் கிராமசபை 14ஆம் வட்டார உறுப்பினர்)

திதி: 09-04-2006

சிந்தைகள் நெகிழ்ந்திட சென்றது எங்கே!
நொந்து தினம்வாடி நலிவிழந்தோம் இங்கே!
தந்தையே! உனையிழந்து திவஷங்கள் மூவாறாச்சோ!
வந்தனை செய்துனை வாழ்வினில் மறவோமே!

'கமலாம்பிகை பவனம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (49075)(26.11.16)

-குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11 - 02 - 1924

மறைவு
10 - 03 - 2006



### அமரர் ஆறுமுகம் பொன்னையா

(இளைப்பாறிய அதிபர்)

10-03-2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் பெரிய தந்தையாரின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (09-04-2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும் மதியபோசனத்தில் பங்குகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தா.புஸ்பராணி,
'பொன்கற்பகவாசா'
அல்வாய் மேற்கு, திக்கம் (48844)(26.11)

தகவல்:
K.சந்திரன்
(பெறாமகன்).






எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Sole Agents
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

(அ/48719)


## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஏப்.9

தவக்காலத்தின் புனிதவார்த்தையொட்டி 'பரிசுத்த வார ஆயத்தங்களும் விளக்க உரைகளும்' என்னும் நூலை யாழ்.திருவழியாட்டு நிலையத்தினர் வெளியிட்டுள்ளனர்.

புனித வார சடங்குகளுக்கான ஆயத்தங்கள் இறைவார்த்தைகள் அடங்கிய இந்நூலை திருவழிபாட்டு நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-30)

## கராப்பிட்டி வைத்தியசாலையில் இனந்தெரியாத நோயால் நால்வர் பலி!

கொழும்பு, ஏப்.9

இனந்தெரியாத நோயினால் பாதிக்கப்பட்டு காலி கராப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த இருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். ஏற்கனவே, இதே போன்று இனந்தெரியாத நோயினால் பாதிக்கப்பட்ட இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த நால்வருக்கும் எந்தவிதமான நோய் தொற்றிருக்கலாம் என்பது பற்றி இதுவரை எதுவும் கண்டறியப்படவில்லை என கராப்பிட்டி வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்டன் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் ரத்கம, அப்புத்தளை, போனாறுவல, ஹிக்கடுவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த இனந்தெரியாத நோய் வைத்தியசாலையின் மற்றைய பிரிவுகள் மற்றும் உயிரிழந்தவர்களின் பிரதேசங்களில் பரவியிருக்கலாம் என சந்தேகிப்பதோடு இது தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க)


**United Nations Development Programme**
**Sustainable human development**

UNDP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

To implement UNDP initiatives in collaboration with the Government of Sri Lanka, we invite applications from qualified Sri Lankan Nationals for the following position.

**PROGRAMME ASSISTANT–**
**Under the supervision of the Senior Programme Officer**

- Collects, registers and maintains information on project activities by reviewing reports and through first-hand sources;
- Contributes to the preparation of status and progress reports by providing information, preparing tables and drafting selected sections of it. Prepares background material for use in discussions and briefing sessions;
- Arranges for the recording and administrative processing of government requests for assistance;
- Assists in the identification and formulation of development co-operation programmes and projects and participates in the preparation of draft project documents;
- Monitors project/programme activities by reviewing a variety of records, including control plans, progress reports, project inputs, budgets and financial expenditures;
- Monitor the community development projects and provide technical Assistance in social mobilization to institutions supported directly of indirectly under Transition Programme.
- Maintains, processes and analyses information on subject-matters relevant to the organization and on external assistance provided to the country by main sectors;
- May be required to carry out specific administrative operational/control tasks for project/programme activities.
- Performs other duties as required.

Educational Background:
- Secondary Education required;
  University Degree in economics, social sciences, planning, and Sociology would be desirable but it is not a requirement.

Experience:
- 3-5 years of relevant Programme experience is required at the national or international level:.
- Experience in community based development:
- Experience in livelihood recovery and development

Languages:
- Excellent command of English (writing, speaking and reading);
- Ability to communicate in Sinhala an asset.

Other:
- Computer skills in MS office;
- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment;
- Motivated, flexible and capable of working under pressure:
- Willingness to undertake regular field visits North and East
- Willingness to work out of normal office

(அ/48747)

UNDP offers an attractive compensation package commensurate with experience. This is a non-career appointment for limited duration with possible extensions. Please send your curriculum vitae, with names of two non-related referees and contact telephone numbers to reach us within 10 days of this advertisement to the Senior Programme Officer, UNDP, 123/1, Temple Road, Jaffna. Indicate position applied for on the top left hand corner of the envelope. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified female candidates are encouraged to apply.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 23**

3. வேலை செய்யும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியையான ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அனுகூலமானதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களை பாதுகாப்பதற்கெனத் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

# தொல்லியந் சான்றுகள்

பண்டைய வரலாற்றை சிறந்த முறையில் ஆராய்ந்து அறிவதற்கு உதவும் சான்றுகள், இலக்கியம், அகழ்வாராய்ச்சி, தொல்பொருட்கள், வெளிநாட்டார் குறிப்புகள், கல்வெட்டுகள் (சாசனங்கள்) என்பனவாகும். கல்வெட்டு என்றும் சாசனம் என்றும் குறிக்கப்படுபவை: கருங்கல், பொலனறுவையில் உள்ள 'வேளைக்கார சாசனம்' பழமோட்டையில் உள்ள தமிழ்ச்சாசனம், ஆகியவை விஜயபாகு மன்னன், புத்த தந்தத்திற்கு காவலாக தமிழ் படைகளை வைத்திருந்தான் என்றும் தமிழ் இலிகிதர்களை ஆதரித்தான் என்றும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதனால்

## கண்டது.. கேட்டது.. படித்தது..

மக்கிக்கல், செங்கல், முருகைக்கல், உலோகத்தகடு, மட்பாண்டம், மரப்பட்டை, ஓலை, துணி, தோல் என்பவைகளில் பொறிக்கப்பட்ட வரலாற்றைக் குறிக்கும் மூலாதாரங்களாகும். எமது மூதாதையா கல்லை செப்பனிட்டு எழுதும் கலையில் வல்லவர்களாக இருந்தனர். பண்டைக்காலத்தில் நடுகல் நாட்டும் வழக்கம் இருந்தது. கல்வெட்டிலே பொறிக்கப்பட வேண்டிய செய்தியை அரண்மனையைச் சேர்ந்த அரசனோ அறிஞரோ வாசகமாக அமைத்துக் கொடுப்பது வழக்கம். அதை சிற்பாசாரியர் கருங்கல்லில் பொறிப்பர்.

இலங்கையில் கி. மு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் தொடர்ச்சியாக சாஸனங்கள் கிடைத்துள்ளன. சோழ மன்னனால் பொலனறுவை இராச்சியம் அழிக்கப்பட்டது உண்மை என்பதும் புலனாகியது. இக்கல்வெட்டுகளினால் ஊறு காவற்றுறையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில், சோழ மன்னனின் தளபதி இங்கிருந்த மன்னனையும், பெண்டிர், பண்டாரம் யாவரையும் பிடித்துச்சென்று இலங்கையையும் திறை நாடாக்கிச் சென்றான் என்று காணப்படுகிறது. சூள வம்சத்தில் (குலவம்சம்) 5வது மகிந்த மன்னன் சோழ நாட்டிற்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டானென்று காணப்படும் செய்தி உண்மை என்பதும் இச்சாசனத்தால் உறுதியாகியது. சூள வம்சத்தில் கூறப்பட்டுள்ள ஒரு செய்தி பிழையானது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விஜயபாகு சோழர்களை வென்ற பொழுது இலங்கையில் இருந்த அனைத்து தமிழர்களையும் அழித்து பொலனறுவைக்குள் நுழைந்தான் என்று கூறுகிறது.

இலங்கையின் பழைய வரலாற்று நூல்களான மகாவம்சம், தீபவம்சம், குளவம்சம் (குல வம்சம் ) ஆகியவை இலங்கையில் ஆரம்பத்தில் இருந்து ஒரு பெரிய அரசவம்சமும், ஒரு பெரிய இராச்சியமுமே இருந்தன என்று கூறுகின்றன. ஆனால் சாசனங்களை ஆராயுமிடத்து ஆரம்பத்திலே வட இலங்கையில் கூட பல தமிழ் சிற்றரசுகள் இருந்துள்ளன என்பதையும் பல அரசர்கள் ஆங்காங்கே ஆட்சி நடத்தினர் என்பதையும், பிற்காலத்திலேதான் எல்லாவற்றையும் உள்ளடக்கிய தனி இராச்சியமாக 'அநுராதபுர இராச்சியம்' தோன்றியது என்றும் இவைகள் மூலம் அறிந்து கொள்கிறோம்.

'தேவநம்பிய' என்ற விருது 'திஸ்ஸ' என்ற மன்னனுக்கு மட்டுமல்ல பின்னிருந்த பல மன்னருக்கும் இவ்விருது இருந்துள்ளது என்று கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது.

கதிர்.தணிகாசலம் எழுதிய தமிழ் : மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும் எனும் நூலில் இருந்து பெறப்பட்டது.

## இவ்வார விழிப்பில்...

- ஆயுதக்குழு விவகாரம் - ஒரு பார்வை
- அரசியல் சூழலும் மக்களும்
- புத்தளம் முஸ்லிம்களின் இன்றைய நிலை
- வவுனியா அகதி வாழ்வு
- சர்வதேச கண்ணிவெடி தினம்

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.


எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

**விழிப்பின் பதிவுகள்**
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net




# கண்ணாம்பூச்சி விளையாட்டும் கை நழுவும் சமாதானமும்



ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்துவது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்பு உருவான அமைதிச்சூழல் குலைந்து தற்போது மீண்டும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. சில வாரங்களுக்கு முன்பு சிறிது சிறிதாக ஆரம்பித்த வன்முறைகள் தற்போது மிக மோசமான நிலையை அடைந்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கிழக்கில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவல் நிலையங்களின் மீது ஒட்டுப்படைகளின் தாக்குதல்கள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன. இந்த தாக்குதல்களின் பின்னால் இராணுவமே இருப்பதாக பரவலாக கருதப்படுகிறது. இத்தகைய தாக்குதல்கள் ஏதாவது ஒரு இராணுவ முகாமுக்கு அண்மையில் இடம் பெறுவதும், தாக்குகின்றவர்கள் இராணுவ முகாம் பக்கமாக தப்பிச்செல்வதாக கூறப்படுவதும் இவ்வாறான கருத்துக்கள் உருவாக காரணமாக இருக்கலாம்.

எவ்வாறெனினும், ஜெனீவாவில் உறுதியளித்தபடி ஒட்டுப்படைகளின் செயற்பாட்டை நிறுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்றே தோன்றுகிறது. இன்னொருபுறம் இவ்வாறு அரசாங்கம் அலட்சியமாக இருப்பதன் பின்னணி குறித்து பல்வேறு ஊகங்கள் எழ ஆரம்பித்துள்ளன.

இந்த ஊகங்களில் வழமைபோல அரசாங்கம் யுத்தத்தை எதிர்கொள்ள தயாராகிறது. எனவேதான் அது தனது பொறுப்பினை தட்டிக்கழிக்கிறது என்ற கருத்தும் உள்ளது. அதனை ஒருபுறம் வைத்துவிட்டு பார்த்தால் வேறுசில கருத்துக்களும் முன்நிற்கவே செய்கின்றன.

- என். ஜீவேந்திரன்

அதில் முக்கியமான ஒன்றாக, அரசாங்கமானது கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் கருணா குழு ஒரு தனிப்படையாக இயங்குவதாக காட்ட முயற்சிப்பதாகவும், அதன்மூலம் இது குறித்து நடவடிக்கை எடுக்கின்ற பொறுப்பு தமக்கு இல்லை என காட்ட முயற்சிப்பதாகவும் ஊகங்கள் உள்ளன.

எனினும், இது சிறுபிள்ளைத்தனமான விளையாட்டாக பலராலும் கருதப்படுகிறது. மேலும், இதன் பிரதி பலனாக படைகள் மீது புலிகள் தாக்குதலை தொடுத்துவிட்டு இதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை



என கூறக்கூடிய வாய்ப்பும் உள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். கடந்த டிசம்பர் மாதம் பரவலாக அரச படைகள் மீது இவ்வாறு பல தாக்குதல்கள் இடம்பெற்று நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டமை இங்கு அவதானிக்கத்தக்கதாகும். சில நாட்களுக்கு முன்பு மன்னார் கடலில் இடம்பெற்ற சம்பவமும் இதன் தொடர்ச்சியானதாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

எனவே அரசாங்கமானது நாட்டு மக்களது எதிர்காலத்திற்கு பொறுப்புச்சொல்ல வேண்டிய தமது கடமையை உணர்ந்து இவ்வாறான கண்ணாம்பூச்சி விளையாட்டுக்களை கைவிட்டு உண்மையான சமாதானத்துக்காக உருப்படியான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமாகும்.

## கருத்தாடல் களம்

### கடல் வலய தடை நீக்கப்படவேண்டும்

கடற்படையால் விதிக்கப்பட்டுள்ள கடல் வலயத்தடை மீனவர்களான எம்மை மீண்டும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சுமார் 25 வருடங்களுக்கு மேலாக பல்வேறு கெடுபிடிகள், தாக்குதல்கள், துன்பங்களுக்கு மத்தியில் தான் மீனவர்களான நாம் செத்துச் செத்து வாழ்ந்து வருகிறோம். மீனவர்கள் பலர் இறந்து விட்டனர். பலர் இடம் பெயர்ந்து விட்டனர். பலர் தொழிலைக் கைவிட்டு வறுமையில் உழல்கின்றனர்.

இந்த சூழலில்தான் போர்நிறுத்த உடன்படிக்கையின் பலனாக எமக்கு ஓரளவு நிம்மதி கிடைத்தது. எங்களால் ஓரளவு மூச்சுவிட முடிந்தது. ஆனால் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் எமக்கு இந்தத் தடை மீண்டும் விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக எமது மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எமது உயிருக்கும் உத்தரவாதமில்லாத நிலை தோன்றியுள்ளது. எனவே தயவுசெய்து கடல் வலயத் தடையை நீக்கும்படி நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

கிருஷ்ணமூர்த்தி செந்தூரன்
வடமராட்சி

## நிகழ்வுகள்

சுனாமியாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களது அதிலும் குறிப்பாக அங்கவீனர்களின் உளவளத்தினை மேம்படுத்துவதற்கான கலை முயற்சியொன்றினை சுனேரா மன்றமும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து கடந்த மார்ச் 10ம் திகதி மீபே தொழில் நிபுணத்துவ கல்வி பண்டாரநாயக்க குறிப்பிடும் போது

"எட்டு வருட காலமாக நாங்கள் இவ்வாறான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம் என்பதை சகலரும் அறிவர். இந்த வேலைத்திட்டங்கள் அவர்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்ப ஒரு கருவியாக அமைகிறது. இவர்கள் அங்கவீனர்களாக

### உளவளத்துணை பயிற்சி



அபிவிருத்தி முகாமைத்துவ நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக பல பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 28 இளைஞர் யுவதிகளுக்கு உளவளத்துணை தொடர்பிலான பயிற்சி அளிக்கப்பட்டதுடன் அவர்களின் ஊடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுனேரா மன்றத்தின் தலைவி சுனேத்திரா இருந்தாலும் இவர்களினுள் வெவ்வேறான திறமைகள் உள்ளன. அவற்றை வெளிக்கொண்டு வரும் வெவ்வேறான முயற்சிகள் எம்மிடம் உள்ளன."

- அகமத் யுஸ்ரி

எவ்வாறெனினும் மனித வன்முறைகளாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு உதவியற்ற நிலையில் உள்ள மக்கள் தொடர்பில் இதுபோன்ற அவதானங்கள் செலுத்தப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும். அத்துடன் இது போன்ற வேலைத் திட்டங்கள் கிராமப்புறங்களுக்கும் குறிப்பாக வட கிழக்கு பிரதேசங்களுக்கும் சென்றடையும் விதத்தில் விரிவாக்கப்படுவது மிக அவசியமாகும்.

## விதைக்கப்படல்

எங்களால்
எதையும்
தொலைத்ததாய்
தெரியவில்லை.

எங்களுக்குள் மட்டும்
விதைக்கப்பட்டிருக்கின்றன
விதைகள்
நம்பிக்கை மரங்களாய்
நல்ல நிழல்கள்
வேண்டி

நீண்ட
எங்கள்
ஒரு பயணத்திற்கான
சிறு இடைவேளையில்
நிலைமைகளை
உள்ளடைத்து
அவைகள்
தாப்பா
போட்டுக் கொள்கின்றன

கசப்புக்குள்ளும்
கறுப்புக்குள்ளும்
மையெடுத்து
காவியம்
எழுதுவது தானே
எங்கள்
போராளிக் கவிஞனின்
புதிய உத்தி

கு. பா. தீபச்செல்வன்
ஆனந்தபுரம்
கிளிநொச்சி

விழிப்பு நிகழ்ச்சி **TNL** அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு **7.25** மணிக்கும், ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு **7.30** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

FCCISL
Sri Lanka

FCCISL Back to Business

# மீளவும் வியாபாரத்தில் திட்டம்
# Back to Business Project

சுனாமிப் பேரலைப் பாதிப்பிற்குள்ளான ஜீவாதார சிறிய நடுத்தர முயற்சியாளர்களை மீளவும் கட்டியெழுப்பும் ஒரு தனியார் துறைத்திட்டமானது இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜத்தினாலும் மாவட்டச் சம்மேளனங்களினாலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

**இதுவரை மீளவும் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட உதவிபெற்ற ஜீவாதார முயற்சியாளர்கள், நிறுவனங்கள்**

## 4130

## ரூபா. 513.63 மில்லியன்

**கடன் தொகையை பெற்றுக்கொள்ள உதவப்பட்ட**

## நிறுவனங்கள்
## 952

மார்ச் 16-18, 2006 வரை நடைபெற்ற IMPEXPRO பொருட் காட்சியில் பங்கு பற்ற உதவி வழங்கப்பட்ட நிறுவனங்களில் பின் வரும் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு ஊக்குவிக்கப்பட்டன. இந்த சந்தர்ப்பம் அவர்களுக்கு மேலும் ஊக்குவிப்பாகவும் இழந்த சந்தை வாய்ப்பை மீளப் பெறவும் புதிய சந்தை ஊடுருவலை ஏற்படுத்தவும் ஏதுவாக அமைந்தது.




## நீங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நிறுவனமா?
## உங்களுக்கு மீளவும் வியாபாரத்தில் ஈடுபட உதவி தேவையா?
## நாங்கள் உங்களிற்கு உதவுகின்றோம்............

அத்தியாவசிய கடனைப் பெறுவதற்கான சேவை
- கடன் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக நிதி நிறுவனங்களுடனான முறையான நேரடி ஈடுபாடு. ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் கடன் தொடர்பான சேவைகள்.

பொருட்கள் சேவைகளின் விருத்திக்கான சந்தை / வர்த்தக தொடர்புகள் ஏற்படுத்துதல்
- இழந்த சந்தை வாய்ப்பை பெறவும் புதிய சந்தையில் பாதுகாப்பான சூழலை உருவாக்கவும் போதுமான தந்திரோபாயங்களை வழங்குவதன் மூலம் உங்களுக்கு உதவுதல்.

அதி கூடிய உற்பத்தி திறனை / பெறுவதற்கான தொழில்நுட்ப மாற்றம்.
- அதி கூடிய உற்பத்தி திறன். தரக் கட்டுப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்காகவும் வேண்டிய உதவிகளை வளங்கல்.

மன அழுத்த விடுதலை. வர்த்தக முகாமைத்துவப்பயிற்சிகள்
- மேலும் சுனாமியினால் ஏற்பட்ட மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கான அறிவுரைகளை வழங்கி முகாமைத்துவவிருத்திக்கு அறிவுரைகளை வழங்குதல்

மகளிர் ஜீவனோபாயத் தொழில் முயற்சிகளுக்கான விசேட உதவிகள் என்பனவற்றிற்கு

**பின் வரும் கூட்டிணைந்த சம்மேளனங்களை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்**

**தொடர்பு விபரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அம்பாறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. கே. வசந்த குமார ஜெயசேன, பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 063 22 23790 | Mobile: 0777 448809 |
| மட்டகளப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. பி. சரத்சந்திரன், பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 065 22 26656 | Mobile: 071 4927164 |
| காலி மாவட்ட வர்த்தக மாவட்ட கைத்தொழில் சம்மேளனம் | திரு. ஜே.எச். விதாரண, மாவட்ட திட்ட முகாமையாளர் | Tel: 091 22 33236 | Mobile: 077 3162046 |
| ஹம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. அஸ்மி தாஸிம், பணிப்பாளர் நாயகம் | Tel: 047 22 20940/1 | Mobile: 077 7746817 |
| களுத்துறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. மார்க்கி மகபுப், மாவட்ட திட்ட முகாமையாளர் | Tel: 038 22 41196/4 | Mobile: 0777 354570 |
| மாத்தறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. காயத்ரி விக்ரமசேகர, பதில் பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 041 22 29883 | |
| வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. எம்.கரேஸ்குமார், பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 024 22 24313 | Mobile: 077 7843264 |
| யாழ் மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. எஸ்.ஜே. செல்வராஜா, மாவட்ட திட்ட முகாமையாளர் | Tel: 021 22 26609 | Mobile: 077 6014748 |
| கிளிநொச்சி மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் | திரு. டபிள்யு. ஜெகுசைரட்ணம், பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 021 22 85067 | Mobile: 077 6617828 |
| திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் | திரு. து. கோனேஸ்வரன், பிரதான நிறைவேற்று அதிகாரி | Tel: 026 22 25270 | Mobile: 077 3548400 |
| மீளவும் வியாபாரத்தில் பிரதான அலுவலகம் | திரு. பற்றிக் பெனான்டோ, வியாபார அபிவிருத்தி மற்றும் பயிற்சிகட்கான துணைப் பணிப்பாளர் | Tel: 011 4741436/7 | Mobile: 071 4160338 |

**Back to Business Project**
The Secretariat, FCCISL
Level 3, # 53 Vauxhall Lane, Colombo 2.
Telephone + 94 11 4741433 / 36 / 37 Fax + 94 11 4741435
Email : b2b@fccisl.lk, Website : www.fccisl.lk

# சமாதான முயற்சிகளின் பின்னடைவுக்கு யார் காரணம்.?



'சர்வதேச பேரம்பேசுதல் மற்றும் பிணக்குத் தீர்வுக் களரியும் தெற்காசிய சங்கமும் சட்டம் மற்றும் ராஜதந்திரத்திற்கான பிளெச்சர் கல்லூரியின் தெற்காசிய களரியும்' சேர்ந்து 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதியன்று ஐக்கிய அமெரிக்காவில் ரப்ற்ஸ் பல்கலைக்கழகத்தில் நடத்திய கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (ஜீ.ஜீ. பொன்னம்பலம்) அவர்கள் சமர்ப்பித்த ஆய்வறிக்கை இது.



## கஜேந்திரகுமார் பொன்னபலம் அமெரிக்காவில் விளக்கம்

கட்டம் கட்டமான படிமுறை மூலம் நகர்த்தப்பட வேண்டியது என்று இணங்கப்பட்டிருந்த இலங்கையின் சமாதான முயற்சியின் முதலாவது நடவடிக்கையானது ஐக்கிய தேசிய முன்னணி (ஐ.தே.மு) இலங்கை அரசுக்கும் (அரசு) தமிழீழ விடுதலைப் புலிகள் (புலிகள்) அமைப்புக்கும் இடையில் 2002 மார்ச் 22ஆம் திகதியன்று கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கையோடு (உடன்படிக்கை) தொடங்கியது. சண்டை நிறுத்தத்தையும் அதே வேளை, வழமை நிலைமையையும் உருவாக்குவதே உடன்படிக்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. உடன்படிக்கையின் முன்னுரை இத்தொடர்பில் பின்வருமாறு கூறுகின்றது:-

*"சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்து பிணக்கினால் பாதிப்புற்ற அனைத்து மக்களினதும் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசும் புலிகளும் (இதன்பின்னால் 'திறத்தவர்கள்' என குறிப்பிடப்படுவர்) அங்க ரித்துள்ளனர்."*

"வழமை நிலைமையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள்" என்னும் தலைப்பைக் கொண்ட உடன்படிக்கையின் 2ஆம் உறுப்புரையின்படி அரசு பற்பல முக்கியமான நிபந்தனைகளுக்கு உடன்பட்டது. அவையாவன பாடசாலைக் கட்டடங்கள் அனைத்தையும் விட்டுநீங்கி அவற்றின் வழமையான உபயோகத்திற்கு திருப்பிக்கொடுப்பது, ஏனைய பொதுக் கட்டடங்கள் அனைத்தையும் அவற்றின் வழமையான பாவனைக்காகத் திருப்பிக் கொடுத்தல், குடிமக்களுக்குத் தொல்லை ஏற்படாதவாறு, குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் நகரங்கள், பட்டிணங்களில் பாதுகாப்பு நிலைவரங்களை மீளாய்ந்து சோதனைச் சாவடிகளை அமைத்தல், குறிப்பிட்ட ஒருசில பகுதிகளைத் தவிர்ந்த மற்றெல்லா இடங்களிலும் இரவு - பகல் மீன்பிடித்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்குதல்.

எனினும், உடன்படிக்கை கைச்சாத்தாகி இற்றைக்கு நான்காண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் கூட அரசு இவ்வேற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படவில்லை. இதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான குடிமக்கள் மீளக்குடியமரமுடியாமல் அகதிமுகாங்களில் மிக மோசமான நிலைமைகளின் கீழ் அடைபட்டுக்கிடப்பதோடு தங்கள் ஜீவனோபாய முயற்சிகளைச் சுயாதீனமாக மேற்கொள்ளமுடியாதுமுள்ளனர்.

கட்டம் கட்டமான படிமுறையின் முதல் கட்டமான யுத்தநிறுத்த உடன்படிக்கையை எட்டியிருந்தும்கூட, யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்காக வழமை நிலைமையை ஏற்படுத்துவதற்கான உடன்படிக்கையின் சிக்கல் நிறைந்த இவ்வேற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்துவதில் அரசு தவறிவிட்டது. இருந்த போதிலும் அடுத்த கட்டமான நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

### இடைக்கால நிர்வாகம்

ஒருபுறம் சம்பிரதாயபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மறுபுறம் பிணக்கிற்கு இறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வொன்றை நோக்கி நகரும் அப்பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக, யுத்தத்தால் சிதைவுண்ட வடக்கு - கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகத்தை, அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. வருந்திக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான வடக்கு - கிழக்கு மக்களின் கொழுந்துவிட்டெரியும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதும் மீளக்குடியமர்த்தல் ஆகிய பாரிய பணியில் கவனம் செலுத்துதல், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி போன்றனவே, குறித்த இடைக்கால நிர்வாகத்தின் நோக்கங்களாக இருந்தன. எவ்வாறாயினும் மேற்போந்த வாறு உடன்பாடு ஏற்பட்டிருந்த போதிலும் அரசு எதிர் கொண்ட ஒருசில அரசியல் கஷ்டங்கள் காரணமாக அரசினால் முன்வைக்கப்பட்டதன் பிரகாரம் கூட்டு நடவடிக்கை அணிகளை அமைப்பதற்குப் புலிகள் இணங்கினர். இது காலப்போக்கில், முன்னர் இணங்கிய இடைக்கால நிர்வாகப் பொறிமுறைக்குப் பதிலாக, உபகுழுக்கள் அமைக்கப்படுவதற்கு வழிசமைத்தது.

இந்த உபகுழுக்கள் பலமாதங்களாகச் செயற்பட்டுங் கூட ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகளை விரைவாக அமுல் செய்வதற்கு அரசு தவறிவிட்டது. அதுமட்டுமன்றி அந்த முடிவுகளுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் அரசு சில சந்தர்ப்பங்களில் செயற்பட்டுமுள்ளது.

### வாஷிங்ரன் மாநாடு

இவ்வாறான திருப்தியற்ற விவகாரங்களுக்கு மத்தியில் அரசினால் வாஷிங்ரன் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளைத் தவித்ததன் மூலம் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டனர். இதனால் 2003 சித்திரை மாதத்தில் புலிகள் பேச்சுவார்த்தை நடைமுறையில் இருந்து பின்வாங்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை இடைநிறுத்தினர். எனினும் புலிகள் தொடர்ந்தும் ஏற்பாட்டாளரான நோர்வே அரசுடனும் அவ்வரசு மூலம் ஐ.தே.மு. அரசுடனும் தொடர்புகளைப் பேணி வந்தனர்.

அதனைத் தொடர்ந்து புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (இ.த. அதிகார சபை) அமைப்பது பற்றி தங்களது ஆலோசனைகளை எழுத்துமூலம் முன்வைத்தனர். குறித்த ஆலோசனைகள் மீது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான திகதிகளைக் குறிப்பிடுமாறு புலிகள் ஏககாலத்தில் 2003 ஒக்ரோபர் 31ஆம் திகதியன்று கோரிக்கையையும் முன்வைத்தனர். சமாதான முயற்சிகளின் போது எழுத்து மூலமான தங்கள் யோசனைகளை புலிகள் முன்வைத்தமை இதுவே முதல் தடவையென்பது கவனத்திற் கொள்ளப்படல்வேண்டும்.

புலிகள் தமது ஆலோசனைகளை முன்வைத்து நான்கு நாள்கள் கழியமுன், அதாவது 2003 ஒக்ரோபர் 4ஆம் திகதியன்று ஐ.தே.மு. அரசைச் சேராத ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்டிருந்த ஐ.தே.மு. அரசிடமிருந்து, சமாதான படிமுறையோடு நேரடித் தொடர்புள்ள பாதுகாப்பு அமைச்சையும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சையும் வெகுஜன தொடர்பு அமைச்சையும் கையகப்படுத்திக் கொண்டதோடு அவற்றைத் தனக்கும் தனது கட்சிக்காரர் சிலருக்கும் ஒதுக்கிக் கொண்டார்.

ஜனாதிபதியின் இந்தச் செயலானது சமாதான படிமுறைக்குப் பொறுப்பானவர் யார் என்பதில் ஒரு தெளிவின்மையை தோற்றுவித்த காரணத்தினால், ஏற்பாட்டாளரான நோர்வே அரசு தனது பாத்திரத்தை 2003 நவம்பர் மாதம் இடைநிறுத்தியது. அதனைத் தொடர்ந்து நிலவிய மந்த நிலையின் தொடர்ச்சியாக ஐ.தே.மு. அரசு அகற்றப்பட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 2004 ஏப்ரல் மாதத்தில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு புதிய அரசசொன்று பதவிக்கு வந்தது.

ஜனாதிபதியின் சொந்தக் கட்சியான மக்கள் கூட்டணியும் மக்கள் விடுதலை முன்னணியும் சேர்ந்த ஐக்கிய மக்கள் விடுதலைக் கூட்டமைப்பு என்ற அரசிற்கு ஜனாதிபதி குமாரதுங்க தலைவரானார். சமாதான படிமுறைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி அன்றும் பிரசாரம் செய்ததையும் இன்றும் பிரசாரம் செய்து வருவதையும் எல்லோரும் நன்கறிவர்.

குறித்த கூட்டணி, புலிகளின் இ.த. அதிகாரசபை பற்றிய ஆலோசனைகளுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் கடும் எதிர்ப்பாக அமைந்துவிட்டது. தொடர்ந்து சமாதான படிமுறையை முன்னெடுக்க இயலாமல் போனதற்கு இந்நிலைமையே காரணமாக அமைந்துவிட்டது என்பது கண்கூடு. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க.) குறித்த இ.த. அதிகாரசபை பற்றிய ஆலோசனைகள் மீது பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு அரசை வலியுறுத்தியதோடு அத்தகைய பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் எட்டப்படும் இணக்கப்பாட்டுக்கு தனது ஆதரவை நல்குவதாகவும் பகிரங்கமாக அறிவித்தது.

புலிகளைப் பொறுத்தமட்டில் இ.த. அதிகாரசபை ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்று தாங்கள் எதிர்பார்த்திருப்பதாக புலிகள் அடிக்கடி கூறிவந்ததோடு அவ்வாறு பேச்சுவார்த்தைகள் தொடங்கும் போது இ.த. அதிகாரசபை ஆலோசனை தொடாபான பிரேரணைகள் எதனையும் அரசு பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரலாமென்றும் அவை பற்றி பேசலாமென்றும் அறிவித்திருந்தனர்.

தெளிவின்மை, அரசின் கூட்டாளிகள் இடையே கருத்து வேற்றுமை, உருத்திராக்க பிரகடனங்களை மட்டும் செய்து கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை அரசால் எடுக்க இயலாமை போன்ற காரணங்கள் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு எதிரான தடைக்கற்களாய் அமைந்தன. 2003 ஒக்ரோபர் 31ஆம் திகதி இ.த. அதிகாரசபை ஆலோசனைகளை சமர்ப்பித்தபோது அதுபற்றிய கலந்தாலோசனைகளை மேற்கொள்வதற்கு திகதி குறிப்பிடுமாறு புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது கவனத்திற்கொள்ளப்படவேண்டும். அதன்படி, 2003 ஒக்ரோபர் 4ஆம் திகதிய நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டிருக்காவிடில், பேச்சுவார்த்தைகள் 2003 கார்த்திகை மாதத்தில் தொடங்கப்பட்டிருக்கும். மிகவும் துரதிஷ்டவசமான இம்மந்தநிலை இன்றுவரை தொடர்கின்றது.

### ஒட்டுப்படை விவகாரம்

இது இவ்வாறிருக்க, உடன்படிக்கையின் 1.8ஆம் உறுப்புரையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக ஒட்டுப்படைகளின் ஆயுதங்களை இலங்கை அரசு களைய வேண்டிய கடப்பாடு நிறைவேற்றப்படவில்லை. மாறாக இலங்கை ஆயுதப்படைகள் ஒட்டுப்படைகளைப் பாதுகாத்தும் புதிய ஒட்டுப்படைகளை ஊக்குவித்தும் வருகின்றன. இதன் காரணமாக கொலைகளும் பாரதூரமான சம்பவங்களும் இடம்பெற்று வருவதோடு, அதனால் உடன்படிக்கை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இம்மாதிரியான சம்பவங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் அருகியும், உடன்படிக்கை நிலைகுலையும் சாத்தியம் அதிகரித்தும் காணப்பட்ட நேரத்தில் ஆழிப்பேரலையால் பேரழிவு இடம்பெற்றது. அதனால், ஏற்பட்ட உயிரிழப்பின் மூன்றில் இரண்டு பங்கும் ஏனைய சேதத்தின் 60 நூற்றுவீதமும் வடக்கு - கிழக்கிலேயே சம்பவித்தமை மிகவும் துர்ப்பாக்கியமானது. கடந்த இரண்டு தசாப்தகால யுத் தங்களால் வடக்கு - கிழக்கின் உட்கட்டமைப்பும் பொருளாதார நிலைகளும் முழுமையாக அழிந்துவிட்ட காரணத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவானது பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டது.

ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பாரிய மானுட அவலங்களுக்கு மத்தியிலும் அப்பேரழிவின் காரணமாக ஏதேனும் உடன்பாடான நிலைமை உருவாகுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை அரசும் புலிகளும் இணைந்து செயற்படக் கூடிய ஒருநிலைமையை சுனாமி ஏற்படுத்துமென்று சர்வதேச சமூகம் சரியாகக் கணிப்பிட்டது. இவ்வாறான ஒரு நிலைமை முன்னெப்போதும் இருந்ததில்லை.

அரசையும் புலியையும் ஈடுபடுத்தி இயங்க வைக்கும் கூட்டுப் பொறிமுறை ஒன்றை வடக்கு - கிழக்கிற்காக அமைக்குமாறு சர்வதேச சமூகம் பிரேரித்தது. அதன்மூலம் சமாதான பேச்சுவார்த்தையை. மீளத்தொடங்குவதற்கான கள நிலையை ஏற்படுத்தலாமென சர்வதேச சமூகம் நம்பியது. இப்பிரயத்தனங்களைத் தொடர்ந்து ஆழிப்பேரலைக்குப் பின்னதான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு உடனபடிக்கையை (பீ-ரொம்ஸ்) பூர்த்திசெய்ய அரசு உடன்பட்டது. இதற்குச் சர்வதேச சமூகத்தின் வெளிப்படையான ஒத்தாசையும் பெறப்பட்டது.

கடற்கரையிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்திற்குள் செய்யவேண்டிய நிவாரண வேலைகள் கையாளும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை மட்டும் கொண்ட நிர்வாகப் பொறிமுறையை மாத்திரமே கொண்ட பீ-ரொம்ஸ் முறையை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி அரசிலிருந்து வெளியேறியது. அதன்பின்னர் மக்கள் விடுதலை முன்னணி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்டு அந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடையாணை காரணமாக குறித்த பீ-ரொம்ஸ் இன் மையக்கருவான ஏற்பாடுகள் முற்றாக வலுவிழந்தன. சுனாமி வடக்கு - கிழக்கை அழித்து ஓராண்டுக்கு மேலாகியும் கூட பாதிப்புற்ற மக்களின் துயரம் அப்படியே தொடர்கின்றது. தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் - அதாவது, தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான தீாவு - சம்பந்தப்பட்டமட்டில பீ-ரொம்ஸ் உடன்படிக்கை முக்கியத்துவம் எதனையும் பெறவில்லை என்பது கண்டிப்பாக கவனிக்கத்தக்கது.

அண்மையில், 2005 ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படையாக முன்வைக்கப்பட்ட பின்வரும் கொள்கைகள் மீது சிங்கள மக்களின் அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வெற்றியீட்டினார்:-

- நடைமுறையிலுள்ள உடன்படிக்கையை முற்றாக நிராகரித்து மறுசீரமைத்தல்,
- அரசின் ஒற்றையாட்சித் தன்மையை நிலைநிறுத்துதல்,
- அதிகாரப் பங்கீடு, கூட்டாச்சி மற்றும் தன்னாட்சி பற்றிய கோட்பாடுகளை நிராகரித்தல்,
- தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களை அங்கீகரிக்க மறுத்தல்,
- புலிகளின் இ.த. அதிகாரசபைப் பிரேரணைகளை முற்றிலும் புறந்தள்ளல்,
- பீ-ரொம்ஸ் உடன்படிக்கையை கைவிடுதல்

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வுகாண்பதற்கான சாத்தியங்கள் அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாகவே மேற்போந்த கொள்கைகளின் ஒட்டுமொத்தமான தாக்கம் அமைகின்றது என்பதில் எவருக்கும் கிஞ்சித்தும் ஐயம் இருக்கமுடியாது.

இவற்றையெல்லாம் நோக்குமிடத்து புலிகளும் தமிழர்களும் பொறுமை காத்து வந்துள்ளார்கள் என்பது மட்டுமல்லாது முன்னெப்போதும் இல்லாதவாறு நெகிழ்வுப் போக்கையும் காட்டியுள்ளனர் என்பது தெளிவாகும். சமாதானப் படிமுறையின் ஆரம்பக் கட்டங்களில் ஏதேனும் முன்னோக்கி அடிவைக்கப்பட்டிருப்பின் அதற்கு புலிகளின் விட்டுக்கொடுப்பே காரணம் என்பது எனது தீர்க்கமான கருத்தாகும். தமிழர் கோணத்திலிருந்து நோக்குங்கால், கடந்த நாலாண்டு கால நடைமுறைகள் உருப்படியான எந்த முன்னேற்றத்தையும் கண்டதில்லை.

இலங்கைத் தீவில் வாழும் குறைந்த எண்ணிக்கை கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்கமுடியாத உரிமைகளை அங்கீகரிப்பதற்கு மனமின்றி தடைக்கற்களாக இருந்து வருகின்ற சிங்கள பேரினவாத அடக்குமுறையே பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றுக்கு பாரிய முட்டுக்கட்டையாக இருந்துவந்ததோடு இன்றும் இருந்து வருகின்றது. இது முறியடிக்க இயலாததும் அடிப்படையானதுமான ஒரு சிக்கலாகும். இங்குதான் பிரச்சினை மையம் கொண்டுள்ளது.

(வளரும்)

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777-903090
0777 246117


## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவு

''உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான் 11:25''

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 10 | | 09 |
| ★ | | ★ |
| 03 | | 04 |
| ★ | | ★ |
| 1931 | | 2004 |



### அமரர் பர்னாந்து அந்தோனிப்பிள்ளை

ஆண்டவனின் பாதம் சேர்ந்து ஆண்டு இரண்டு ஆனபோதும்
ஐயாச்சி உம் நினைவு எம்மைவிட்டு நீங்கவில்லை
விண்ணாளும் இறையவனின் மடிதனிலே
எந்நாளும் நிறைவுடனே துயில்கொள்க.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பத்திமா கோயிலடி,
பண்டத்தரிப்பு. (48891) (16-11-35)

## கமத்தொழில் இடாப்பு தயாரிக்கும் பணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

குடாநாட்டு விவசாயிகளிடம் இருந்து கமத்தொழில் காணி இடாப்பு தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் இதனை மேற்கொண்டு வருகின்றது.

கமநல சேவைப் பிரிவு,கிராம சேவையாளர் பிரிவு,ஊடாக இந்த இடாப்பு தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக கூறப்பட்டது.

செய்கைபண்ணப்படும் சொந்தக் காணிகள் மட்டுமன்றி குத்தகைக் காணிகளுக்கும் இடாப்பு தயாரிகப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் இதற்குரிய படிவங்களை பிரதேச கமநல சேவை அலுவலகம் அல்லது கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கவேண்டும் என்று கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் தெரிவித்தார். (எ-14)

## ஆள் நடமாட்டமற்ற வரணி – குடத்தனை வீதியில் புதிய மினிமுகாம் அமைப்பு

தென்மராட்சி கிழக்கு,ஏப்.9

வரணி - குடத்தனை வீதியில் 6ஆம் கட்டைச் சந்திக்குச் சமீபகமாகப் படையினர் மினிமுகாம் ஒன்றைப் புதிதாக அமைத்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் இல்லாத இப்பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட இந்த படை முகாம் காரணமாக அப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பீதியுடன் பயணிக்க வேண்டியுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-122) (24)

## கரம் கூப்பி வாழ்த்துகின்றோம்!



எம் இதயம் வாழ் உத்தமனே;
ஊருக்குழைத்தவனே;
ஆயிரத்திலொருவனே;
கண்ணிற்கினியனே;
கர்மயோகியே!
மக்கள் பணியே மகேசன்
பணியாய்க் கொண்டு
வங்கிச் சேவை தனில்
வளமான பணியாற்றி
வடபிராந்திய இலங்கை வங்கி
முகாமைத்துவ ஆசனத்தை
அலங்கரித்த
கனதிமிகு பார்த்திரமே!
சீராளா !
**உயர்திரு கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணிய!**
ஐயா !
நீவீர் மணிவிழா கண்டு
அகவை அறுபதில் ஓய்வு பெறும் இவ்வேளை
பெறற்கரிய பேறு மேலும் பல பெற்று
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க,
வாழ்கவென வாழ்த்துகின்றோம்!

**"பெத்தல்"**
**பருத்தித்துறை,**
**09.04.2006.**

**சின்னையா தேவராஜா**
**ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வரும்,**
**துணைவியார் ஜெபபாக்கியமும்.**


## யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

சித்திரைப் புத்தாண்டை முன்விட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்



# Style Park

Perfect Collection

# ஸ்ரைல் பார்க்



அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

MasterCard

VISA

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்

அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383

இல. 171, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

## வெளிவந்துவிட்டது.!!!

ஏப்ரல் மாத இதழ்

தமிழ் சஞ்சிகை உலகில் புதிய பிரவேசம்




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

தமிழ் PCTIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

wijeyanewspapers

விஜய பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

# ஈழத்தமிழரின் நியாயபூர்வ உணர்வுகளை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்

## 'ஆனந்த விகடன்' பேட்டியில் மதியுரைஞர் பாலா

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது லண்டன் இல்லத்தில் வைத்து தமிழகச் சஞ்சிகையான 'ஆனந்த விகடன்' வார இதழுக்கு சிறப்புச் செவ்வி ஒன்றை வழங்கினார்.**

**டி. அருள்செழியனுக்கு அவர் வழங்கிய பேட்டியின் முதல் அத்தியாயம் 'பிரபாகரன் தந்த சயனைட் குப்பி' என்ற தலைப்பில் தற்போது பிரசுரமாகியுள்ளது. அதன் விவரம் இது.**

"ஒருமுறை தலைவர் பிரபாகரன் என்னிடம் சொன்னார்... 'ஓய்வென்பது நமக்கு மரணத்தில்தான் சாத்தியம்!' என்று. அதுதான் சத்தியம்!"

வசந்த காலத்தின் கைகளைக் குலுக்கி விடைபெறுகிறது குளிர் காலம். தெற்கு லண்டனில், மனைவி அடேல் பாலசிங்கத்துடன் எளிமையாக வாழ்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம்!

சிறுநீரகக் கோளாறு, நீரிழிவு என உடலைத் துன்புறுத்தும் நோய்களுக்கிடையிலும், ஓயாத உழைப்பு, ஓய்வில்லாத பயணங்கள், இயக்கப் பணிகள் என உற்சாகமாக இருக்கிறார் தமிழீழத்தின் 'சிந்தனைச் சுரங்கம்!'

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான தனது பிணைப்பு பற்றிப் பேச ஆரம்பித்தார் அன்ரன் பாலசிங்கம்...

"எழுபத்தெட்டாம் வருடம்... லண்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த போதுதான், முதன்முறையாக அடேலைச் சந்தித்தேன். ஒருமித்த கருத்துடைய நாங்கள் பல்வேறு அரசியல் இயக்கங்களில் பங்குபெற ஆரம்பித்தோம். தென்னாபிரிக்கா, பலஸ்தீனம், ஸிம்பாப்வே போன்ற நாடுகளின் விடுதலைக்கு ஆதரவான போராட்டங்களிலும், அமெரிக்கக் காலனி ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் தீவிரமாகப் போராடி வந்தோம். இந்த நிலைமையில்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் என்னைத் தொடர்புகொண்டார். உலகிலுள்ள பல்வேறு 'கெரில்லா' விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், அவற்றின் வரலாறுகளையும் தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்புகள் நடத்த அழைப்பு விடுத்தார். நான் முதன்முதலாகப் பிரபாகரனை சென்னையில்தான் சந்தித்தேன். அதன் பிறகு, வருடந்தோறும் சென்னைக்கு வந்து சில மாதங்கள் தங்கி, போராளிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்பு ஆரம்பித்தது எங்கள் நட்பு!

இத்தனை வருட உறவில், எனக்கும் பிரபாகரனுக்கும் கருத்து வேறுபாடுகள் வந்திருக்கின்றன. ஆனால், எங்களுக்கிடையிலான நல்லுறவில் எப்போதும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. காரணம், நாங்கள் மிகச் சிறந்த நண்பர்கள்.

விடுதலைப் புலிகளின் சிந்தனை வடிவம், லட்சியம், அரசியல் கொள்கை ஆகியவற்றை வகுத்துக் கொடுத்தது நான்தான். ஆனால், போரியல் ரீதியான வளர்ச்சியில் இந்த இயக்கத்தை நெறிப்படுத்தித் திட்டமிட்டு, ஆயுதப் போராட்டத்தின் தந்தையாக விளங்குபவர் பிரபாகரன். என்னுடைய அரசியலும், அவரது போரியலும் இணைந்துதான் எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. தலைவர் என்கிற ரீதியில் அவருக்குத்தான் நாங்கள் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

இந்த இயக்கத்தில் நான் ஒரு தொண்டன். எல்லாக் காட்டிலேயும் சிங்கம்தான் ராஜா. ஆனால், எங்கள் காட்டில் புலிதான் ராஜா!" என்கிறார் அழகான சிரிப்புடன்.

கேள்விகளை முன்வைக் கிறோம். சில கேள்விகளுக்குச் சிரிக்கிறார். சில கேள்விகளைத் தவிர்க்கிறார். ஆனால் எது குறித்துப் பேசினாலும், அதன் வரலாறும், அது தொடர்பான புள்ளி விவரங்களும் கொட்டுகின்றன அவரின் பேச்சில்.

கேள்வி: முதன் முதலாக விடுதலைப் புலிகளை ஒரு போராளி அமைப்பாக அங்கீகரித்ததோடு, ஈழப் பிரச்சினையில் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி வைத்த இந்தியா, தற் போது ஈழப் பிரச்சினையிலிருந்து விலகி இருப்பதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:* புலிகள் இயக்கத்தின் தோற்றத்துக்கு முன்பிருந்தே இந்தியா, ஈழத்தமிழ், மக்கள் மீது அனுதாபமும் கருணையும் காட்டி வந்துள்ளது. அதற்குக் காரணம், ஈழத்தில் இருந்தாலும் இன ரீதியாக நாங்கள் இந்தியர்கள்தான்! எங்களது மூல வரலாறு இந்தியாவிலிருந்துதான் ஆரம்பமாகிறது.

எண்பத்து மூன்றாம் வருடம், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஒரு மிகப் பெரிய வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. அது தமிழ் நாட்டில் பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டங்களின் மூலமும், பேரணிகள் மூலமும் தமிழக மக்கள் தங்கள் ஈழத்தமிழர் ஆதரவு உணர்ச்சிகளைக் காட்டினார்கள். அப்போதுதான், ஈழத்தமிழர் பிரச்சினை என்பது ஏதோ இலங்கைத் தீவுக்குள் அடங்கும் பிரச்சினை அல்ல அதன் விளைவுகள் இந்தியாவின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையை உலகம் உணர்ந்தது.



அதன் பிறகு, இந்திய அரசு ஈழத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட ஆரம்பித்தது. இந்தச் சூழ்நிலையில்தான், ஈழத் தமிழர் பாதுகாப்புக்கு ஒரு கவசமாக எமது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், வேறு சில போராளிக் குழுக்களுக்கும் ஆயுதம் கொடுத்து, இராணுவப் பயிற்சி கொடுத்து எங்களை வளர்த்தது இந்தியா. இது வரலாற்று உண்மை!

> **"தமிழீழத்தைத் தாய் நாடாகப் பார்க்கும் நாங்கள், இந்தியாவைத் தந்தை நாடாகத்தான் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்."**

அதை நாங்கள் எப்போதும் மறந்ததில்லை. இப்படியாக எங்களுக்குப் பேருதவிகள் செய்து, எங்களை ஒரு விடுதலை அமைப்பாக அங்கீகாரம் செய்து, திம்பு பேச்சுவார்த்தையில் பங்குபெறச் செய்ததும் இந்தியாதான். அதன் பிறகு பல்வேறு காரணங்களால், இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சில முரண்பாடுகள் எழுந்தன (இந்த இடத்தில், கவனத்தோடு சில கடந்த கால நிகழ்வுகளைத் தவிர்க்கிறார்).

அதனால், இடைவெளிகள் தோன்றின. சில மனக்கசப்பான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனாலும், ஒட்டுமொத்தமாகச் சொல்லும் போது, இந்தியா அன்றிலிருந்து இன்றுவரை எப்போதுமே ஈழத் தமிழர்கள்பால் அனுதாபத் தோடுதான் நடந்து வருகிறது. இந்த நிலை தொடர வேண்டும், ஈழத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இந்தியா அங்கீகரிக்கவேண்டும் என்பதே எம் விருப்பம்.

கேள்வி: இந்தியா - புலிகள் உறவில் முரண்பாடு ஏற்பட முக்கியமாக என்ன காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

*பதில்:* தமிழீழம் சுதந்திர நாடாக உருவாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது விடுதலைப் புலிகள் இயக்கம். சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து எம் மக்களுக்கு எந்த நியாயமும் கிடைக்காது என்று நாங்கள் உறு தியாக நம்பினோம்.

அதனால் தான் எம் மண்ணை மீட்டெடுத்து, எமக்கான சுதந்திரத் தமிழீழத்தை உருவாக்குவதில் தெளிவாக இருந்தோம். ஆனால், இந்திய அரசு இதை விரும்பவில்லை.

தமிழீழத்தில் ஒரு தனியரசு உருவானால், அது தமிழ்நாட்டிலும், இந்தியாவின் மற்ற சமூகங்களிடத்திலும் பிரிவினை எண்ணத்தைத் தோற்றுவிக்கும் என்ற அச்சத்தினால், எமது லட்சியத்தை அவர்கள் ஏற்க மறுத்தார்கள். இந்த அடிப்படையில்தான் முரண்பாடு எழுந்தது.

கேள்வி: தற்போது இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் வரும் என்று நினைக்கிறீர்களா?

*பதில்:* இந்தியா நேரடியாக இந்தப் பிரச்சினையில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, புலிகளுக்கு எதிராக ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை எடுத்துப் பெரும் தோல்வி யைத்தான் சந்தித்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய இராணுவத்தால் நசுக்க முடியவில்லை. மற்ற படி புலிகள் இயக்கம், இந்தியாவைப் பகைத்துக் கொள்ள விரும்பியதில்லை. எங்களுக்கு எதி ராக யுத்தம் திணிக்கப்பட்ட காரணத்தால் தான் எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டோமே தவிர, நாங்கள் இந்தியாவுக்கு எதிராக ஆயுதங்களைத் தூக்குவதற்கு ஒரு போதும் விரும்பியதில்லை.

ஏனென்றால், தமிழீழத்தைத் தாய்நாடாகப் பார்க்கும் நாங்கள், இந்தியாவைத் தந்தை நாடாகத்தான் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் நல்ல நட்புறவு ஏற்பட வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படியான ஒரு சூழ்நிலை நிச்சயம் விரைவில் ஏற்படும் என்பதுதான் எனது கருத்து.

கேள்வி: ஈழப் போராட்டத்தில், உங்களது பங்களிப்பில் நெகிழ வைத்த தருணம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

*பதில்:* இந்திய அமைதிப்படை ஈழத்தில் இருந்தபோது நடைபெற்ற துயரச் சம்பவம் தான் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

எண்பத்தேழாம் வருடம், ஒக்டோபர் இரண்டாம் திகதி பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பதினைந்து முக்கியப் போராளிகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் நிராயுதபாணிகளாகக் கைதுசெய்யப்பட்டு, பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். இந்திய அரசுடனும், இலங்கைக்கான இந்தியத் தூது வரிடமும் பேசி அவர்களை விடுவிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு இருந்தது.

நான் இந்தியத் தூதுவரிடம் பேசிய போது, இலங்கை இராணுவத்துடன் பேசி அவர்களை விடுதலை செய்துவிடலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார். நான் பலாலி இராணுவ முகாமில், சிங்கள இராணுவத்தின் வசமிருந்த எம் போராளிகளை இந்திய அமைதிப்படை அதிகாரிகளின் உதவியுடன் சந்தித்தேன். எம் போராளிகள் அங்கு குற்றவாளிகளைப் போலத் தரையில் உட்கார வைக்கப்பட்டிருக்க, அவர்களை நோக்கித் துப்பாக்கி முனைகளைத் திருப்பியவாறு சிங்கள இராணுவத்தினர் நின்றிருந்தனர். நான் போராளிகளிடம் பேசினேன். அவர்கள் மகிழ்ச்சியுட னும், கலக்கமின்றியும் தாங்கள் விடுவிக்கப்பட்டு விடுவோம் என்ற முழு நம்பிக்கையுடனும் இருந்தார் கள்.

குமரப்பாவும், புலேந்திரனும் அதற்குச் சமீபத்தில்தான் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். அவர்கள் தங்கள் மனைவியருக்கு, 'கவலைப்பட வேண்டாம். விரைவில் வந்துவிடுவோம்' என்கிற தகவலை என் மூலம் தான் சொல்லியனுப்பினார்கள். ஆனால், மறுநாளே நிலைமை மோசமானது. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி, போராளிகளைக் கொழும்புக்குக் கொண்டுவந்து விசாரணைக்கு உட்படுத்த இரகசியத் திட்டமிட்டிருப்பதாக, இந்திய இராணுவ அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

நான் மறுபடியும் போராளிகளைச் சந்தித்தேன். அப்போது அவர்கள், தலைவர் பிரபாகரனுக்கு ஓர் இரகசிய கடிதத்தை என்னிடம் தந்து அனுப்பினர். நான் அந்தக் கடிதத்தை அன்றிரவே தலைவரிடம் சேர்த்தேன். இயக்க மரபுப்படி, எதிரிகளிடம் சிக்காமல் வீரமரணம் அடைய ஏதுவாக, தங்களுக்கு சயனைட் குப்பிகளை வழங்கக் கோரி எழுதிய கடிதம் அது. அதைப் படித்ததும் பிரபாகரனின் கண்கள் கலங்கின. உதடுகளைக் கடித்தபடி சற்று நேரம் யோசித்தவர், இந்திய அரசுடன் மேலும் பேசி, உடனடியாகப் போராளிகளை மீட்கும்படி சொன்னார். நான் மீண்டும் முயன்றேன். ஆனால், என் முயற்சி எதுவும் பலன் அளிக்கவில்லை. இந்தியத் தூதுவரும் தன்னால் எதுவும் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை ஆபத்தாகிவிட்டதாகத் தெரிவித்தார்.

மறுநாள், ஒரு விசேட இராணுவ விமானத்தை அத்துலத்முதலி, பலாலிக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அன்று மாலை ஐந்து மணிக்கு எமது போராளிகள் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்படுவார்கள் என்றும் இந்தியத் தூதுவர் என்னிடம் கூறினார்.

நான் உடனடியாக விரைந்து சென்று, பிரபாகரனிடம் தகவ லைத் தெரிவித்தேன். துயரமும், கவலையும், கோபமும், விரக்தியுமாக பல்வேறு உணர்வலைகள் கலந்ததால், பிரபாகரனின் முகம் விகாரமாக மாறியது. தனது மெய்ப்பாதுகாவலர்களான புலி வீரர்களை அழைத்து, அவர்களது கழுத்துகளில் தொங்கிய சயனைட் விஷக் குப்பிகளைச் சேர்த்தெடுத்து, என் கழுத்திலும், மாத் தையாவின் கழுத்திலும் மாலை யாக அணிவித்தார். எப்படியாவது அந்தக் குப்பிகளை எமது போராளிகளிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

அன்று மதியம் உணவுப் பொதிகளுடன் பலாலி தளம் சென்று, எமது போராளிகளுடன் நிகழ்த்திய இறுதிச் சந்திப்பின் போது தலைவரின் வேண்டு கோளை நான் நிறைவு செய்தேன். எதிரிகளிடம் சிக்கிச் சாவதைவிட, தங்களின் உயிரைத் தாங்களே மாய்த்துக்கொள்ள, அந்தப் பதினைந்து போராளிகளும் சயனைட் குப்பியைக் கடித்தார்கள். சிங்கள இராணுவத்தினர் துப்பாக்கி பேனட்டாலும், லத்தியாலும் அவர்களின் தொண்டைக் குழிக்குள் குத்தி, விஷம் இதயத்தில் பாய்வதைத் தடுக்க முயன்றபோதும், எமது மிக முக்கியமான பத்து வேங்கைகள் அந்த இடத்தி லேயே வீர மரணம் எய்தினர். ஐந்து பேர் மட்டும் பிழைக்கவைக்கப் பட்டனர்.

விடுதலைப் புலிகள் இயக் கத்தின் போராட்ட இலட்சியத்துக் காக நான் பட்ட அனுபவங்களில், இதுவே எனது ஆன்மாவை உலுக்கிய மிக வேதனையான சம்பவமாகும்! (வளரும்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 1929 - 10 - 08



விண்சிறக்க 2006 - 03 - 10

அமரர்

## சின்னத்தம்பி கந்தையா

நவாலி வடக்கு, மானிப்பாயில் சிறப்போடு வாழ்ந்து இறையடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் மரணச் சடங்கில் பங்குபற்றி எமக்கு ஆறுதல் சொல்லித் தேற்றியவர்களுக்கும் இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் அன்பு நிறைந்த நன்றிகளை அள்ளி நாம் சொரிகின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(49123)(21.17.16)

# நோயற்ற வாழ்விற்கு

## உங்கள் நிறையை கட்டுப்படுத்துங்கள்.



இந்தியாவில் பிரசித்தி பெற்ற ஆயுர்வேத (OBENYL) வில்லைகளைப் பாவிப்பதன் மூலம் உங்கள் நிறையை மாதம் ஒன்றிற்கு 2 - 3 கிலோ வரை குறைத்துக் கொள்ளலாம்.

இது சகல வயதினருக்கும், ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்புடையது.

பக்கவிளைவுகள் அற்றது.

**பாவிக்கும் முறை**

*சாப்பாட்டிற்கு பின் 2 வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு 3 வேளை பயன்படுத்தவும். (வைத்திய ஆலோசனையை பின்பற்றவும்.)*

**யாழ்ப்பாண விநியோக முகவர்:**

**ஜெகன் பாமஸி**

462 'B' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 - 222 2194, 222 3191

இறக்குமதி செய்து சந்தைப்படுத்துவோர்:

லங்கா ஹேபல்ஸ் (பிரை) லிமிடெட்,
14, ஸ்ரேசன் வீதி, தெஹிவளை.
தொலைபேசி:- 543217, 5432100
உடன் அழைப்பு:- 0777 395194

(C46560)

# தீவுக்கான மருத்துவ உதவிக்கப்பல்

யாழ் மாவட்ட அரச அதிபர்
திரு.க.கணேஸ்
அவர்களால் குறிகாட்டுவான் துறையில்
வெள்ளோட்டம் நடைபெறவுள்ளது.

humedica INTERNATIONAL
AMBULANCE BOAT

# AMBULANCE BOAT FOR THE ISLANDS

COMMISSIONING ON » 11 APRIL 2006 7.30 AM AT KURIKADDUVAN JETTY

COMMISIONING BY > K.GANESH (GOVERNMENT AGENT JAFFNA)




(49122)

## ஏனைய 21 உள்ளூராட்சி சபைகளுடன் கொழும்பு மாநகர சபை தேர்தல் மே 18ஆம் திகதி

கொழும்பு மாநகர சபை உட்பட இருபத்திரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கு அடுத்த மாதம் 18ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தார்.

கொழும்பு மாநகர சபை, கம்பஹா மாநகர சபை உட்பட 22 உள்ளூராட்சி சபைகளில் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருந்ததால் அந்த இடங்களில் - ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடந்த மார்ச் 30ஆம் திகதி -தேர்தலை நடத்த முடியாமல் போயிற்று. நீதிமன்ற உத்தரவுகளை அடுத்து ஒத்தி வைக்கப்பட்டிருந்த இந்தத் தேர்தலே எதிர் வரும் மே 18ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. (க)

## சிற்றூழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 5வருடங்களுக்கு மேலாக தற்காலிக ஊழியர்களாகக் கடமை புரிந்த சிற்றூழியர்கள் 12பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஒக்ரோபர்மாதம் கொழும்பில் நடைபெற்றது. நேர்முகப்பரீட்சைக்குச் சென்ற 20 பேரில் 12 பேருக்கே நிரந்தர நியமனம் வழங் கப்பட்டுள்ளது. கடந்த ஜூலைமாதம் முதலாம் திகதியி லிருந்து இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-15)


### வீடு விற்பனைக்கு

56, அம்மன் வீதி, கந்தர்மடத்தில் 2பரப்பு 14.45 குளி காணியுடன் கூடிய நவீன முறையில் அமைக்கப்பட்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு. A/C அறைகள், நவீன குளியலறை வசதிகள், வாகனத் தரிப்பிட வசதிகள் என்பவற்றுடன் கூடியது. NGO இற்கு ஏற்றது.

தொடர்புகளுக்கு: 0214590276 or 0776701293

(49143)(26.11.16)

### பாடசாலை மாணவர்களுக்கான சேவை

சகல பாடசாலைக்குமான பஸ் சேவை
ஆரம்பம்: ( S.S.S.ரவல்) R.ரவிசேகர்.
தொடர்பு: இல.88, ஆடியபாதம் வீதி, கொக்குவில்,
T.p.:077 9002982, 077 9011060

(49076)(26.11.16)

### பௌதிகவியல் / இணைந்த கணித வகுப்புகள்

பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகச்சிறப்பாக மேற்படி பாடங்கள் 20 வருட வினாத்தாள்கள் உட்பட 3000 இற்கு மேற்பட்ட M.C.Q. விளக்க விடைகளுடன் வழங்கப்படும். தனிப்பட்ட முறையில் கற்பவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் (1 வருடம்) முழுப்பாடத்திட்டமும் நிறைவு செய்யப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. பயிற்சிகள் வழங்கப்பட்டு திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு: T.P.No:077 6648751,
R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.) Dip. In Ed.
17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(49158)(26.11.16)

### விற்பனையாளர் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை. (ஆண்கள் மட்டும்)

* வெளி இடங்களில் இருப்பவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

(49059)(26.11.16)

த.குமாரசாமி அன் சன்ஸ்,
248/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


### 31ஆம் நாள் நினைந்துருகல்



யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி மு.ஜெயராணி அவர்களின் பாசமிகு தாய்

**திருவாட்டி பிள்ளையம்மா முருகேசு**

அவர்களின் மறைவையொட்டி எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

(49158)(26.11.16)

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை.




சிவமயம்

### ஸ்ரீ விநாயக ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ். | சுக். | புதன் |
| சனி | | | சந். |
| சனி | | | ராகு |
| குரு | செவ். | சுக். | புதன் |

V.நாகராசு சுவாமிகள்
N. முனியம்மா T.P.: 077 9582596

துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. இப்போது இலங்கையில் ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி சண்டை, வெளிநாட்டுப் பிரயாணம், பிரிவு, காதல் திருமணம் தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல்கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றுக்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தமிழ்மொழியில் சொல்லப்படும் (ஆந்திரா மாந்திரீகர்) நீங்கள் பல ஜோதிடரை நம்பி ஏமாந்திருக்கலாம். அதேபோல் எங்களையும் எண்ண வேண்டாம். எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் மேலும் இங்கே தங்க எண்ணியுள்ளோம். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**V.நாகராசு சுவாமிகள்**
*"பிள்ளையார் இன்",*
*31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.: 077 9582596 Room No: 05

(49101)(32-26.11.16)


### வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும்
## கலை இலக்கியப் பெருவிழா-2006

*இடம்:* யா/இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்
*காலம்:* 10.04.2006 திங்கட்கிழமை
11.04.2006 செவ்வாய்க்கிழமை
*நேரம்:* பி.ப.2.30 மணி முதல்
*தலைமை:* திரு.சி.திருவாகரன் அவர்கள்
*(கலாசாரப் பேரவை பிரதேச செயலர், வலி.தெற்கு)*
*பிரதம விருந்தினர்:*
* திரு.செ.பத்மநாதன் அவர்கள் - திட்டப்பணிப்பாளர் *(வடக்கு- கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம், திருகோணமலை-முன்னாள் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)*

**11.04.2006 செவ்வாய்க்கிழமை**
*தலைவர்:*
செல்வி த.மஞ்சுளாதேவி
*(உதவி பிரதேச செயலாளர், வலி.தெற்கு, உடுவில்)*
*பிரதம விருந்தினர்:*
திரு.க.கணேஸ் அவர்கள்
*(அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)*

*கலைஞர் கௌரவிப்பும் பிரதேச கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி/48751)(26.11.16)

கலாசாரப் பேரவை, வலி.தெற்கு, உடுவில். — பிரதேச செயலாளர், வலி.தெற்கு, உடுவில்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியுடனான (கார்ப் திட்டம் RDA-ADB) பரந்தன்-பூநகரி வீதி நிர்மாணத்துறை பதவிகள் வெற்றிடம்

### குளோபல் எஞ்சினியரிங் கொன்சல்ரன்ஸ் அன்ட் டெவலப்மென்ற் (பிறைவேற்) லிமிட்டெட்., கிளிநொச்சி.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் பரந்தன் - பூநகரி வீதி அபிவிருத்தி நிர்மாண வேலைகளில் ஒப்பந்த அடிப்படையில் (1½ - 2½ வருடங்கள்) பணிபுரிவதற்கு பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் மேற்படி நிறுவனத்தால் கோரப்படுகின்றன.

விண்ணப்பத்துடன் சுயவிவரம், கல்வித்தகைமைச் சான்றிதழ், வேலை முன்னனுபவச் சான்றிதழ் என்பவற்றின் புகைப்படப் பிரதிகளும் அனுப்பப்படவேண்டும். அத்துடன் தங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் சிறந்தது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**1. திட்டப் பொறியியலாளர்**
B.Sc. பொறியியல் (சிவில்) அல்லது அதற்கு சமமான தகைமையும், வீதி அமைக்கும் வேலையில் இரண்டு வருட அனுபவத்துடன் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**2. பொறியியலாளர்**
B.Sc. பொறியியல் (சிவில்) அல்லது அதற்கு சமமான தகைமையும், வீதி அமைக்கும் வேலை அனுபவத்துடன் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**3. Quantity Surveyor**
City and Guilds அல்லது N.C.T. (சிவில்), பல்கலைக்கழகப் பட்டதாரி இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**4. தொழில்நுட்ப அலுவலர்**
N.D.T. அல்லது அதற்கு சமமான தகைமை, வீதி அமைக்கும் வேலை அனுபவத்துடன் இரண்டு வருட அனுபவம், அல்லது N.C.T. (சிவில்) இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**5. வேலை மேற்பார்வையாளர் (W.S)**
N.C.T.அல்லது அதற்கு சமமான தகைமையுடன் இரண்டு வருட அனுபவம் அல்லது ஐந்து வருடத்திற்கு குறையாத வீதி வேலை அனுபவம்.

**6. சிரேஷ்ட பட வரைஞர் (Senior Draftsman)**
N.C.T. (சிவில்) அல்லது அதற்கு சமமான தகைமையுடன் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**7. நில அளவையாளர்**
நில அளவையாளர் தகைமையுடன் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**8. கணனி இயக்குநர்/எழுதுநர்**
க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த.(உயர்தரப்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன், கணனிப் படவரைஞர் (Auto Cad), M.S.Office தகைமையுடன் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**9. சாரதி**
இலகு வாகன, கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் ஐந்து வருடத்திற்கு குறையாத அனுபவம்.

(சி/48746)(26.1.16)

**விண்ணப்பங்கள் 05.05.2006ஆம் திகதிக்கு முன்னதாக *'பணிப்பாளர், குளோபல் எஞ்சினியரிங் கொன்சல்ரன்ஸ் அன்ட் டெவலப்மென்ற் (பிறைவேற்) லிமிட்டெட்., கிளிநொச்சி'* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும்.**

புத்தாண்டை முன்னிட்டு திருமுருகன் கொம் நெற் வழங்கும் விசேட சலுகைகள்

FedEx express

இன் புத்தாண்டு விசேட சலுகைகளை நீங்கள் அனுப்பும் கடிதங்கள், பொதிகள் எவையாயினும் 10% விசேட சலுகைகளுடன்
முதலாம் பரிசு தங்க நாணயம் மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

| சுவிஸ்லாந்துக்கான | லண்டனுக்கான |
| --- | --- |
| 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/= | 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/= |

குறிப்பு: இந்தச் சலுகை புத்தாண்டு வரை மட்டுமே.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

44, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310
38, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
நகர் தொலைத்தொடர்பகம் 108, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

யாழ். நகரில் இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்



**மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை**

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்கரப் பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/- மட்டும்

ஐந்து நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்

*விசேட விலைக் கழிவு*

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 450/-
சுவிஸ் 600/-

**RAINBOW TRAVELS & TOURS**

32-1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237, 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்) (சி/48767)


# வேலை வாய்ப்பு

சாவகச்சேரி நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது கணனி நிறுவனத்திற்கு கணனிக் கல்வியை கற்பிக்கக் கூடிய கணனித்துறையில் (Diploma) கல்வி பயின்ற பெண்கள் தேவை. தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தங்களது சுயவிவரத்தினை 16ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.


Director,
UNI TECHNOLOGY,
ICT Education Trainers,
21/3, Aadijapatham Road,
Thirunelvely,
Jaffna.

(49132) (27-39-17)


# பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்த சுமார் 30 வருடங்களாக அநுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்




டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியூற், றீப்ளேஸ்மன்ட்ஸ், ஸ்டுடியோ பிளாஷஸ், கொம்பியூடரைஸ்ட், பிளாஷ் கன்ஸ்ஹை - பை எம்பிலிபையர்ஸ, சற்டலைட்ஸ, LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல் செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், இலக்ரோனிக் டைப்ரைட்டர்கள், மைக்ரோவேவ்ஸ் ஒவன், பொலிஷர், பிளென்டர், மின்சார விசிறிகள், குளிரூட்டி, சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

GRAYON

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போண் 2575480. 2565756

P.G மாட்டினுக்கும் H.N.B வங்கிக்கும் எதிரிலும் ரேணுகா ஹோட்டலுக்கு அருகிலும் [கடல் பக்கம்]


## வாகனம் மோதி ஒருவர் காயம்

தென்மராட்சி, ஏப்.9

வாகனத்திலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முயன்ற இளைஞன் மற்றொரு வாகனத்தினால் மோதுண்டு காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் நுணாவில் மேற்கு தேவாலயத்திற்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கோபாலபிள்ளை இளங்குமரன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

விபத்தில் காயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-117) (39)

## வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி, ஏப்.9

தென்மராட்சி கல்வி வலயத்தினரும் யாழ்.பல்கலைக்கழகத்தினரும் இணைந்து ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வணிகக் கல்வி, கணக்கீடு, பொருளியல் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகளும்-

18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும்- சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடை பெறும்.

அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு களில் மேற்படி பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களும் இதில்தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117) (39)

## கைதடிப் பாடசாலைக்கு கணனி அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப்.9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்திற்கு கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி, மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் லயன் ஸ்ரீபன் லெனாட், வலயத் தலைவர் லயன் த.அன்பானந்தன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (எ-117)

## நெடுந்தீவு மேற்கு மின் விநியோகம்

நல்லூர்,ஏப்.9

இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண அத்தியட்சகர் பிரிவு நெடுந்தீவு மக்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக மேற்குப் பகுதிக்கு மின்விநியோகத்தை வழங்கும் என நெடுந்தீவு மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு மின் விநியோகத்தை விஸ்தரிக்கும் பொருட்டு இரண்டு புதிய மின்மாற்றி இயந்திரங்கள் நெடுந்தீவுக்கு எடுத்துவரப் பட்டிருப்பதுடன் எதிர்பார்த்த சில வீதிகளுக்கு மின் வயர்களை இணைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுவதாகவும் பொதுமக்கள் கூறினார்கள். (3-111) (32)

## ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் பழைய மாணவர் சங்கம்

**வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒன்று கூடலும்**

இடம்: கல்லூரி பிரதான மண்டபம்
காலம்: 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை

*பிரதான நிகழ்வுகள்*

* *காலை 9.30* : விளையாட்டு நிகழ்வுகள்
* *மதியம் 12* : மதிய விருந்து
* *பி.ப. 1.30* : பொதுக்கூட்டம்

கல்லூரியில் இடம்பெற்று வருகின்ற பவளவிழாக் கொண்டாட்டங்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் பழைய மாணவர்களின் பங்களிப்புத் தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

| வ.ஆறுமுகம் *தலைவர்.* | (சி.48731) (39-17) | க.இராசதுரை *செயலாளர்.* |
| --- | --- | --- |

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 - 11 - 1947



மறைவு 12 - 03 - 2006

**திருமதி சத்தியபாமா இரங்கசாமி (பாமா)**

பாசத்தின் முதல் உறவே நாம்
பாரினிலே உள்ளவரை
காலமென்ன, தூரமென்ன எமைவிட்டு
கலையாது உங்கள் நினைவு

கடந்த 12.03.2006 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சத்தியபாமா (பாமா) இரங்கசாமி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை சாட்டி வெள்ளைக் கடற்கரை புண்ணிய தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் 11.04.2006 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நிர.முகவரி:- ஐயர் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
த.முகவரி:- காளிகோயிலடி, கரம்பொன்கிழக்கு, ஊர்காவற்றுறை.
தகவல்:- குடும்பத்தினர். (48865)

உ
சிவமயம்



**மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம்**
**அருள்மிகு ஸ்ரீஞான துர்க்கை அம்பாள் திருக்கோயில்**

## மணவாளக் கோல நவகுண்ட பக்ஷ சகஸ்ர 1008 கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம்

**பார்த்திப வருஷம் பங்குனி உத்த்ரம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (11.04.2006)**

பார்த்திப வருஷம் பங்குனி மாதம் 28 ஆம் நாள் (11.04.2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி முதல் விநாயகர் வழிபாடு, யாகபூசை, தீபாராதனை, வேதவஸ்தோத்தி, திருமுறை பாராயணம், அனந்த கோடி, நமஸ்காரம் அந்தர்பலி, பகிர்பலி தானாதிகள் சர்வமங்கள வாத்திய சகிதம் பிரதான கும்பங்கள் வீதி பிரதக்ஷணம் 10 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து மஹாஹவீர், நிவேதனம் யாக உத்வாசனம், எஜமான் அபிஷேகம், விஷேட பூசை அம்பாள் திருவீதி உலா வரும்போது வாக்களிக்கும் தாயானவள் சூரியவாளின் மீது ஏறிவரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அம்பிகையின் நிகழ்வினைக் கண்டு அகமகிழ்வீராக.

*திஷ்டா குரு:*
**சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள்,**
**கலட்டி விக்கினேஸ்வரா தேவாலயம்.**

*சங்காபிஷேக பிரதம குரு:*
**சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள்,**
**கிரியா கலாமணி,**
**மீசாலை மேற்கு நரசிங்க வைரவர்,**
**தேவஸ்தான பிரதம குரு.**

*அருளாசியுரை*
* **சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
( 2 ஆவது குருமகா சந்நிதானம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்)

*உபயம்:*
**திரு.க.க.தியாகராசா**
குடும்பம்,
சங்கத்தானை சாவகச்சேரி.

* **சி.கா.கமலநாதன்**
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
மிருசுவில், துர்க்காபுரம்.

**திரு.க.உதயன்**
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

*தேவஸ்தான பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்*
* **சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா**
* **சிவத்திரு ந.முகுந்தன் ஐயா**
வாக்களிக்கும் தாய்
* **சிவத் திருமதி நவரத்தினம் மனோன்மணி அம்மா**

**ஆதீனதர்ம கர்த்தா.**

11.04.2006 (49024)(39-11-17)

## புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை

ஸ்ரார் மல்ரி பில் சென்ரரில் புத்தாண்டையொட்டி சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 21", 25" Sony T.V. மற்றும் அம்பிளிபயர், அதற்குரிய ஸ்பீக்கர் என்பன மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஸ்ரார் மல்ரி பில் சென்ரர்,**
273, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(49164)(32-17)



## தேவை

எமது புத்தகசாலைக்கு கணக்காளர், **Bill Clerk** (பெண்கள்) தேவை. விரும்புவோர் தமது சுய விவரக்கோவையுடன் நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
(சி/48696)(32-15-11)

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.


## ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி
### ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
வருடாந்த பங்குனி
### குளிர்த்தி விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பார்த்திப வருஷம் பங்குனி மாதம் 27ஆம் நாள் (10-04-2006) திங்கட்கிழமை பகல் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் திருக்குளிர்த்தி விழா இனிதே நடைபெறும். அத்தருணம் அடியார்கள் யாவரும் வருகை தந்து அம்பிகை அருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சுபமஸ்து

செருத்தனைப்பதி,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

ஷ ஆலய அறங்காவலர்.
(49154)(26.32.17)





அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567
(C-48633)
100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90/=



# UNIT
## NEW YEAR OFFER

| | |
|---|---|
| **Mother Boards** | |
| AsusP4V8X-MX-UAYZ | 6600/- |
| AsRock P4i65-Intel-SATA | 6900/- |
| AsRock 775i65 - Intel-SATA | 8000/- |
| AsRock K8NF4G SATA2-AMD | 8000/- |
| Intel Original LGA D101 | 9400/- |
| **Hard Disk** | |
| 40 Gb | 5750/- |
| 80 Gb | 6600/- |
| **Display Cards** | |
| 64 Mb AGPVGA (NVIDIA) | 3900/- |
| 128 Mb AGPVGA (NVIDIA) | 5500/- |
| PCI Express VGA 128MB | 8750/- |
| **Optical Drives** | |
| CDROM HP | 1900/- |
| CD-RW SONY | 3300/- |
| CD-RW ASUS | 3700/- |
| DVDSONY | 3250/- |
| DVDCOMBO SAMSUNG | 4900/- |
| DVD-RW | 7400/- |
| **Monitors** | |
| View Sonic 15" | 11600/- |
| DaeWoo15" | 11200/- |
| **Woofers** | |
| Logitech 2.1 M20 | 3000/- |
| Perx 4.1Home Theatre | 6000/- |
| Perx 4.1Home Theatre | 7000/- |
| Perx 5.1 Home Theatre (5000W) | 14000/- |
| Perx 5.1 Home Theatre (8000W) | 20000/- |
| Perx 2.1 Home Theatre (7200W) | 24000/- |
| Perx 5.1 Home Theatre (8200W) | 30000/- |
| **Printers** | |
| Canon Pixma IP1000 | 5400/- |
| HP 3920 | 5500/- |
| HP 3744 | 5700/- |
| HP LaserJet 1020 | 19200/- |
| Canon Laser Shot 2900 | 18200/- |
| **TV Tuner** | |
| Internal cum Capture | 4750/- |
| External | 5000/- |
| **Scanner** | |
| Benq | 5600/- |
| Canon LIDE 25 | 7300/- |
| KeyboardsFrom | 400/- |
| MouseFrom | 200/- |
| External HDD BAY | 2500/- |
| Speaker | 550/- |
| Processor Fans (Intel Original) | |
| P4 PGA | 1000/- |
| P4 LGA | 1500/- |
| ATX Casing From | 3000/- |
| **UPS** | |
| PowerTree 650VA | 4300/- |
| DCP / Sunpac 650VA Auto Shutdown | 4600/- |

**All HP, Canon Laserjet Original Toners & Inktek Max toners**
Special prices available for Resellers, assemblers, GO & NGO's

Used Monitors Available

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.
T.P: 021 - 4590720



## வெளிநாட்டில் உயர்கல்வி



Your VISA to the World
Basic Qualification G.C.E. (O/L)

### STUDY IN LONDON
CANADA, MALAYSIA, SINGAPORE CYPRUS & INDIA

ஒரு வருட மலேசியா Midas College இன் டிப்ளோமாவின் பின் London இல் பட்டப்படிப்பு

Available Courses

| | |
|---|---|
| Management | Hotel Management |
| Business Ad. (BBA, MBA, Phds) | Travel & Tourism |
| Marketing | Engineering (Aerospace |
| HRM | Electrical & Electronical etc...) |
| Law | Medicine |
| Computer Science | Dental |
| IT Networking | Fine Arts |
| Pattern Designing & Textile | Beauty Culture |
| Nursing etc | Shipping Courses |

All Courses are available in any field

- பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
- 1000 £ Scholarship for UK University

**COLLEGEVIEW International**
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113166
Email : collegeview@visualnet.lk



## சித்திரைப் புத்தாண்டு சிறப்புத்தள்ளுபடி
### உலகெங்குமுள்ள உறவுகளுடன் உரையாட

SLT PASSPORT
Pre-paid telephone card for International & Local calls

**(100/=, 250/=, 500, 1000/=)**

**தொலைபேசி அட்டையைப் பாவிப்பதன் மூலம் 10% விலைக்கழிவை ஏப்ரல் 10 முதல் 17 வரை பெற்றுக்கொள்ளுங்கள்.**

மேலும் விவரங்களுக்கு:

**SRI MURUGAN**
Telecommunication & Agency Post Office,
303, K.K.S.Road, Jaffna.
T.P.: 222 5392
(சி/48741)(26.32.17)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 04 - 1922



உதிர்வு 21 - 03 - 2005

அமரர்
### ஐயம்பிள்ளை கனகரத்தினம்
(உடையார் அவெனியூ, ஐயனார் கோயிலடி.)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் துலாவை, அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற சிறாப்பர் (கொழும்பு போட்கொமிசன்) எமது ஒளிவிளக்கை ஓராண்டு நினைவஞ்சலியில் நினைவுகூருகிறோம்.

*மனைவி:* செல்லம்மா
*பிள்ளைகள்:* புவேனந்திரன், பத்மினி, சாந்தினி, குகேந்திரன், சரோஜினி, ஞானேந்திரன்.
*மருமக்கள்:* கமலேஸ்வரி, இராசலிங்கம், சத்தியவடிவேலு, சீதாதேவி, கனேசலிங்கம், ஞானஜோதி
*பேரப்பிள்ளைகள்:* சுஜீவன், புஜீவன், ரஜீவன்-றஜீந்தன், நினோதன் - சாஜினி, சதன்- சுஜீதா, அட்சகா, விஸ்னுகா, ஆராதனா - சஜிதா, நிவோதா - சுஜன், தமிழினி.

*துலாவை, அல்வாய்.*


## GREEN MEMORIAL HOSPITAL, MANIPAY
### கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்
### PHYSIOTHERAPY SERVICE
### இயன்முறை சிகிச்சை சேவை

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய இயன்முறை சிகிச்சைப் பிரிவு (Physiotherapy Unit) கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் இயன்முறை சிகிச்சை மருத்துவராக இயன்முறை சிகிச்சை நிபுணர் L.S.துஷ்யந்தன் B.P.T. (IND), MIAP பணிபுரிகின்றார். இச்சிகிச்சை மூலம் மூட்டுவலி, கழுத்து வலி, முதுகுவலி, தோள்மூட்டு வலி, வாதம், பாரிசவாதம் (stroke), நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள், தசைப்பிடிப்பு, சுழுக்கு, joint stiffness, Parkinson's disease, cerebral palsy போன்றவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்படும்.

பார்வை நேரம்: திங்கள் 5.30 பி.ப. - 7.30 பி.ப.
வியாழன் 5.30 பி.ப. - 7.30 பி.ப.
சனி 9 மு.ப. - 5 பி.ப.

மேலதிகமாக இம்மாதம் (சித்திரை) 11ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம் திக்திகளில் காலை 9மணி தொடக்கம் மாலை 5 மணிவரை சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசி இல: 021 222 2747 (49127)(32.17)



## தினம் ஓர் அதிர்ஷ்டசாலி...

Annai Nagaa Food City
For all your daily needs

அன்னை நாகாவின் புத்தாண்டு விசேட சலுகைகள்
நீங்களும் ஒரு வெற்றியாளராக இன்றே விரையுங்கள்
அன்னை நாகா பூட்சிற்றி

மார்ச் 19 முதல் மே 30 வரை

இல. 175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.222 5515

**கடந்த வார அதிர்ஷ்டசாலிகள்:**
1) A.எமின் - கோப்பாய் 2) S.நிக்சன் - குப்பிளான் 3) M.துசாரா - திருநெல்வேலி
4) P.மகினன் - யாழ்ப்பாணம் 5) யு.கமிலியா - யாழ்ப்பாணம்
6) S.R.சர்வேந்திரன் - யாழ்ப்பாணம் 7) R.வினோத் - வல்வெட்டித்துறை



உ

ஓம் நமோ நாராயணாய

## மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பங்குனி பொங்கல் உற்சவம்

எதிர்வரும் 12.04.2006 புன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொங்கல் பூசைகள் நடைபெறும் என்பதை எம்பெருமான் அடியார்களுக்கு அறித்தருகிறோம்.

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை.

(49104) (24-11-17)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச்சபைக்கூட்டம் இன்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல் சம்பந்தமாக நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

✱ குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நெறியாளர் கட்டளைப்படி,
கா.பாஸ்கரன்,
செயலாளர்.

(சி/48759) (24-11-17)

## VNC கொங்கிறீற் கற்கள்

உறுதிமிக்க அடுக்குமாடி வீடுகள், மதில்கள் ஆகியவற்றைக் கட்டக் கூடிய வகையில் கண்டாவளை மண், கருங்கல், கருங்கல் தூள் மற்றும் ½", 5/8", ¾", 1", 1½", 2" சல்லிக் கற்கள் கலந்து 100 அடி நீளம் 60 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் கொங்கிறீற் கற்கள், பூக்கற்கள், தூண்கள் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிடப்பட்டு விற்பனையாகின்றது. கற்கள் அறுப்பதற்குக் கலக்கப்படும் கல், மண் வகையும் 1 அடி நீளம் 4 அங்குல அகலக் கல் ஒன்றின் விலையும் வருமாறு:

| | |
|---|---|
| 1. நா.கோ. மண், கச்சாய் மண், ½ சல்லிக் கல் கலக்கப்பட்டு அறுக்கப்பட்ட கல் ஒன்றின் விலை | ரூபா 29/- |
| 2. கண்டாவளை மண், நா.கோ. மண் + ½",5/8" சல்லிக் கல் | ரூபா 32/- |
| 3. கண். மண் + 5/8", ¾" சல்லிக்கல் | ரூபா 34/- |
| 4. தனி கண்.மண் | ரூபா 36/- |
| 5. கண். மண் + 5/8", ¾" 1" சல்லிக் கல் | ரூபா 38 /- |
| 6. கண். மண், கருங்கல் + 5/8" சல்லிக்கல் | ரூபா 40/- |
| 7.கண். மண், கருங்கல் + ¾" சல்லிக்கல் | ரூபா 42/- |
| 8. கண். மண் + கருங்கல் | ரூபா 44/- |
| 9. கண். மண், கருங்கல்+1" சல்லிக் கல் | ரூபா 46/- |
| 10. தனி கருங்கல் | ரூபா 48/- |
| 11. கண். மண், கருங்கல் +¾", 1½" சல்லிக் கல் | ரூபா 52/- |
| 12. கருங்கல் + ¾", 2" சல்லிக்கல் | ரூபா 55/- |

இவை அனைத்தும் ஒரு பைக்கற் சிமெந்தில் கற்கள் எண்ணிக்கை 55-60 வரை இவற்றுடன் தண்ணீர்த் தொட்டிகள், பூங்கன்றுப் பாத்திகள் அமைப்பதற்கு ஏற்ற 1 அடி நீள 3'' அகல கொங்கிறீற் கல் விலை 26/-, அலுமாரி பிளாற் அமைப்பதற்கு ஏற்ற 1 அடி நீள 2'' அகல கல் விலை 24/-, தண்ணீருக்குள் பாவிக்கக் கூடிய வகையில் 1 அடி நீள 5'' அகல கிணற்று வளைவு கல் விலை 46/-, கடல் உப்புக் காற்றின் தாக்கத்தை எதிர்க்கக்கூடிய வகையில் அறுக்கப்படும் கொங்கிறீற் கற்கள், கம்பிவேலித் தூண்கள், கொட்டில் தூண்கள், பிளாற் (Flat) வகைகள் உங்கள் தேவைக்கேற்ற வண்ணம் உங்கள் விருப்பப் பிரகாரம் செய்துகொடுக்கப்படும். இவைகளுக்கு பாவிக்கப்படும் கம்பிகள் கிறீஸ் பூசப்பட்டு சிமெந்துக்குள் புகுத்தப்படுகின்றன. எனவே, காலை 7 மணி தொடக்கம் பி.ப. 2 மணிவரை கற்கள் அறுக்கப்படுவதை நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவுசெய்து பெற்றுச்செல்லவும். தூர இடங்களுக்கான வாகன கட்டணத்தில் சலுகை வழங்கப்படும்.

VNC கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் அருகில்,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
T.P.: 077 3621328

(49074) (24-11-17)

## மரண அறிவித்தல்

### திருமதி றெஜீனா லூயிஸா அந்தோனிப்பிள்ளை



கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி றெஜீனா லூயிஸா அந்தோனிப்பிள்ளை அவர்கள் 02-04-2006 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் (UK) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி பெனடிக்ற் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சவரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரபல (P.W.D.) ஓவசியர் சவரிமுத்து அந்தோனிப்பிள்ளையின் அருமை மனைவியும் சந்திராணி (U.S.A.), இன்பராணி (TORENTO), மனோராஜா (U.K.), தேவராஜா (U.K.), காலஞ்சென்ற தவராணி, குணராஜா (TORENTO), மகேந்திரராஜா (MONTREAL) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr. பாக்கியநாதன் (U.S.A.), ஜேம்ஸ் மலக்கியாஸ் (கணக்காளர் TORENTO), ரதினி (U.K.), வதனா (U.K.), பெனிற்ரா (TORENTO), ரஞ்சோ (MONTREAL) ஆகியோரின் அன்பு மாமியும் Dr.நளினி (U.S.A.), Dr.ரதினி (U.S.A.), வதனி (U.S.A.), ரஜீஸ், ரஜித்தா (TORENTO), நிருக்ஷா, நிலான் (U.K.), நிஷானி, நிரூபன் (U.K.), றோஷாணி, றோஷான் (TORENTO), அல்வின், தனுயா, வினோத் (MONTREAL), Dr.ராஜன் (U.S.A.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சந்திராணி 716 -568 -0870, இன்பராணி 416-299-5528, குணராஜா 416-499-1259, மனோராஜா 208-898- 6324, தேவராஜா 208-958-7119, மகேந்திரராஜா 514-696-1943.

(49155) (24-11-17)





## பிறந்தநாள் வாழ்த்து

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணகுமார் - தயாவதனி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி

**லக்ஸ்மிதா**

இன்று (09.04.2006) தனது முதலாவது பிறந்த தினத்தை பிரான்ஸில் உள்ள தாயின் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

லக்ஸ்மிதாவை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமா, சித்தப்பாமார், சித்தி (கனடா), மச்சாள்மார், தாத்தா குடும்பம், சின்னப்பம்மா குடும்பம், பூட்டிமார் மற்றும் பிரான்ஸில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்கா, தம்பி, மச்சான்மார் ஆகியோர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ நல்லூர் முருகன் அருள் வேண்டி வாழ்த்திநிற்கின்றனர்.

செல்வி லக்ஸ்மிதா

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(49171) (24-11-17)

- அப்பப்பா -

## பிறந்தநாள் வாழ்த்தும் அழைப்பும்







திரு.திருமதி ஆனந் + சுகந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **ஆ.லக்ஷிகன்** தனது முதலாது பிறந்த தினத்தை இன்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் அவரது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றார். அவரைப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறார்கள். அவரது அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், சித்தி, பெரியப்பா, பூட்டன், பூட்டாச்சி, அத்தை, சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவின்ர்கள் இறைவன் அருளால் பல்கலையும்பெற்று பல்லாண்டு காலம் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

551, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: அப்பா.

ஆ.லக்ஷிகன்

(49103) (24-11-17)

## சைவநெறித் தேர்வு

தென்மராட்சி,ஏப்.9

யாழ். சைவ பரிபாலனை சபையினரால் கடந்த வருடம் (2005) நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தேர்வில் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை மாணி அனுஷா பஞ்சலிங்கம் தரம் 8 வகுப்புத் தேர்வில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை 4ஆம் தர மாணவி இராகவன் இராகவி இரண்டாம் இடத்தையும் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய தரம் 9 வகுப்பு மாணவன் தியாகராசா அஜந்தன் மூன்றாம் இடத்தையும் தேர்வில் பெற்றுள்ளனர். (3-117) (24)

## நிதித்துறையின் அறிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.9

நடமாடி மீன், மரக்கறி என்பவற்றை வாணிபஞ்செய்வோர் முத்திரையிடாத நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர் என்றும் -

மேற்படி வாணிபத்திலீடுபடுவோர் தமது நிறுத்தலளவைக் கருவிகளை வருவாய்ப் பகுதி நிறுத்தலளவைப் பிரிவில் முத்திரையிட்டுப் பயன்படுத்தப்படவேண்டும் என்றும் - நிதித்துறையின் நிறுத்தலளவைப் பிரிவு அறிவித்துள்ளது. (எ) (24)

## INSTITUTE OF COMPUTER STUDIES
### கணனிக் கல்வி நிலையம்
### புதிய பிரிவுகள் ஆரம்பம்

MS - OFFICE
DTP
KIDS COMPUTER PROGRAMME
COMPUTER PROGRAMME FOR OFFICERS
COMPUTER HARDWARE ENGINEERING
COMPUTER TYPE SETTING

விண்ணப்ப முடிவு திகதி 13-04-2006

பதிவு மேற்கொள்ளப்படும் ஒழுங்கில் அனுமதி வழங்கப்படும்.

முகவரி ICS
ஒட்டுசுட்டான் வீதி,
புதுக்குடியிருப்பு.

(சி/48753) (24-11-17)

இன்றைய பிறந்த நாளில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 07 - 1918 | 09 - 04 - 1990 |

### அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

*''மனிதருக்கென்றே ஊழியஞ் செய்யாமல்
கர்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்''*
*(எபேசியர் 6:8)*

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
(49142) (18-24-11-17)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 - 07 - 1931 | 24 - 03 - 2002 |

### அமரர் பாக்கியம் செல்வராசா

*திதி: ஏகாதசி 09.04.2006*

*அன்பும் பாசத்துடனும் எங்களை அரவணைத்து வளர்த்த
எங்கள் அம்மாவே! நான்கு ஆண்டுகள்
ஓடி வந்ததம்மா ஆறவில்லை எம் துயரம்.*

இவ்வேளையில் ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு சென்ற மருமகனின் நாள்கள் எண்பத்தைந்துஆகுதம்மா. இறைவனடி சேர்ந்த உங்களை இந்நாளில் நினைவு கூர்ந்து இறைவனை வணங்குகின்றோம்.

(49163) (18-24-11-17)

நி.மு.
பலாலி,
செபஸ்தியார் கோயிலடி.

த.மு.
கர்த்தர் கோயிலடி,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் உற்சவத்துக்கு ஏற்பாடு

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கரைச்சி புளியம்பொக்கணை நாக தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெறவுள்ளது.

ஆலய பொங்கல் உற்சவத்தை ஒட்டி மீசாலை புத்தூர்ச் சந்திக்கருகில் உள்ள பண்டமரபடியில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. ஆலய பொங்கலுக்கான பொருள்களுடன் மீசாலை பண்டமரபடியில் இருந்து சுமார் 10க்கு மேற்பட்ட வண்டில்கள், உழவு இயந்திரங்களில் பக்தர்கள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஏ.9 வீதியூடாக புளியம்பொக்கணை நோக்கி புறப்படுவர். (ஐ-31)

## சிறுநீரகம் தேவை

ஜேர்மனியில் வசிக்கும் A பொசிரிவ் குருதி வர்க்கத்தையுடைய ஒருவருக்கு சிறுநீரகமாற்று சிகிச்சைக்கு அதே குருதி வர்க்கத்தையுடைய ஒருவரின் சிறுநீரகம் தேவைப்படுகின்றது. சிறுநீரகம் தானம் செய்ய விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் (49095) (54-45-15)

(ஜேர்மனிக்கு விசாவும் இதர சலுகைகளும் உண்டு)

தொலைபேசி இல.: 021 4591790, 0602212392


## விற்பனைக்குண்டு

Alumex தயாரிப்பிலான Secksen Bar வகைகளும்
Box பார் வகைகளும் விற்பனைக்குள்ளது
70 mm Sliding Windoor
100 mm Doors
Shop Front
Partition
Casement
Louvers அனைத்து SECN BAR வகைகளும்
அனைத்து BORD வகைகளும் விற்பனைக்குண்டு (4902) (54-45-15)
தொடர்பு: பட்டாபி படமாடம்
இல. 64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222-7821


ஓம் சாய்ராம் சாயிராம், ஜெய்குருதேவ்

## நூல்வெளியீட்டு விழா

கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல், அகராதி

நூலாசிரியர்: திரு. அம்பலவாணர் சண்முகலிங்கம்
(ஆசிரியர், யா/யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி)

காலம் : 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை இன்று
நேரம் : முற்பகல் 9 மணி (புதிய நேரம்)
இடம் : யாழ்/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
தலைவர்: திரு.வி. கணேசராசா அவர்களின்
(அதிபர், யா/யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி) தலைமையில் நடைபெறுகின்றது.

(49162) (54-45-15) அ. சண்முகலிங்கம் - நூலாசிரியர்.


AIMS
Career Development Program
Vacation @ AIMS
Create as you like
Desktop Publishing
இக் கற்கை நெறியானது உங்களது புகைப்படங்களை அழகுற வடிவமைக்க மற்றும் விளம்பரங்களை உருவாக்கவும், பத்திரிகைத் துறை, அச்சகத்துறைகளில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கும்
மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
play as you like
Computing for KIDS
Start on : 15-04-06
Batch I : 9.00 am
Batch II : 4.00 pm
இக் கற்கை நெறியானது தகவல் தொழில் நுட்ப உலகில் உங்கள் குழந்தைகளும் சேர்ந்து வாழ வழி வகுக்கும்
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க......
Batch IV Start on :11.04.06 4.30 pm
Diploma in GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment
மேலதிக விபரங்களுக்கு:
# 118, பலாலி வீதி, தபாற்பெட்டிசந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
மெர்க்குரிப் பூக்கள்
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30,2.30,6.30,9.00,(பி.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகராஸ் சுன்னாகம்
விஜயகாந்த் நடித்த
சுதேசி
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

நாதன்ஸ்சினிமா யாழ்ப்பாணம்
பரத், சந்தியா
நடித்த
காதல்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
தினசரி நான்கு காட்சிகள்





அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப்பயிற்சி
இலவச அறிமுக உரை
நாள் 10.04.2006 திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்: குமாரசாமி மண்டபம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. | கம்பன் கோட்டம், நல்லூர் பின்வீதி நல்லூர்.
பயிற்சி நாள்கள்: 11.04.2006 முதல் 16.04.2006 வரை
பயிற்சிநேரம் : காலை 6 மணி முதல் 8.30 மணி வரை
அல்லது மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை
அன்பில் உணருங்கள் உங்களை உணருங்கள் (சி-48761) (54-45-15)
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544,0777157281


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் (சிவசாமி)



கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் அவர்கள் நேற்று (08.04.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு,
யாழ்ப்பாணம்.
(49184) (54-45-15)
தகவல்:
திருமதி ருக்மணி ஜீவரட்ணம்.
(மனைவி)

## திருமதி கதிரவேலு தெய்வி



கூவில், கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பண்டத்தரிப்பு, சென்மேரீஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு தெய்வி அவர்கள் நேற்று (08.04.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் பாசமிகு மனைவியும் வைரவப்பிள்ளை, கந்தசாமி, முருகையா (லண்டன்), காலஞ்சென்ற மகாதேவா, நாகம்மா, செல்வி (சுவிஸ்), சிவம், சிவசோதி (ஜேர்மனி), சிறீக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரகுமாரி, காலஞ்சென்ற அஞ்சனாதேவி மற்றும் சாந்தி (லண்டன்), சாந்தி, கதிரமலை, லோகநாயகம் (சுவிஸ்), சொக்கன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்மேரீஸ் ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.
(49185) (54-45-15)
தகவல்:
பிள்ளைகள்.

## சடையர் முருகேசு

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் இல. 118-D. 10, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சானா மூனா என்றழைக்கப்படும் சடையர் முருகேசு அவர்கள் நேற்று (08.04.2006) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், அருளம்பலம் (ஆசிரியர் பிரான்ஸ்), காலஞ்சென்ற தம்பிமுத்து (உடையார்கட்டு), மார்க்கண்டு (சிவநகர்), கோபாலபிள்ளை (பொறுப்பு வைத்திய அதிகாரி-உருத்திரபுரம்), சரஸ்வதி (உருத்திரபுரம்), செல்லம்மா (பிரான்ஸ்), மங்கையற்கரசி (உருத்திரபுரம்), சண்முகரட்ணம் (எஸ்.எம்.கோல்ட் கவுஸ்-வவுனியா), சரவணபவன் (பிரான்ஸ்),தர்மரட்ணம் (சுமினா ரேடர்ஸ், பிரான்ஸ்), லோகநாதன் (சரவணாஸ் ஜுவலறி- வவுனியா), கோகுலகௌரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானசௌந்தரி (ஆசிரியை, பிரான்ஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரி, யோகம்மா (உடையார்கட்டு), மனோரஞ்சினி (சிவநகர்), ஞானவதி (தாதிய உத்தியோகத்தர் கிளி. வைத்தியசாலை), காலஞ்சென்ற பிரதம எழுதுநர் இரத்தினம், சுப்பிரமணியம் (பிரான்ஸ்), குலேந்திரதாசன் (நீர்ப்பாசனத் திணைக்களம்-கிளிநொச்சி), திலகவதி (ஆசிரியை, கிளி. திருவையாறு மகாவித்தியாலயம்), பத்மாவதி (பிரான்ஸ்), திலகராணி (பிரான்ஸ்), மனோரஞ்சினி (கொழும்பு), உதயகுலசிங்கம் (அதிபர், வவுனியா கிடாய்ச்சூரி அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உருத்திரபுரம்.
(48769) (54-45-15)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

## கனகசுந்தரம் சிவானந்தவேல் (பத்தர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம்-நாகம்மா தம்பதியரின் மகனாகிய சிவானந்தவேல் அவர்கள் 07.04.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

115, கச்சேரி நல்லூர் வீதி.
(49187 (54-45-15)
தகவல்:
இ. இராசரத்தினம்.
(மைத்துனர்)

# திருமலை தமிழ்ப் பேரவைத் தலைவருக்கு எம் இதய அஞ்சலிகள்



## மாமனிதர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன்

(திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவரும், தமிழ்த்தேசிய பற்றாளரும், இலங்கை வங்கியின் திருகோணமலை கிளை நிறைவேற்று அதிகாரியும்)

*அனலையில் பிறந்து திருமலையில் தவழ்ந்து தமிழ் வளர்த்த தனையன்*
*திருமலை தமிழ்ப் பேரவை தலைவனாய் தமிழ் பற்றாளனாய்*
*தமிழ் மக்கள் துயரிற்குத் துணிவுடன் குரல் கொடுத்து*
*தமிழ் மக்கள் எழிச்சியை தமிழ் மண்ணில் வேரோடி*
*புரட்சியை புன்னகையாய் வன்முறை சாராது செய்திட்ட வேளைதனில்*
*ஜனநாயகத்தை பொறுத்திடாத ஒட்டுப்படைகள் உன்மீது வன்முறை காட்டியது*
*தமிழ் மகன் எவனும் பொறுக்கமாட்டான் பொங்கியெழுவான்*
*இது எங்கள் அஞ்சலி மீது நாம் இடும் ஆணை*
*தங்கள் பணி தொடரும்! உங்கள் இலட்சியம் நிறைவேறும்.*

(சி-48775) (54-45-15)

தேசிய எழுச்சிப் பேரவை,
யாழ். நல்லூர்க் கோட்டம்.

# ஒட்டுப் படைகளை ஒடுக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில் புலிக ளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அவரது இல் லத்தில் வைத்து நோர்வேயின் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான விசேட தூதுவர் ஹன்ஸன் போவர் சந்தித்தபோது புலிகள் தரப்புக்குத் தெரியப் படுத்தப்படிருக்கின்றது.

மேற்படி சந்திப்பு நேற்று லண்டன் நேரப்படி முற்பகலில் மூன்று மணி நேரம் நடை பெற்றது.

விசேட தூதுவர் ஹன்ஸன் போவரோடு நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியான சொன்ட்றி பியோட்விட்டும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கில் சீர் கெட்டுவரும் கள நிலைவரம் குறித்து விசேடமாக கருத்துகள் பரிமாறப்பட்டன.

தமிழ்த் துணைப்படைகளின் வன்முறை நடவடிக்கைகள் அதிகரித்து இருப்பதும் அவற்றை கட்டுப்படுத்தவும் அவற்றின் ஆயுதங்களைக் களையவும் ராஜபக்ஷ நிர்வாகம் தொடர்ந்து மறுத்து வருவதும் விடுதலைப் புலிகளின் தலைமையை விரக்தியிலும் விசனத்திலும் ஆழ்த்தியிருக்கின்றது எனப் பாலசிங் கம் இந்தச் சந்திப்பின் போது அனுசரணைப் பிரதிநிதிகளுக்குத் தெரியப் படுத்தினார்.

ஜெனீவாவில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அடுத்த சுற்றுப்பேச்சுகளில் புலிகள் பங்குபற்றுவதாயின் அதற்கு உதவும் வகையில் இரண்டு முக்கியவிடயங்கள் தொடர்பாக அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என நேற்றைய பேச்சுகளின் போது பாலசிங்கம் சுட்டிக் காட்டினார்.

ஒன்று - ஜெனீவாவில் முதல் சுற்றுப்பேச்சுகளில் அரசு தரப்பு தெளிவாகவழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் அரச கட்டுப்பாட்டு பகுதியில் இயங்கும் தமிழ்த் துணைப்படைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

இரண்டாவது விடயம் - அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுக்குமுன்னர் நடைபெறவிருக்கும் புலிகளின் மிகமுக்கிய மத்தியகுழு கூட்டத்தில் புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகள் பங்குபற்றுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு கண்காணிப்பாளர் சகிதம் படகுப் போக்குவரத்துக்கு வழிசெய்துகொடுத்தல் -

நேற்று நோர்வே தரப்போடு தாம்நடத்திய பேச்சுகள் குறித்து இன்று அதிகாலை உதயனுக்கு தகவல் வெளியிட்ட மதியுரைஞர் பாலசிங்கம் அப்போது கூறியதாவது:-

"தமிழ் ஆயுதக் குழுக்களினால் புரியப்பட்ட வன்முறை நடவடிக்கைகள் பற்றிய விரிவான தகவல்களை நோர்வேயின் விசேட தூதுவருக்கு தெரியப்படுத்தினேன். முதல் சுற்று ஜெனீவா பேச்சுக்குப் பின்னர் துணைப் படைகளின் வன்முறைகள் பல மடங்காகியுள்ளன. இலங்கை இராணுவத்தின் உதவியுடன் கருணா குழுவினரால் எமது இராணு நிலைகள் மீது பல வலிந்த தாக்குதல் நடவடிக்கைகள் மேற் கெள்ளப்பட்டுள்ளன. நாங்கள் இதனால் இழப்புக்களையும் சந்தித்துள்ளோம்.

''ஜெனீவா இணக்கப்பாட்டிற்கு முற்றிலும் முரணான வகையில் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் பொதுவீதிகளில் தமிழ்த் துணைப்படையினர் ஆயுதங்களோடு திரிகின்றார்கள். அவர்கள் சிறுவர்களைக் கடத்துதல், அச்சுறுத்தல், தொந்தரவு செய்தல், மிரட்டிப் பணம் பறித்தல், புலிகளுக்கு ஆதரவான பொதுமக்களை கண்டபடிகொலை செய்தல் போன்ற சம்பவங்களோடு தொடர்புபட்டிருக்கின்றார்கள்.

''இந்த வரிசையில் மிக மோசமான சம்பவம் திருகோணமலையில் தமிழ் அரசியல் தலைவரான விக்னேஸ்வரனை தமிழ்த் துணைப் படையினர் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினருடன் சேர்ந்து கொடூரமாக சுட்டுக் கொன்றமையாகும்.

''துணை ஆயுதப் படைகளின் வன்முறைகள் அதிகரித்திருப்பதும் அவற்றின் ஆயுதங்களைக் களைந்து அவை மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டுவதற்கு அரசு பின்னடித்து வருவதும் அமைதிப் பேச்சுக்களைஅர்த்தமற்றதாக்கிச் சமாதான முயற்சிகளை அபத்தமாக்கிவிட்டன என்பதை நோர்வேத் தரப்புக்கு எடுத்துரைத்தேன்'' என்றார் பாலசிங்கம்.

அன்ரன் பாலசிங்கம் சுட்டிக்காட்டிய விடயங்கள் உட்பட நேற்றைய பேச்சில் பரிமாறப்பட்ட கருத்துகள் குறித்து ஹன்ஸன் போவர் நேற்றைய பேச்சுகளுக்கு நடுவில் ஒஸ்லோவில் இருக்கும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்முடன் தொடர்புகொண்டு அவருக்கு விளக்கினார்.

அதனையடுத்து கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்ட எரிக் சொல்ஹெய்ம் அடுத்த சுற்றுப் பேச்சில் புலிகள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவ அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவருக்கு விளக்கினார்.

இதனையடுத்து தமது ஆலோசகர்களுடனும் தமது படைகளின் உயர் அதிகாரிகளுடனும் கலந்தாலோசனை நடத்திய ஜனாதிபதி, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றின் வன்முறைகளுக்கு முடிகட்ட உரிய நடவடிக்கைகளை உடன் தாம் எடுப்பார் என்ற உறுதிமொழியை சொல்ஹெய்முக்குத் தெரியப்படுத்தினார்.

புலிகளின் கிழக்குத் தளபதிகள் கிளிநொச்சிக்குச் செல்வதற்கான கடல் வழிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை கடற்படை மேற்கொள்ளும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைமை எழுப்பியுள்ள விடயங்களை சுமூகமாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பாராயின் அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுகளில் புலிகள் கட்டாயம் பங்குபற்றுவர் என்று நோர்வே அனுசரணையாளர்களுக்கு மதியுரைஞர் பாலசிங்கம் நேற்று உறுதியளித்தார்.

(உ)(30)

# திருமலை தோப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் கூறுகின்றனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் இராணுவத்தினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். சிறிது நேரம் துப்பாக்கிச் சண்டை நீடித்தது. பின்னர் அங்கிருந்து பின்வாங்கிய இராணுவத்தினர் தோப்பூரில் இரண்டு தரப்புகளினதும் நிர்வாகப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட சூனியப் பகுதிக்குள் நின்றுகொண்டு மீண்டும் புலிகளின் நிலை மீது தாக்குதல் தொடுத்தனர் என்று புலிகளின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தோப்பூர் சண்டையில் தமது தரப்பில் போராளி ஒருவர் உயிரிழந்தார் என்று கிளிநொச்சியில் உள்ள புலிகளின் அரசியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - மூதூர் கிழக்குக் கிராமங்களின் நுழைவாயிலாக உள்ள கணேசபுரம் விடுதலைப் புலிகளின் முன்னரங்கக் காவல் நிலைகள் மீதும் இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். முன்னரங்கக் காவல் நிலைகளில் இருந்து 25 மீற்றர் தொலைவில் இந்தச் ஷெல்கள் வெடித்துச் சிதறின என்று தெரிவிக்கப்படுகின்றது.

மூதூர் கிழக்குப் பிரதேசப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நேற்றுச் சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்தன.

மூதூர் கிழக்கில் உள்ள கணேசபுரம் நோக்கி கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமில் இருந்து காலை 8.20 மணியளவில் ஆட்லறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பல வீடுகள் சேதமடைந்தன. மூதூர் கிழக்கில் உள்ள கடற்கரைச் சேனையில் வீட்டிற்கு வெளியே நின்றிருந்த செல்லத்தம்பி பாலசுப்பிரமணியம் (வயது -52) என்பவர் இராணுவத்தினரின் தாக்குதில் படுகாயமடைந்தார். இராணுவத் தாக்குதல் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஐ-14)(30)

# மேலும் பல அமைப்புகள் கண்டித்து அறிக்கை

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலை வர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மேலும் பல பொது அமைப்புகள் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தீவக பொது அமைப்புகளின் ஒன்றியம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமம் கிழக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஆகிய அமைப்புகள் கண்டன அறிக்கைகளை விடுத்திருக்கின்றன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், மா.க.ஈழவேந்தன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரான அ.அடைக்கல நாதன் ஆகியோரும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

(ஐ)(30)

# தலைநகரில் விடுதலைக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட் டிற்காகவும் ஓயாது ஒலித்த ஒரு பெருங் குரல் இன்று ஒடுங்கிவிட்டது. தமிழ்த் தேசி யத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முது கெலும்பாக நின்று முனைப்புடன் செயற்பட்ட ஒரு தமிழினப் பற்றாளர் எதிரியின் கோரமான தாக்குதலுக்குப் பலியாகிவிட்டார்.

இந்த உன்னத மனிதரை இழந்து இன்று எமது தேசம் ஆறாத்துயரில் மூழ்கிக்கிடக்கின்றது.

திரு.வ.விக்கினேஸ்வரன் அவர்கள் ஓர் அற்புதமான மனிதர். உயர்ந்த குணவியல்புகள் கொண்டவர். அனைவரையும் கவர்ந்து கொள்ளும் ஆளுமை படைத்தவர்.

தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒரு தேசப்பற்றாளர். அவரது இழப்பு தமிழர் தேசத்துக்கு என்றுமே ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பு.

தமிழீழத் தனியரசே தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இறுதியான - உறுதியான தீர்வு என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்.

தமிழரின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்து, தமிழரின் நிலத்தையும் வளத்தையும் சூறையாடி, ஒட்டுமொத்தமாக தமிழரின் தேசிய அடையாளத்தையே சிதைத்து விடும் நோக்குடன் சிங்கள அரசுகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இன அழிப்புப் போரை இவர் முழுமையாக எதிர்த்து நின்றார்.

இந்த அழிவில் இருந்து தமிழீழ மக்கள் முழுமையாக விடுபட்டு - விடுதலை பெற்று - சுதந்திரமாக - கௌரவமாக - நிம்மதியாக - வாழ்வதையே தனது குறிக்கோளாக வரித்துக் கொண்டார். வரித்துக்கொண்ட குறிக்கோளில் உறுதி தளராது - பாதை விலகாது - பயணித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழுமனதுடன் ஏற்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்தார்.

இவரது வாழ்வு திருமலை மண்ணோடும் மக்களோடும் ஒன்றியதாக இருந்தது. இவர் திருமலை மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். அங்கு தலைவிரித்தாடும் இராணுவ ஒடுக்குமுறையையும் நில ஆக்கிரமிப்பையும் முழுமூச்சாக எதிர்த்து நின்றார்.

எமது மண் எமக்கே சொந்தம் என்று உரிமைக் குரலை ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு மத்தியில் நின்றுகொண்டே உலக்குக்கு உரத்துக் கூறினார்.

சிங்களப் பேரினவாதிகளின் கெடுபிடிச் செயல்கள் ஒருபுறமும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்கள் மறுபுறமுமாக தினம் தினம் எத்தனையோ நெருக்குதல்களையும் சோதனைகளையும் அச்சுறுத்தல்களையும் சந்தித்து நின்றபோதும் அஞ்சா நெஞ்சுடனும் அபாரமான துணிச்சலுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார்.

திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவையின் தலைவராக இருந்து அந்த மாவட்டத்தில் தமிழ்த் தேசிய இனக்கட்டமைப்பு இறுக்கம் பெற்று - பலம் பெற்று - வளர அயராது உழைத்தார். அவரது பெரும் பணி என்றும் பாராட்டுக்குரியது.

திரு.வ.விக்கினேஸ்வரன் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதி உயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.

சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்து விடுவதில்லை.

சரித்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(ஐ)(30)

# சிறுப்பிட்டியில் குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமாக தாக்குதல்களில் காயமடைந்த இரண்டு பேர் யாழ். பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

எஸ்.கனகராஜா (வயது-31), எஸ்.மதனகுமார் (வயது-22) ஆகிய இருவருமே தாக்குதலில் காயமடைந்தவர்களாவர். அப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

ப்ருத்தித்துறை வீதி வழியாகச் சென்ற வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதிக்கப்பட்டன. தனியார் வாகனங்களில் பயணஞ்செய்த சிலர் சோதனையின் போது தாக்குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்படுகிறது.

நீர்வேலிப் பகுதியில் நேற்றுமாலை இடம் பெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றிய வீரர்களும் படையினரால் தாக்கப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

யாழ். வலயத்தில் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மைதானத்திலும் - வலி. கிழக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நேற்று மாலை இடம்பெற்றன. குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து இந்தப் போட்டிகள் தடைப்பட்டன. போட்டிகளில் பங்குபற்றி விட்டுத் திரும்பியவர்கள் பலர் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்பட்டது.

(ஐ-11-14-15-72-173-78)(30)

# விசேட பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்துள்ளது. படுகொலைச் சம்பவங்களை நேரில் கண்ட வர்களின் சாட்சியங்களை இக்குழுவினர் நேற்றுப் பதிவுசெய்தனர்.

இதேவேளை - யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினரும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு அருகில் வசிப்பவர்கள், வங்கி அதிகாரிகள் ஆகியோரை அவர்கள் விசாரித்துள்ளனர். விசாரணை அறிக்கை கொழும்பிலுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

(ஐ-3)(30)

# மாமனிதரின் உடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டு கணேசபுரம் மத்திய கல்லூரியில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்படும். அங்கிருந்து இன்று மாலை புகழுடல் தம்புள்ள வழியாக வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கிருந்து நாளை திங்கட்கிழமை அவரது உடல் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படும். கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மக்களின் இறுதி வணக்கத்தின் பின்னர் நாளை மாலையில் மீண்டும் திருமலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

மாமனிதர் விக்னேஸ்வரனின் புகழுடல் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களுக்கு எடுத்துவரப்படும் போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வழித்துணை வழங்குவர்.

செவ்வாய்க்கிழமை காலை முதல் நண்பகல் வரை திருமலை நகர மண்டபத்தில் மாமனிதரின் உடல் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்படும். அங்கு இரங்கல் கூட்டம் நடை பெறும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரங்கல் உரைகளை ஆற்றுவர். இறுதியில் அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் அன்புவழிபுரம் மயானத்தில் இறுதிச் சடங்கு கள் இடம்பெறும்.

(ஐ-12-14)(30)

MCS 324, Palaly Road, Jaffna. (Near Alady Junction)
G.C.E A/L - GIT
மாணவருக்கான விடுமுறைக்கால விசேட பிரிவு
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பதிவுகளை முன்கூட்டியே, நேரில் மேற்கொள்ளவும்.
*****Supported by UNDP/JRRP*****




யூனிவேசல்
[யா/இந்து மகளிர் கல்லூரி அருகே]
A/L 2006 புவியியல் கருத்தரங்கு
அலகு எறியங்கள்
காலம்:09.04.2006 ஞாயிறு 4 p.m. (N.T.)
By: N. பாபு
[வெளிமாணவரும் பங்குபற்றலாம்]

விந்னா யாழ்ப்பாணம்.
A/L 2006 'புவியியற் கருத்தரங்கு'
அலகு - எறியங்கள்
09.04.2006
(ஞாயிறு) 1.30 p.m. (N.T.)
ஆசிரியர்: N. பாபு
[வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

09.04.2006

# முஸ்லிம்களுக்குத் தனிப்படை உருவாகினால் தமிழருக்கும் படைப்பிரிவு உருவாக்க நேரிடும்

பலவேறு இனங்கள் வாழும் நாட்டில் இனங்களுக்கிடையே நல்லுறவுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் படையணி ஒன்றை உருவாக்க பாதுகாப்புச் செயலர் நடவடிக்கை எடுத்துள்ளமை புதிய சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. பாதுகாப்புச் செயலரின் இந்த முயற்சி அயல் நாடான இந்தியாவை மட்டுமல்ல சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. முஸ்லிம்களுக்கு 'அக்பர் படையணி' போல் தமிழ் மக்களுக்கு 'எல்லாளன் படையணி' என்று ஒன்று உருவாக்க வேண்டும் எனத் தமிழர் தரப்பினர் கோரினால் அதில் நியாயமுள்ளது என்கிறார் கட்டுரையாளர் சத்துரபமுனுகவ. 'திவயின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.



அரசு இத்தனை அவசர அவசரமாக இலங்கை இராணுவ சேவையில் முஸ்லிம் படைப் பிரிவு எனத் தனியான படையணியொன்றை உருவாக்குவதற்கான காரணம் என்னவென்பது தெளிவாகத் தெரியவரவில்லை. இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவுக்கு 'அக்பர் படையணி' எனப்பெயரிடப்படவேண்டுமெனச் சிலர் யோசனை தெரிவித்துள்ளனர்.

'அக்பர் படையணி' என முஸ்லிம்களுக்கெனத் தனியான படைப்பிரிவொன்றை அரசு உருவாக்குமானால், 'எல்லாளன் படையணி' என்ற பெயரில் தமிழ் இளைஞர்களை உள்ளடக்கிய தனியான படைப்பிரிவொன்றை உருவாக்குமாறு தமிழ் அரசியல்வாதிகள் கோருவார்களானால், அவர்களது அத்தகைய கோரிக்கையையும் அரசு நிறைவேற்றத் தயாராயிருத்தல் வேண்டும்.

தெரிவித்திருந்தார். அத்துடன், பாகிஸ்தான் அரசின் புலனாய்வுத்துறை முன்னாள் பணிப்பாளரான கேணல் பசீர்வாலி இந்நாட்டின் பாகிஸ்தான் தூதுவராக நியமிக்கப்பட்டமை குறித்தும் இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது - எனக் கூறப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் உருவாகியுள்ளன என்று விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்துள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு எதிராகக் கிழக்கு மாகாணத்தில் பல அமைப்புகள் செயற்பட்டமை உண்மையானதொன்றே. விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளே இத்தகைய அமைப்புகள் உருவானமைக்கான முக்கிய காரணமெனக் கூறப்படுகிறது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் பி.எல்.ஓ. என்ற பெயரில் முஸ்லிம் ஆயுதந்தாங்கிய குழுவொன்று உருவாகியது. முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் எந்த வொரு தமிழரும் பிரவேசிக்கக் கூடாதென இந்த பீ.எல்.ஓ. குழு அம்பாறை மாவட்டத்தில் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியன்று வெளியான 'திவயின' பத்திரிகையில் ''வெடித்துச் சிதறும் நிலையில் முஸ்லிம் அடிப்படைவாத எரிமலை'' என்ற தலைப்பில் கிழக்கு மாகாணத்தில் செயற்படும் மதவாத அமைப்புக் குறித்து செய்தி வெளியாகியிருந்தது. கிழக்கு மாகாணத்தில் நான்கு முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன என 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேசிய புலனாய்வுச் சேவை தெரிவித்திருந்தது.

சீக்கிய இனத்தவர்கள் சிறந்த போர்வீரர்கள் என்பது உலகப் பிரசித்தமான விடயமாகும். இந்திய இராணுவத்தில் 'சீக்கிய படையணி' எனத் தனியான பிரிவொன்று பேணப்பட்டு வருகின்றது. இந்திய இராணுவத்தில் இந்தச் சீக்கியப் படையணி உயர் கௌரவம் பெற்றுத் திகழ்கிறது.

1846ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தில் இத்தகையதொரு தனிப்படைப்பிரிவு உருவாக்கப்பட்டது. அப்படைப் பிரிவின் தலைமையகம் பீகார் மாநிலத்தில் அமைந்துள்ளது. 'நிச்சயமான வெற்றிக்காகவே நான் போரிடுகிறேன்' (I Fight for sure to win) என்பது இந்தப் படைப்பிரிவுக்கான தாரக மந்திரமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகைய சீக்கிய தனிப்படைப் பிரிவின் வரலாறு ஒரு புறமிருக்க, இன்று எமது நாட்டின் அரச இராணுவசேவையில் 'முஸ்லிம் படையணி' ஒன்றை உருவாக்கும் அரசின் தீர்மானம் குறித்து நாம் கவனம் செலுத்த நேர்ந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கொதாபய ராஜபக்ஷ (இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரராவார்) இலங்கை இராணுவ சேவையில் 'முஸ்லிம் படையணி' என்ற விசேட பிரிவொன்றை உருவாக்கு வதற்காக நாட்டின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எண்ணூறு முஸ்லிம் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார் என்று கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி வெளியான 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

1949ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி முதன்முதலில் உருவாக்கப்பட்ட இலங்கை இராணுவ சேவையில், இன அடிப்படையிலான படைப் பிரிவொன்று உருவாக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். கடந்த ஞாயிறன்று வெளியான 'சிலுமின' சிங்களப் பத்திரிகையில் இது தொடர்பான விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்ததோடு, இது முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவ சேவையில் இணைந்து கொள்வதற்கானதொரு வாய்ப்பு எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்தின் படி, இராணுவ சேவையில் இணைந்து கொள்வதற்கான முக்கிய அடிப்படைத் தகைமை, விண்ணப்பதாரி முஸ்லிம் இனத்தவராயிருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் இராணுவ சேவைக்கு இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விளம்பரங்களில் இராணுவ சேவையில் இணைவதற்கான முக்கிய அடிப்படைத்தகுதிகளிலொன்றாக விண்ணப்பதாரி தாம் ஓர் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்க வேண்டுமெனவே கோரப்பட்டிருந்தது.

1984 ஆம் ஆண்டுமுதல் 1988 ஆம் ஆண்டுவரை தேசிய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த லலித் அதுலத்முதலி, இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னரேயே இந்த நாட்டின் இராணுவ சேவையில் முஸ்லிம் படையணியொன்று உருவாக்கப்படவேண்டுமென்றதொரு யோசனையை முன்வைத்திருந்தார். அதற்கென அந்தவேளையில், ஜனாதிபதியாகவிருந்த் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அனுமதியையும் அத்துலத்முதலிகோரிப் பெற்றிருந்தார்.

ஆனால், பின்னர் முஸ்லிம்களுக்கென இலங்கை இராணுவ சேவையில் தனியானதொரு படைப்பிரிவை உருவாக்கும் அந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜனாதிபதி பிரேமதாஸ, விடுதலைப்புலிகளது தாக்குதல்களுக்கு முகம்கொடுக்கத் தக்கதாக முஸ்லிம் ஊர்காவல் படையொன்றை உருவாக்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் காத்தான்குடியில் இடம்பெற்ற முஸ்லிம்கள் படுகொலைச் சம்பவத்தையடுத்து, 500 முஸ்லிம் இளைஞர்களை உள்ளடக்கிய ஊர்காவல் படையணியொன்றை உருவாக்கி, அவர்களுக்கு இலங்கை இராணுவத்தினரைக் கொண்டு பயிற்சியளித்து, கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் கிராமங்களுக்குப் பாதுகாப்பளிப்பதில் அரசு அவர்களை ஈடுபடுத்தியது.

கிழக்கு மாகாணத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் இயங்கிவந்துள்ளன. அத்தகைய அடிப்படைவாத அமைப்பின் உறுப்பினர்கள் கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டுவரும் நிலையில் அரசு இத்தகையதொரு முஸ்லிம் படைப்பிரிவை ஆரம்பிப்பது அரச நிர்வாகத்தைச் சுமுகமாகச் செயற்படவைக்க உதவுமா என்பது குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது.

பாகிஸ்தானைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பான லக்ஷார் ஈரொய்பா என்ற அமைப்பு இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்களைத் தன் பக்கம் கவர்வதற்கான தக்கதருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது என சென்னை கண்காணிப்பு மையத்தின் பணிப்பாளர் பி.ராமன் என்பவர் 2004 ஆம் ஆண்டில் தாம் எழுதிய ஆய்வுக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். இந்த லக்ஷார் ஈரொய்பா அமைப்பு பாகிஸ்தான் அரசின் புலனாய்வுத் துறையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வருகிறது எனவும் ராமன் தமது ஆய்வுக்கட்டுரையில் மேலும்

பத்திரிகையில் ''வெடித்துச் சிதறும் நிலையில் முஸ்லிம் அடிப்படைவாத எரிமலை'' என்ற தலைப்பில் கிழக்கு மாகாணத்தில் செயற்படும் மதவாத அமைப்புக் குறித்து செய்தி வெளியாகியிருந்தது. கிழக்கு மாகாணத்தில் நான்கு முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன என 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேசிய புலனாய்வுச் சேவை தெரிவித்திருந்தது.

முஜகதீன், ஒசாமா, ஜேட் மற்றும் ரீம் என இந்த நான்கு அமைப்புகளும் அழைக்கப்பட்டன. இந்த நான்கு குழுக்களும் தம்முள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன எனவும், இரகசியப் புலனாய்வுத் துறையினர் அரசுக்குத் தெரிவித்திருந்தனர். இந்த அமைப்புகள் ஒன்றின் தலைவர்களுள் ஒருவரான அப்துல் சமது அப்துல் ஹக்கீம் என்பவர் 2005 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி மூதூர் பிரதேசத்தில் வைத்துப்படுகொலை செய்யப்பட்டார். ஏழு பிள்ளைகளின் தந்தையான இவர் 2002 ஆம் ஆண்டில் மூதூரில் இடம்பெற்ற முஸ்லிம் - தமிழ் கலவரத்தில் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தார்.

நாட்டு மக்களின் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புப் படைகளது செயற்பாடுகள் குறித்து இந்த நாட்டின் பாதுகாப்புப் படையினர் எவ்விதம் செயற்பட வேண்டும் என்பது குறித்து 'மஹிந்த சிந்தனை' கொள்கை வெளிப்பாட்டின் 32ஆம் பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கொள்கை வெளிப்பாட்டின் எந்தவோர் இடத்திலும் முஸ்லிம் படையணியொன்றை உருவாக்கும் யோசனை குறித்து எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அப்படியிருக்கையில், இவ்விதம் அவசர அவசரமாக இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவொன்றை உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அராபிய நாடுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கம் காரணமாயிருக்குமா என எண்ணத் தோன்றுகிறது. எது எப்படியானபோதிலும் இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல தரப்பட்ட விமர்சனங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

முஸ்லிம் இளைஞர்களைப் படையில் சேர்த்துக் கொள்வதைத் தாம் எதிர்க்காத போதிலும் இவ்விதம் 'முஸ்லிம் தனிப்படைப் பிரிவு' உருவாக்கப்படுவதைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமய கருத்து வெளியிட்டுள்ளது. தமிழர் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி இந்த விடயம் குறித்துக் கருத்து வெளியிட்டபோது, புதிதாக முஸ்லிம் படைப்பிரிவு உருவாக்கப்படுவதன் நோக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதேயாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கை, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களிடையேயான இடைவெளி மேன்மேலும் விரிவடைவதற்கே வழி வகுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த விடயம் குறித்து 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கையில், முஸ்லிம்களை மட்டும் அடக்கிய இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவை உருவாக்குவது வடக்கு - கிழக்குப் பிரச்சினை மேலும் சிக்கலடைவதற்கு வழிவகுக்குமெனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

**தமிழில்: விபெஸ்ரி**

இவ்விதம் இலங்கை இராணுவசேவையில் முஸ்லிம் இளைஞர்களை மட்டுமே உள்ளடக்கிய தனிப்படைப் பிரிவொன்றை உருவாக்குமாறு முஸ்லிம் மக்க்ள் ஒருபோதும் அரசைக் கேட்டுக்கொண்டதில்லை எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். முஸ்லிம் மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் எனவும் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆயுதம் தாங்குவதற்கு அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை எனவும் ரவூப் ஹக்கீம் கருத்து தெரிவித்துள்ளார். அதேவேளை, கல்முனையைச் சேர்ந்த இஸ்லாமிய மதப் பிரமுகரான ஐ.எச். இப்ராஹிம் என்பவர் இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவு உருவாக்கப்படுவதைத் தம்மால் பாராட்ட இயலவில்லை எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையில் சிங்கள,தமிழ், முஸ்லிம் பறங்கியர் மற்றும் மலாயர் ஆகிய நாட்டின் சகல இனங்களைச் சேர்ந்தவர்களும் அங்கம் வகிக்கின்றனர். இந்த நாட்டின் சகல இன மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே இலங்கையின் பாதுகாப்புப்படையினர் செயற்பட்டுவருகின்றனர். அவ்விதமிருக்கையில், இவ்விதம் முஸ்லிம் இளைஞர்களை மட்டும் உள்ளடக்கிய முஸ்லிம் படைப்பிரிவொன்று உருவாக்கப்படுவதால் கிட்டவுள்ள நன்மை யாது? இலங்கை இராணுவம் முற்று முழுக்க சிங்களவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என காட்டிக்கொள்ளும் நோக்கம் கொண்டதே இந்த முயற்சியாகும். இத்தகைய பிரசாரம் முன்னர் விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

(VIIIஆம் பக்கம் பார்க்க)

# ஆராய்ச்சி மணியை அடித்து பஞ்சாயத்தாரிடம் நீதிபெற்ற கண்தெரியாத குதிரை

சிபெரு

**மனு** நீதி கண்ட சோழன் தன் மகன் பசு ஒன்றின் கன்றினை தேரினால் மோதி தேர்ச் சில்லில் அக்கன்று நெரிபட்டு சாகக் காரணமாய் இருந்தான் என்பதற்காக அச்சிறுவனையும் பசுவின் கன்றைப் போலவே தேர் சில்லினால் நெரித்து கொன்றான் என்பது கர்ண பரம்பரையாக இருந்துவரும் கதை.

சோழன் எந்த அளவுக்கு நீதிமானாய் இருந்தான் என்பதைக் காட்டுவதற்காக எழுந்த கதையாகவே இது இருந்திருக்கவேண்டும்.

கன்றை இழந்த பசுவானது சோகம் தாழாது ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் இடித்து அல்லது தன் வாயினால் மணியின் கயிற்றைக் கவ்வி இழுத்து மணியை ஒலிக்கச்செய்தது என்றும் அதன் பின் மன்னன் ஆராய்ந்து அறிந்து தன் மகனைத் தண்டித்தான் என்பதும் கதை. ஒரு மிருகத்துக்கே இந்த வகையில் தன் மகன் என்பதையும் பாராமல் நீதிவழங்கினான் என்றால் தன் பிரஜைகளிடம் எவ்வளவு தூரம் கருணையும் பரிவும் கொண்ட நீதிமானாக அவன் இருந்திருக்கக் கூடும் என்றவகையில் வியக்கவைப்பதாய் இக்கதை இருக்கின்றது.

எதுவானாலும் இந்தக் கதையில் பகுத்தறிவுக்கு எட்டாத அம்சங்கள் பல விருக்கின்றன. ஒரு பசுவானதுஆறறிவுள்ள மனிதனைப் போல ஆராய்ச்சி மணியை அடித்து தனக்கு நேரிட்ட துன்பத்தை அரசன் அறியச் செய்திருக்கும் என்பதை சிந்திக்கமுடியாமல் இருக்கின்றது.

இக்கதை மனு நீதி கண்ட சோழனுடன் நிற்கவில்லை. இலங்கையை ஆண்டவனான எல்லாள மன்னனுடனும் இணைத்துக் கூறப்பட்டு வந்துள்ளது. எல்லாளன் சோழப்பரம் பரையைச் சேர்ந்தவன் என்பதைக் குறிக்கவும் அவனுடைய நீதி தவறாத நெறிமுறையை எடுத்தியம்பவும் இக்கதை இவனோடும் இணைக்கப்பட்டிருக்கலாம்.

பிரித்தானியாவில் பேரரசன் ஆர்த்தர் இறந்த பிறகும் அவன் பெயரால் அற்புதங்கள் இடம் பெற்றதாக கதைகள் உண்டு. ஆர்த்தரால் உருவாக்கப்பட்ட 'நைட்ஸ்' வீரர்களின் பாரம் பரியமாகவே இன்று வரைக்கும் 'நைட்ஸ்' பட்டம் வழங்கும் நடைமுறை இங்கிலாந்து அரச வம்சத்தினால் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆராய்ச்சி மணி அடித்து நீதிகேட்கும் முறை வேறு நாடுகளிலும் முன்பு நடைமுறையில் இருந்துள்ளது.



ரஷ்ய நாடோடிக் கதையொன்றில் இம் மாதிரி ஆராய்ச்சி மணி அடித்து ஊர் பஞ்சாயத்தாரைக் கூட்டி நீதிகேட்கும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது. அது மட்டுமல்ல மனுச்சோழன் காலத்தில் பசு மாடு தன் கன்றைக்கொன்றுவிட்ட மன்னன் மகனுக் கெதிராக மன்னனிடம் மணி அடித்து நீதிகேட்டது போன்று இந்தக் கதையிலும் குதிரையொன்று நீதிகேட்கின்றது. ஆனால், நீதிகேட்ட குதிரையின் செயற்பாடு மிகவும் இயற்கையாக இருந்துள்ளமைதான் இரண்டு கதைகளுக்கு மிடையிலுள்ள வேறுபாடு.

அந்தக் கதையின் சுருக்கம் வருமாறு:

ஆல்தோம் என்றொரு தனவந்த வணிகர் வினதா என்ற ஊரில் வாழ்ந்தார். ஒரு தினம் வெளியூருக்கு வாணிப விடயமாக சென்று விட்டு தனது அருமைக் குதிரையின் மீது அமர்ந்து ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் அவர். மாலை நேரம் இருள்படிந்து கொண்டிருந்தது. காட்டுப் பாங்கான பகுதியூடாக பயணம் தொடர்ந்தது.

திடீரென புதர்களுக்கிடையிலிருந்து ஆறு நபர்கள் கத்திகள், வாள்கள், ஈட்டிகள் போன்ற ஆயுதங்களுடன் வெளிப்பட்டனர். மூவர் குதிரைகள் மீதும் மூவர் நடந்தும் வந்தனர். இருவர் நெருங்கி வந்து குதிரையின் கடிவாளத்திலும் பிடித்தார்கள். நல்லகாலம் 'காற்றைத் துரத்தும்' குதிரையாக மட்டும் இல்லாமல் போய் இருந்தால் ஆல்தோம் தனது சொந்த ஊரான வனதாவை மீண்டும் வாழ்நாளில் பார்த்திருக்கவே மாட்டார்.

கடிவாளத்தில் அன்னியர் யாரோ கைவைக்கிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டதும் 'காற்றைத் துரத்தும்' குதிரை நெஞ்சை நிமிர்த்தியது - காற்றை விட வேகமாக பாய்ந்து பறந்தது- கடிவாளத்தைப் பிடித்தவர்கள் தூக்கி எறியப் பட்டனர் - குதிரை மீதிருந்த ஒருவன் ஈட்டியுடன் முன்னால் பாய்ந்து தடுத்து நிறுத்த முயன்றான். அவனை இடித்துத் தள்ளி உழக்கிவிட்டு குதிரை பறந்தது. மற்ற இருவரும் குதிரைகளில் பின்னால் துரத்தினார்கள் காற்றைத் துரத்தும் குதிரை அவர்களுக்கும் 'டிமிக்கி' கொடுத்தவிட்டு ஊருக்கு எஜமானைக் கொண்டு வந்துசேர்த்தது.

தன்னைக் காப்பாற்றிய குதிரை மீது அலாதி பிரியம் காட்டிய வணிகர் அக் குதிரை உயிருடன் இருக்கும்வரை தினமும் மூன்று கொத்துகோதுமை உணவு வழங்குவதாக உறுதி செய்தார்.

காலஞ்சென்றது. காற்றைத் துரத்தும் குதிரைக்கும் வயது போகத்தொடங்கியது. காலப்போக்கில் அதனைப் பயன்படுத்துவதை விடுத்து புதிய குதிரை வாங்கினார் ஆல்தோம். என்றாலும் மூன்று கொத்து கோதுமை உணவு தடையில்லாமல் கிடைத்தது. காலஞ்செல்ல பயனற்ற குதிரைக்கு மூன்று கொத்து கோதுமை வேண்டாம் இரண்டு போதும் என்று குறைத்துவிட்டார் ஆல்தோம். இரண்டுகொத்து ஒரு கொத்தாகக் குறைந்தது. குதிரையின் உடல் வலுகுறைந்து, கண்பார்வையும் போய்விட்டது. ஒன்றுக்கும் உதவாத 'காற்றரைத் துரத்தும்' குதிரையை லாயத்திலிருந்தே துரத்திவிட்டார் ஆல்தோம். வெளியில் வந்த குதிரை தன் நிலையை எண்ணி கவலைப்பட்டது. பசிவாட்டியதால் எதையாகிலும் கவ்வி சாப்பிடலாம் என்று மெதுவாக நடந்தது.

அந்த ஊரில் ஓர் ஆராய்ச்சி மணி உண்டு. அநீதியால் பாதிக்கப்படும் எவரும் அந்த மணியை அடிக்கலாம். மணிச்சத்தம் கேட்டதும் ஊர் பஞ்சாயத்து கூடும் விசாரணையில் குற்றமிழைத்த வருக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும். முறைப்பாடு பொய்யாய் இருப்பின் முறைப்பாடு செய்தவரே தண்டிக்கப்படுவார். அதனால், சின்ன விஷயங்களுக்கெல்லாம் எவரும் ஆராய்ச்சி மணி அடித்து முறைப்பாடு செய்வதில்லை.

(VII ஆம் பக்கம் பார்க்க)

---

# சமூகத்தை சீரழிக்கும் தமிழ் சினிமா

**கலை** இலக்கியங்கள் சமூகத்தை உயிர்ப்புடன் ஆரோக்கியமாக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் ஆக்கப்படும் மகத்துவ முயற்சி ஆகும். இதே நல்லெண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் கலையில் சினிமாவும் ஒன்று. ஆனால், இன்றைய தமிழ் சினிமாக்களைப் பார்த்த பிறகு மனம் கசப்பால் கனமடைகிறது. ஏனென்றால் வன்முறைகளும் கீழான பாலியல் உணர்வுகளும் இல்லாமல் தமிழ் சினிமா இல்லை என்ற நிலைதான் தற்போது இருப்பில் இருந்து வருகிறது. அப்படியென்றால் நான் மேலே கூறிய கலை இலக்கியம் பற்றிய சமன்பாட்டில் தற்போதைய தமிழ் சினிமா சிக்கலை ஏற்படுத்துகிறது என்பது பெறப்படுகிறது.

2000 இற்குப்பின்னர் வெளியான அநேகமான தமிழ் திரைப்படங்களில் வன்முறைகளும் கீழான பாலியல் உணர்வுகளைத் தூண்டும் காட்சிகளும் - வசனங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைபற்றி உற்றுநோக்குகையில்... தமிழ் சினிமா அழிவின் பாதாளத்தை நோக்கிச் செல்வதையே வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

கொலை, தாக்குதல் முதலான வன்முறைகளும் வாள், கத்தி முதலான வன்முறை ஆயுதங்களுமே திரைப்படத்தின் தொடக்கம் தொட்டு முடிவு வரை அசிங்க அலங்காரம் செய்கின்றன. இவைகள்தான் இன்றைய தமிழ் சினிமாவின் வெற்றி, தோல்வி - முடிவுகளைத் தீர்மானிக்கும் கதாபாத்திரங்களாகக் கையாளப்படுகின்றன. இவைகளின் அதிகரித்த ஆதிக்கத்தால் இவை இல்லா படங்களைப் பார்க்க முடியாத மனநிலையில் ரசிகர்கள் பழக்கப்படுத்தி விடப்பட்டுள்ளார்கள்.

உண்மையிலே இந்த வன்முறைப் படங்களைப் பார்ப்பதன் மூலம் மனவியல் ரீதியாக யாரும் ஆரோக்கியமடைய முடியாது. வெறுமையான மனதுடன் படத்தைப் பார்க்க வருபவர்கள் குரோதத்தையும் விரோதத்தையும் துரோகத்தையும் மனங்களில் காவிச் சென்று கஷ்ரப்படுவதாகவே கணிப்புகள் கூறுகின்றன.

பெண்களை அசிங்கப்படுத்தி கற்பை மலினப்படுத்தும் தன்மையும் இன்றைய தமிழ் சினிமாவின் அவலங்களில் முக்கியமான ஒன்றாகும். ஒரு பெண்ணை வன்முறைக்குள்ளாக்கும் போது அவள் மீது பரிதாபத்தையோ அல்லது காப்பற்றவேண்டும் என்ற இரக்கத்தையோ படம் தூண்டுவதில்லை. மாறாக இன்னும் அவளை அசிங்கப்படுத்தவும் மோகத்தைத் தூண்டவும் பார்வையாளனை முற்படுத்துகின்றன. இது ஒரு விமர்சகரின் கருத்து.

பெண்களை கேவலமாகக் காட்டும் இன்றைய தமிழ் சினிமாவின் கீழான செயற்பாடுகளுக்கு பெண்களே முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பதுதான் நமக்கு வியப்பையும் வேதனையையும் தருகிறது.

இந்தத் திரைப்படங்கள் வன்முறைகளையும் கீழான உணர்வுகளையும் தவறானவை என்று காட்டத்தான் முயல்கின்றன. ஆனால், அவை சொல்லப்படும் விதங்களே அவைகளை மேலும் தூண்டுவதாகவும் உருவாக்குவதாகவும் அமைகின்றன. ஆக நல்ல கருத்தைச் சொல்லவரும் தமிழ் சினிமா அது சொல்லுகிற விதத்திலேதான் வழிமாறி துயரப்படுகிறது.

இவ்வாறான தமிழ் சினிமாவில் நெருக்கடிகளிலும் 'நல்ல சினிமா' எனிறு போற்றத்தக்க படங்கள் அவ்வப்போது தலைகாட்டித்தான் வருகின்றன. கலைக்கும் நேரிய உழைப்புக்கும் தம்மை அர்ப்பணிக்கும் நல்ல கலைஞர்களும் தமிழ் சினிமாவில் உண்டு. சமூகத்தையும் மொழியையும் சீர்ப்படுத்தி காக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் கீழான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தாது இதிலிருந்து விலகிய கவிஞர் அறிவுமதி, போன்றவர்களையும் பாராட்டத்தான் வேண்டும். இது போன்ற நல்ல நிகழ்வுகளும் தமிழ் சினிமா வரலாற்றிலே நிகழ்கிறது.

இப்போதெல்லாம் கதைக்காக படமெடுக்கும் நிலை இல்லை. நடிகருக்காகவே படம் எடுக்கிறார்கள். கதை எழுதுகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் பெயரை நிலைநிறுத்திக்கொள்ளும் உத்தியுடனேயே கதை எழுதுவித்து நடிக்கிறார்கள்.



இந்த ஜனரஞ்சக சினிமாவின் அழிவுமீதான போக்கிலே யதார்த்தமான கதைகளைக் கொண்ட நல்ல படங்களும் வெளிவருகின்றன. 'நடிப்பு' நடிப்பாகாத யதார்த்தத்தை உணர்த்தும் வகையில் - நல்ல கதைகளில் சில நட்சத்திரங்கள் நடித்து சாதனை காண்கிறார்கள்.

ஜனரஞ்சக படங்களை எடுக்கும் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் விற்கப்படும் டிக்கற்றுக்களையும் படம் ஓடும் நாள்களையும் வைத்து தொடர்ந்து இவ்வாறான படங்களை எடுக்க முயல்வது வேதனைக்குரிய செயலாகும்.

எந்தக் கதையை வைத்தாவது படமெடுக்கவேண்டும் என்ற இயக்குநர்களும் எதிலாவது நடிக்கவேண்டும் என்ற நடிகர்களும் எதையாவது எழுதவேண்டும் என்ற கவிஞர்களும் ஒருவிதம். இவர்கள் உள்ளவரை இவ்விதமான படங்கள் வெளிவந்து கொண்டே இருக்கும். இன்று வெளியாகும் கூடுதலான படங்களில் ஒரு சில காட்சிகளை அகற்றிவிட்டால் அவை பெரும்பாலும் நீலப்படங்களாகவே இருக்கும்.

பழைய திரைப்படங்கள், இடைக்காலத்திரைப்படங்கள் இன்றும் எம்மிடையே பேசப்படுகின்றன. ஆனால், இன்று வெளியாகும் திரைப்படங்களைப் பற்றி நாளை கூட பேசமுடியாத நிலையே காணப்படுகின்றது. ஏனென்றால் பேசக்கூடிய விஷேசங்களோ மனதில் நிற்கக்கூடிய ரசனைகளோ கொஞ்சம் கூட இருப்பதில்லை. இவைகள் வந்த இடம் தெரியாமலே சில நிமிடங்களில் மறைந்து போகின்றன.

கலை இலக்கியங்கள் அழகுணர்ச்சியின்றி அசிங்கமாகக்கப்படுவதை தடுத்து மனவியல் ரீதியாக கசப்புக்கனதியை ஏற்படுத்தும் போலித் திரைப்படங்களைத் தவிர்த்து நல்ல சினிமாவை அடையாளம் கண்டு, அவைகளைப் பார்ப்பதன் மூலம் ஆரோக்கியங்களை அடைய அனைவரும் நிதானித்து செயற்பட வேண்டும என்பதுவே இப்போதைய தேவையாகும்.

கு.பா.தீபச்செல்வன்

# இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் குடும்ப பாசம்



சிகாகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி லூயிஸ் காக்லி, குடும்பத்தில் அதிக நேரம் செலவழிப்பவர்களிடமும் நண்பர்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதை போக்குபவர்களிடமும் இரத்த அழுத்தம் குறைவாகக் காணப்படுகிறது என்று ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளார்.

அதாவது, தனிமையில் இருந்து மனதை அலட்டிக் கொண்டு, புலம்பித் தவிப்பவர்களுக்கு இயல்பாகவே இரத்த அழுத்தம் அதிகரித்து விடுகிறது என்பதுதான் இந்த ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

'உளவியலும் மூப்பும்' என்ற ஆய்விதழில் இது தொடர்பாக இந்த ஆய்வைச் செய்தவர்கள் கட்டுரை வெளியிட்டுள்ளனர். அதில் இது தொடர்பாக ஏற்கனவே நடந்த ஆய்வுகளின் முடிவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் தனிமை ஏற்படுத்தும் உடல் நலச் சிக்கல்கள் குறித்தும் விரிவாக விளக்கப்படுள்ளது. பெரும்பாலான அனைத்து நாடுகளிலும் பலர் தனித்து விடப்பட்டதாகக் கருதுவதாகவும் இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

நமது அன்றாட வாழ்வில் நட்பும், குடும்பமும் சமூக உறவுகளும் மிக முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் இந்த ஆய்வின் மூலம் வலியுறுத்தப்படுகிறது. இளைஞர்கள் வளர வளர குடும்பத்தின் பிடியிலிருந்தும் நட்பு வட்டத்தின் பிடியிலிருந்தும் விலகிச் செல்ல நேரிடுகிறது. அது நாளடைவில் உறவுகளில் தேக்க நிலையை உருவாக்கி மெல்ல மெல்ல தனிமையை உருவாக்கி விடுகிறது. 50 வயதளவில் தனிமையை எட்டுபவர்களுக்கு முதலில் இரத்த அழுத்தம் அதிகரித்து அது இதய நோய்களை உருவாக்கி விடுகின்றன என்றும் தெரிவிக்கிறது இந்த ஆய்வு.

# கண்ணே உனக்காக...!



கண் பார்வையிழப்பதற்கு இட்டுச் செல்லும் விழித்திரைபடல நோயை இலைச்சத்து மிகுந்த பச்சைக் காய்கறிகள் தடுக்கின்றன என்று அமெரிக்கா, ஒஹியோ மாநில பல்கலைக்கழக ஆராயச்சியாளர்கள் கூறுகின்றனர். பச்சைக்காய்கனிகளில் **Lutein** மற்றும் **Zexanthin** என்ற விற்றமின் சத்துகள் அதிகம் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்படலம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் சூரியஒளியின் புற ஊதாக் கதிர்களால் கண்கள் பாதிப்படைவதே ஆகும். பச்சைக்காய்கனிகளிலுள்ள விற்றமின்கள் உதவியுடன் மனிதனுடைய கண் உயிரணுக்களுக்கு சிகிச்சை அளித்தபோது புற ஊதாக் கதிர்களின் தாக்கத்தால் கண்கள் சேதமடைவது தடுக்கப்பட்டிருந்தது இவர்கள் ஆய்வில் தெரியவந்துள்ளதாம்.

கண் 'வென்சில்' உள்ள புரோட்டின் ஒன்று சேர்ந்து திரை உருவாக்கி விடுகிறது. இது பார்வையை மறைக்கிறது. இதுவே கண்படலம் (**Cataract**) என்று அழைக்கப்படுகிறது.

எவ்வளவு நேரம் நம் வாழ்க்கையில் கண்கள் சூரிய வெளிச்சத்திற்கு ஆட்படுகிறதோ அவ்வளவு கண் இடர்பாடுகளும் உண்டு என்று இந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். **Lutein** மற்றும் **Zexanthin** என்ற விற்றமின்கள் கீரை வகைகளில் குறிப்பாக பசளிக்கீரை, வெந்தயக் கீரைகளிலும், முட்டைகோசிலும் அதிகமாக இருக்கிறது என்று தெரிவிக்கும் ஒஹியோ ஆராய்ச்சியாளர்கள் பழங்கள் மற்றும் காய்கறிகள் அதிகம் சாப்பிடுபவர்களுக்கு வயதான பின்பு கண்புரைநோய் ஏற்படுவது குறைவாகவே உள்ளது என்று கூறுகின்றனர்.

ஆகவே விற்றமின் மாத்திரைகளை எடுத்துக் கொள்வதை விட உயிரணுக்களை பாதுகாக்கும் விற்றமின்கள் நிறைந்த உணவுப் பொருள்களை உணவுடன் கலந்து உட்கொள்வது எப்பவும் பாதுகாப்பானது. நிறத்தில் பளிச்சென்று இருக்கும் காய்கனிகளில் உயிரணு காக்கும் விற்றமின்கள் ஏராளமாக உள்ளன.

# மருந்தே வேண்டாம்...!





உலகிலேயே அதிக ஆயுள் உடையவர்கள் ஜப்பானியர்களாம். குறிப்பாக தெற்கு ஜப்பானில் உள்ள ஓகினாவன் தீவுகளில் உள்ளவர்கள் ஜப்பானியரின் சராசரி ஆயுளைக் காட்டிலும் கூடுதல் ஆயுள் பெற்றிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்களின் உணவு முறை என்ன என்று ஆராயும்போது நிறைய தானிய வகைகள், சோயா, மற்றும் மீன் ஆகியவற்றையே எடுத்துக்கொள்கின்றனர். குறைந்த அளவே இறைச்சி மற்றும் பால் பொருள்கள்ளை அவர்கள் எடுத்துச் கொள்கின்றனர்.

வயதுகூடும்போது உடலின் சக்தி குறைகிறது. இதனால் சில ஊட்டச்சத்துகளின் தேவையும் அதிகரிக்கிறது. இவற்றை எடுத்துக் கொள்வதன் மூலம் ஆயுள் அதிகரிப்பதோடு, வயது கூடும்போது உடல் ரீதியான விளைவுகள் மிக மெதுவாகவே ஏற்படுவதாக புதிய சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வயது அதிகரிப்பது என்பதை நாம் தவிர்க்கமுடியாது. ஆனால், அதனால் ஏற்படும் சில உடல் ரீதியான தேய்மானத்தை சில முறைகளில் நாம் கட்டுப்படுத்துவது சாத்தியமே. குறிப்பாக, எலும்புத் தேய்மானம், சர்க்கரை நோய், மற்றும் இருதய நோய் ஆகியவற்றின் விளைவுகளை தவிர்க்கமுடியும் அல்லது ஒத்திப் போட முடியும். 65 வயதிற்கு பிறகு ஏற்படும் நோய்களுக்கு உணவுமுறை பெரும் காரணமாக அமைவதாக மேலும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரோக்கியமான முறையில் வயதாவது என்பதற்கு முறையான ஊட்டச் சத்துணவு முறை சிறந்த உத்தியாக கருதப்படுகிறது. வயதான பிறகு சிலருக்கு சாப்பாட்டில் கவனம் இருக்காது. இதற்கு மனோ ரீதியான காணரங்கள் இருப்பினும், உடல் ரீதியாக அவர்களுச்கு ருசி மற்றும் வாசனை போன்ற புலனுணர்வுகள் சற்றே மங்கி விடுவதால் ஊட்ட உணவுகளில் நாட்டம் இருக்காது. அத்தோடு நெஞ்செரிச்சல், மலச்சிக்கல் மற்றும் பிற ஜீரணக்கோளாறுகள் ஆகியவற்றால் வயதானவுடன் ஊட்டமின்மையை ஏற்படுத்கிறது.

வயதாக வயதாக ஒரு நபரின் உடல் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தசை நிறை குறையும். கொழுப்பு திசுக்கள் அதிகரிக்கும். ஏனெனில், வளர் தசை மாற்றம் மெதுவாக நடைபெறும். இதனால் கலோரி அளவு குறைவாகவே தேவைப்படும். 50 வயதிற்கு பிறகு ஒரு சராசரி நபர் 10 சதவீத கலோரிகளை ஒவ்வொரு பத்தாண்டிலும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, 50 வயதில் ஒருவருக்கு 1800 கலோரிகள் தேவைப்படுகிறன என்றால், 70 வயதில் அதே நபருக்கு 1,440 கலோரிகள் தேவைப்படுகிறன.

# பல்லிகள் பலவிதம்



உலகத்தின் மிகப்பெரிய பல்லிகள் இந்தோனேஷியாவில் வாழ்கின்றன. இந்த பல்லிகளுக்கு 'கொமொடோ' என்று பெயர். 12 அடிக்கு மேல் நீளமும் 113 கிலோ எடையும் உடையவை இவை. மான், காட்டுப்பன்றி போன்ற மிருகங்களை சாப்பிடும் இவை 30 வருடங்களுக்கு மேல் உயிர்வாழும். பல்லிகளில் சுமார் 3 ஆயிரம் இனங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் பல்லிகள் மரத்திலும் சில பல்லிகள் நிலத்திலும், பூமிக்கு அடியிலும் வாழ்கின்றன. பெரும்பாலான பல்லிகள் உண்பது பிராணிகளையே. சில பல்லிகள் தாவரங்களை உணவாக உட்கொள்கின்றன.

சில பல்லிகள் நீளமான நாக்கை வெளியே நீட்டி தனது இரையைப் பிடிக்கும். சில பல்லிகள் பாம்பை போல சீறுகின்றன.

பச்சோந்தி போன்று நிறத்தை மாற்றிக்கொள்ளும். பல்லிகளும் உள்ளன. பச்சோந்தியும் பல்லி இனமே. பல்லிகளில் கீலோ, மெக்ஸிகன் என்ற இரண்டு பல்லி இனங்கள் விஷம் கொண்டவை.

'மவுண்டன் டெவில்' என்பது பல்லி இனத்தைச் சேர்ந்த ஒரு வகைப் பிராணி. இது தண்ணீர் குடிப்பதில்லை. தன்னுடைய தோல்வழியாக நீரை உறிஞ்சிக்கொள்ளும். இவை ஆஸ்திரேலியாவில் அதிகமாகக் காணப்படுகின்றன.

# வியப்பூட்டுகிறது 22/7

கணக்கியலில் (பை) என்ற குறியீட்டின் மதிப்பாகிய 3.14 ($^{22}/_{7}$) என்பது எவ்வாறு உருவானது? வட்டத்தின் சுற்றளவுக்கும் அதன் ஆரைக்கும் உள்ள விகிதமே 'பை' ஆகும். ஒரு வட்டம் உலகளவு பெரிதாக இருந்தாலும் நெற்றியில் வைக்கும் பொட்டு அளவுக்குச் சிறியதாக இருந்தாலும் அவற்றின் சுற்றளவு - ஆரை ஆகியவைகளுக்கிடையிலான விகிதம் எப்போதும் $^{22}/_{7}$ என்ற அளவில் இருக்கும். 'பை' யில் உள்ள இன்னொரு வினோதமான சிறப்பம்சம் என்னவென்றால் 3.14... என்ற எண் முடிவடையாமல் நீண்டு கொண்டே செல்லும் வரிசை என்றுமே மறுபடியும் திரும்பவராமலேயே இருக்கும். 'பை' யின் தசமதான எண்களை எத்தனை நீளத்திற்கு நினைவிலிருத்த முடியும் என்பதில் கின்னஸ் சாதனைகள் கூட உண்டு என்று குறிப்பிடப்படுகின்றது.




# பாதுகாப்பாக எடுத்துக்கொள்ளுங்களேன்...!

நம் உடலில் மருந்துகளின் செயற்பாட்டை நாம் சாப்பிடும் உணவு வகைகள் குறுக்கிட்டு சில நேரங்களில் செயலிழக்கச் செய்யும்.

நாம் எந்த மாதிரியான உணவுகளை சாப்பிடுகிறோம் என்பதே மருந்துகளின் தீவிரத்திற்கு அடித்தளமாக அமைகிறது.

உதாரணமாக நாம் அருந்தும் பாலில் உள்ள கல்சியச் சத்தானது நோய் எதிர்ப்புச் சக்தியான 'டெட்ரா சைக்கிளினை' உடல் கிரகித்துக் கொள்வதைத்தடுக்கிறது.

இதேபோல பல்வேறு ஊட்டச் சத்துகளும் நாம் உபயோகிக்கும் மருந்து மாத்திரைகளின் செயற்பாட்டிற்குத் தடையாக அமைக்கின்றன எனலாம். சில சந்தர்ப்பங்களில் நமது உடலில் இருந்து மருந்துகளை உணவுப் பொருள்கள் முற்றிலுமாக அகற்றி விடும் நிலை கூட உருவாகலாம்.

எனவே, சில மருந்துகளை உணவுடன் சேர்த்து சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

வேறு சில மருந்துகளை உணவுடன் சேர்ந்துச் சாப்பிடவேண்டும். அப்போது தான் வயிற்றில் எரிச்சல் ஏற்படுவது தவிர்க்கப்படும். சில நேரங்களில் ஊட்டச்சத்துக்களை உடல் கிரகிப்பதை தடுக்கும் நிலையை சில மருந்துகள் ஏற்படுத்தும்.

கொழுப்புகளை குறைக்கும் அல்லது தவிர்க்கும் மருந்துகளை நாம் எடுத்துக் கொள்ளும் போது, கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின்களும் உடலில் இருந்து அகற்றப்படும் நிலை உருவாகிறது.

சில நேரங்களில் உடலில் இருந்து பொட்டாசியம், காரியம் போன்ற மினரல் சத்துகள் குறைபாட்டையும் இவை ஏற்படுத்தி விடக்கூடும்.

# குப்பைக்கு யார் பொறுப்பு?

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் பரவல் செய்யப்பட்ட அறிவியல் தொழில் நுட்ப விளைவுகளினால் தேவைக்கு மேல் உற்பத்தி செய்து கொண்டே போகின்றோம்.

பொருள்களைப் பயன்படுத்திய பின்னர் பொருள்கள் பொதிசெய்யப்பட்ட காகிதங்கள், அட்டைகளை சுற்றுச்சூழல் மாசுபடாமல் யார் காப்பது? இதற்கு ஆகும் செலவுகளுக்கு யார் பொறுப்பு ஏற்பது? வெளிநாடுகளில் இப்பொழுது எறியப்படும் குப்பைகளுக்கு எல்லாம் அதிக பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் உற்பத்தியாளர்கள்தான் என்ற கருத்து நிலவி வருகின்றது.


ஐரோப்பாவில் உற்பத்தியாளர்களே பொறுப்பு என்னும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்படி குப்பைகளை அப்புறப்படுத்துவது, தரம் பிரிப்பது, மறுசுழற்சி முறையில் மறுபடியும் பயன்படுத்துவது போன்றவற்றுக்கான செலவுகளை தயாரிப்பாளர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜப்பான் ஆஸ்திரேலியா, சுவீடன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் இந்தச் சட்டம் அமுலில் உள்ளது. அமெரிக்காவில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. பொலீத்தீன் போன்ற பைகளை சுற்றுச்சூழலை சிதைக்கச் செய்யாமல் உக்கச் செய்வது மிகவும் கடினமாக இருக்கின்றது. இதற்கான செலவும் அதிகமாகின்றது. எனவே, உற்பத்தியாளர்கள் இனி எளிமையான, இலகுவில் உக்கக்கூடிய பைகளை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தொலைக்காட்சி தொல்லையா?

இன்று மாணவரிடையே கல்வி வளர்ச்சி குன்றப் பிரதான காரணம் தொலைக்காட்சி என்ற குற்றச்சாட்டு காணப்படுகின்றது.

பிரதான பொழுதுபோக்கு சாதனமான இதனால் பல தீமைகளும் உண்டு. நன்மைகளுண்டு. பாலிலுள்ள தண்ணீரை தெரிந்து பாலை மட்டும் குடிக்கும் அன்னப்பறவை போன்று நல்லனவற்றை நாம் பார்ப்பதன், மூலம் எமது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.



இன்றைய முன்னேற்றத்தில் தொலைக்காட்சிகளின் பங்கு அளப்பரியது. நாம் பெறும் அறிவில் 90 வீதமானவை கண்ணால் பார்ப்பதன் மூலம்தான் கிடைக்கின்றது.

★ தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பல்வேறு மருத்துவக் குறிப்புகள் - மருத்துவர்கள் வழங்கும் பேட்டிகள் - நோய் குறித்த எச்சரிக்கைகள், நோய்த் தடுப்பு முறைகள் மிக்க பயனுடையவை.

★ உடற்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றை தொலைக்காட்சியில் பார்ப்பது அதன் முறைகளை தெரிந்து கொள்ளவும், சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் உதவுகிறது.

★ விடயங்களை தெளிவாகவும் முழுமையாகவும் கேட்டு கண்டு களிக்க முடியும்.

★ சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை வீட்டிலிருந்தபடியே கண்டு களித்து ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளமுடிகிறது.

★ சுற்றுலா இடங்கள், பறவை, விலங்கு சரணாலயங்கள் பற்றியும் இயற்கை வனப்பையும் கண்டு களிக்க முடிகிறது.

★ பல்வேறு இடங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை, பண்பாடு நாகரிகத்தை அறிய முடிகிறது.

★ அறிவியல் செய்திகள் - கண்டு பிடிப்புகள் - வினாடி வினாப் போட்டிகள் அறிவை வளர்க்கின்றன.

★ புகைத்தல், குடித்தல் போதை மருந்தெடுத்தல் ஆகியவற்றால் விளையும் தீமைகள், அளவான குடும்பத்தால் ஏற்படும் நன்மைகள், சேமிப்பின் சிறப்பு, சுகாதாரத்தின் உயர்வு ஒற்றுமையின் வலிமை போன்றவற்றை கண்ணூடாகக் காணலாம்.

★ இலக்கியம் பகிர்தலில் வெளிப்படும் பண்புகளும் நீதிகளும் உள்ளத்தை செழுமைப்படுத்தும்.

★ ஓவியம் வரையக் கற்றுத் தருதல், பயனுள்ள பொழுதுபோக்குகள், தன்னம்பிக்கை ஊட்டும் முயற்சிகள் வளம் கூட்டுபவையாகும்.

★ குழந்தைகளுக்கான கருத்துள்ள படங்கள், உலக நாட்டுப் புறக்கதைகள், கருத்தைக் கவர்பவை, நன்னெறி காட்டுபவை. எவ்வளவு இடர்பாடும் இன்றி எளிதாக அறிவை வளர்க்கும் வாய்ப்புகள் ஏராளம் உண்டு.

இவ்வாறு இதன் பயன்கள் ஏராளம். ஒரு கண்டுபிடிப்பு அறிவியல் சாதனம் என்றால் அதில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு.


தொலைக்காட்சி நம் இல்லத்தில் ஓர் அங்கம். அதுவே இல்லம் அன்று. நாம் எமது அறிவைப் பயன்படுத்தி நல்லனவற்றைப் பெறுவோம்.

- கவிதா


## உங்களின் கைவண்ணங்கள்



ப.மேரி அஜந்தா, தரம் - 9, யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்.



தி.ஆன்சிஸ்ரா, தரம் - 4பி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



க்.நிசாந்தன், தரம் - 7ஏ, யா/கலட்டி.மெ.மி.த.க.பாடசாலை.



ந.ஜீவன், தரம் - 9சி, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.



விக்னேஸ்வரராஜா எழிலன், தரம் - 7சி, யா/பரியோவான் கல்லூரி.



அ.சதுர்சன், தரம் - 9ஏ, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.




# சிங்கத்தின் அறியாமை

மிருகங்களுக்கு அரசனான சிங்கம் ஒரு நாள் குரங்கை அழைத்து, எல்லா மிருகங்களையும் உடனடியாக அணி வகுத்து நிற்க வைக்குமாறு உத்தரவிட்டது. சிங்கத்தின் உத்தரவை குரங்கு எல்லா மிருகங்களிடமும் சொல்ல, அவையெல்லாம் ஓர் இடத்தில் அணி வகுத்து நின்றன.

சிங்கம் குரங்கை அழைத்துக் கொண்டு சென்று அணி வகுத்து நின்ற சிறுத்தை, கரடி, ஓநாய் காட்டுப்பூனை, கழுதை, முயல் ஆகியவற்றைப் பார்வையிட்டது. அப்போது அணி வகுப்பில் கடைசியில் நின்ற கழுதையையும் காட்டு முயலையும் பார்த்துச் சிங்கம் சிரிக்கத் தொடங்கியது.



குரங்கு அதுகண்டு ஆச்சரியத்துடன் ''அரசே ஏன் சிரிக்கின்றீர்கள்?' என்று கேட்டது. சிங்கம் உடனே காட்டு முயலையும் கழுதையையும் சுட்டிக் காட்டி 'நான் இந்தக் கழுதையைப் பார்த்துத் தான் சிரித்தேன். இதற்கு மூளையே இல்லை. அத்தோடு இந்தச் சின்ன மிருகமான முயல் எப்படி இந்த அணிக்குள் சேர்ந்தது? நாம் யுத்தத்துக்குப் போனால் இவற்றால் என்ன செய்யமுடியும்? அதுதான் எனக்குச் சிரிப்பாக இருக்கிறது, என்று சொன்னது சிங்கம். இதனைக் கேட்ட குரங்கு, அரசே! நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நீங்கள் சொல்வது போல கழுதைக்கு மூளை இல்லைதான். அதனால் யுத்தம் செய்ய முடியாதுதான். ஆனால், அது ஒரு சிறந்த ஊதுகுழல். அது சத்தம் போட்டால் உடனே நமது அணியை ஓர் இடத்தில் திரட்ட முடியும். முயலைப் பொறுத்தவரையில் நமது அணியினர் எங்காவது பிரிந்து விட்டால், இந்த முயல் நம்மவர்களின் ஒற்றனாகச் செயற்படும். அது வேகமாக ஓடக் கூடியது' என்று விளக்கமளித்தது.

குரங்கின் விளக்கத்தில் உள்ள உண்மையை உணர்ந்து கொண்ட சிங்கம் 'ஆமாம் நீ சொல்வதே சரி. ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான திறமை இருக்கத்தான் செய்கிறது. அதை உணராமல் பரிகசித்தது என் தவறுதான்' என்று கூறி மனம் வருந்தியது.

ம.கிரிஸ்சின் கஜானா, தரம் - 6, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## விடுகதைகள்

■ வாழ்க்கையைப் படித்தவர், வாழ்ந்து காட்டி வாழ அறம் தந்தவர், வையம் போற்றிடும் வான் புகழ் கொண்டவர். அவர் யார்?

■ நடமாடும் நான்கு தூண் மண்டபத்தில் மலைப்பாம்பொன்று ஆடும். அது எது?

■ வீட்டுக்குள் இரை தேடிக் களவாடும். வேட்டையாடி விருந்துண்ணும். வீட்டார் வெறுக்காமல் வளர்க்கின்ற செல்லப் பிள்ளை. அது எது?

■ சிவந்த பூ தொப்பிக்காரன். விடியலுக்குக் காவல்காரன். குப்பை மேட்டிலிருந்து கூவித் தினமும் எழுப்பிடுவான். அவன் யார்?

■ கொம்பிரண்டு எனக்குண்டு குத்தமாட்டேன். கண்ணிரண்டு அதில் உண்டு காண்பதற்கு அது என்ன?

■ கடவுள் படைத்த கல்லின் ஈரத்தில் கலங்காமல் கடைசி வரை என் வாசம். நான் யார்?

■ பூஞ்சோலை வரவேற்கும் பூவை அவள். வண்ண வடிவழகி தேனெடுக்க வந்திடுவாள். அவள் யார்?

■ ஓடி ஓடி உறவு கொள்வேன். நாடு நகரம் எனக்கில்லை. எல்லார்க்கும் சொந்தமான எடுப்பார் கைப்பிள்ளை. நான் யார்?

■ குடை விரிந்த தலை மீது குடம் குடமாய் நீர் சுமந்து கொடையாய் அளிப்பாள் எங்கள் குப்பத்துக் கொடை வள்ளல். அது யார்?

■ ஒரே ஒரு தூண் மீது நூறு கால் மண்டபம். ஓராயிரம் பறவைகள் அங்கு வந்து குடியேறும். அவை ஆடவும் ஊஞ்சல் உண்டு. பசியாறவும் கனி உண்டு. அது என்ன?

- ஜெநூரன்

| | |
|---|---|
| 1. திருவள்ளுவர் | 6. தேரை |
| 2. யானை | 7. வண்ணத்துப்பூச்சி |
| 3. பூனை | 8. ஆறு |
| 4. சேவல் | 9. தென்னை மரம் |
| 5. நத்தை | 10. ஆலமரம் |

## சிறப்புப் பெயர்கள்

★ முத்துத் தீவு என அழைக்கப்படும் நாடு
**பஹ்ரைன்**

★ பொ கோபுர நாடு எனப்படுவது
**பர்மா**

★ ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு என அழைக்கப்படுவது
**ஃபின்லாந்து**


★ கிராம்புத் தீவு என அழைக்கப்படுவது
**ஸான்சிபார்**

★ ரொட்டி நாடு என அழைக்கப்படுவது
**ஸ்கொட்லாந்து**

★ கங்காரு நாடு அழைக்கப்படுவது
**ஆஸ்திரேலியா**

- கஜன்

## வண்ணத்துப்பூச்சி



வண்ண வண்ண
வண்ணத்துப் பூச்சிகளே
பறந்து பறந்து வாருங்கள்.
பூவில் அமர்ந்து தேன் பருகிடலாம்
விரைந்து பறந்து வாருங்கள்.

எங்கள் வீட்டுப் பூந்தோட்டத்திலே
சுற்றிச் சுற்றி வாருங்கள்.
இயற்கைக் காட்சி பூந்தோட்டத்தில்
அழகு சேர்க்க வாருங்கள்.

கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை
மானிப்பாய்.

# "வாசிப்பையும் தேடலையும் நிறுத்தும்போது கலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது..."

இலங்கையில் கலைத்துறையில் அளப்பெரும் சேவையை ஆற்றியவர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான 'கலாகீர்த்தி' ஜனாதிபதி விருது கடந்த வருடம் முதன்முதலாக தமிழ் பிரதேசத்தவர் ஒருவருக்குக் கிடைத்துள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த பரதக்கலை மேதை ஏரம்பு சுப்பையாவின் வாரிசும் 'கலாபவனத்தின்' தற்போதைய இயக்குநரும் பரத கலாவித்தகருமாகிய திருமதி சாந்தினி சிவநேசனே இந்தப் பெருமையைப் பெற்றவராகிறார்.

'கலாகீர்த்தி' விருது பெற்ற அனுபவம் குறித்து அவர் மனந்திறந்து கூறிய கருத்துகள் இவை...

**கேள்வி :** எமது பிரதேசத்தில் இவ்விருது முதன்முதல் தங்களுக்குக் கிடைத்திருப்பதாக அறிகிறோம். இது பற்றிய உங்களுடைய மன உணர்வு எப்படி இருந்தது?

**பதில் :** கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதுகளில் இதுவும் ஒன்று. இத்தகைய ஜனாதிபதி விருதுகள் எம்மைவிட மூத்த கலைஞர்களுக்கே முதலில் கிடைப்பது வழக்கம். எம்மைப் போன்றோருக்கு காலஞ்செல்லத்தான் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால், இவ்விருது எனக்குக் கிடைக்கும் என நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பரதநாட்டியப் பரீட்சை ஒன்றுக்கு பிரதம பரீட்சகராகக் கடமையாற்றுவதற்காக வெளிநாடு சென்ற சமயம்தான் எனக்கு நடனத் துறையில இவ்விருது கிடைத்திருப்பதாக அறிந்தேன். இதனால், நான் பெருமையும், சந்தோஷமும் அடைகிறேன்.

**கேள்வி :** நீங்கள் பல்வேறு நடன நாடகங்களை எமது பிரதேசத்திற்கு அளித்தவர் என்ற வகையில் தற்கால நடன நாடகங்களை உருவாக்கும் போக்கு எவ்வாறு அமைகிறது எனக் கூற முடியுமா?

**பதில் :** நான் எனது தந்தையாரிடமும் இந்தியாவிலும் பரதம், கதகளி மற்றும் கிராமிய நடனங்களைப் பயின்றதன் மூலம் - பயிற்சி பெற்ற காரணத்தால் - அந்தந்த நாட்டிய நாடகங்களில் பாத்திரத்துக்குத் தக்கவகையில் நாட்டிய அமைப்புச் செய்கிறேன். ஒவ்வொரு பாத்திரமும் எந்தத் தன்மையைக் கொண்டமைகிறதோ அதன் இயல்பான ஆடல்முறைகளைப் புகுத்துகிறேன். அத்துடன், நாட்டிய நாடகத்திலும் - நிருத்திய நாடகத்திலும் - சில சந்தர்ப்பங்களில் சொல்லுக்குச் சொல் அபிநயிக்கச் செய்யாது சில நாடகத்தன்மையான அபிநயங்களையும் பக்கத்தில் நிற்கும் பாத்திரங்களுடன் சம்பாஷிக்கும்போது அதற்குரிய அபிநயங்களைப் பாத்திரத்தின் தன்மைக்கேற்ப வழங்குகிறேன். தற்காலத்தில் நடன நாடகங்களில் பங்கேற்று நடித்த அனுபவத்தினூடாகவே இதனைச் செயற்படுத்தலாம் நெறியாள்கை -செய்யலாம். இல்லாவிட்டால் நடன நாடகங்களைப் பார்த்த அனுபவமாவது இருக்கவேண்டும். இதுவும் இல்லாவிட்டால் சொல்லுக்குச் சொல் அபிநயம் தேடவேண்டி ஏற்படும். அது பொதுவான நிருத்திய நாடகத்தில் சாத்தியப்படாது. உள்ளார்ந்த பாவம் -இயல்பாக ஆடும் தன்மை - இதனால் கிடைக்காது போய்விடும்.

முன்னைய நிகழ்வுகளைப் பொறுத்தவரை கூடியளவில் இரவு நிகழ்வுகளாக இவை நிகழ்த்தப்பட்டன. கூடியளவு தொழிநுட்ப உத்திகளால் சிறியளவிலான அரங்க அமைப்புகளில் கூட நிகழ்வுகள் சோபிக்கச் செய்யப்பட்டன. தற்பொழுது நாடகத்தினூடாகச் சில நுட்பங்களைத் தெரிவு செய்து வித்தியாசமான நாடக உத்திகளை நடன நாடகங்களில் புகுத்தும் தன்மை காணப்படுகிறது. இம்முறை எல்லாத்துறைகளிலும் காணப்படுகிறது. (சினிமா, சின்னத்திரை) உதாரணமாக, ஒருவர் ஒரு சம்பவம் பற்றிச் சிந்திக்கும்போது அச்சிந்தனையோட்டம் நிகழ்வாக அந்நேரம் காட்சிப்படுத்தப்படுகிறது.

இதுபோல் முன்பு பாடலுக்கு முழுவதும் அபிநயிக்கும் முறை தற்போது சிறிது மாற்றமடைந்து நாடகப் பாணியில் அமைவதைக் காணலாம். உதாரணமாக, நான் வழங்கிய 'ஆர்கொலோ சதுரா' நாட்டிய நாடகத்தில் 'யானை எத்தனை? குதிரை எத்தனை?...' என்ற வரிகளைப் பாடலாகப் பாடும்போது நடன மணிகள் வரிசையாக யானைகள் போன்றும் குதிரைகள் போன்றும் ஓரிரு நிமிடங்களில் வந்து சென்று பார்வையாளருக்கு விளக்க வைக்கும் தன்மை காணப்பட்டது. தற்போதைய நடன நாடகங்களில் இத்தகைய பாணி பெருமளவில் காணப்படுகிறது எனலாம்.

**கேள்வி:** தற்போது பரதநாட்டிய அரங்கேற்றங்கள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. இத்தகைய அரங்கேற்றங்கள் பரதக் கலையின் தாற்பரியத்தை உணர்ந்தவகையில் இடம்பெறுகின்றனவா?

**பதில் :** சில அரங்கேற்றங்கள் மட்டுமே சொல்லத்தக்க வகையில் உள்ளன.

சில 'புதுமை' எனக் கூறி ஏதோ கற்பனைக்கு எட்டியவகையில் திணிக்கப்படுவனவாக உள்ளன. நுட்பங்கள், புதிய விடயங்கள் கால மாற்றத்திற்கு ஏற்ப வரத்தான் வேண்டும். ஆனால், அடிப்படை மாறாதவையாக - முழுமையான வையாக - இருக்கவேண்டும்.

முன்பு அரங்கேற்றங்கள் குருவின் சொல்வழி வந்த பத்ததி முறையிலமைந்தன. தற்போது புதிய உருப்படியை முன்வைக்கும் சிந்தனை காணப்படுகிறது. தற்போது புதுமைக்கு வரவேற்புக் காணப்படுகிறது. கூடியளவு நாட்டிய உருப்படிகள் பரவலாக்கப்பட்டதால் புதிய உருப்படிகளுக்குரிய சாகித்தியத்தையே விரும்புகிறார்கள். இதனாலேயே ஆசிரியர்களும் புதிய புதிய உருப்படிகளைத் திணிக்கிறார்கள். மாணவரை அறிந்து செயற்பட வேண்டும். தாம் நினைக்கும் விடயங்களைப் பல உருப்படிகளில் கொடுக்கக் கூடாது.

அரங்கத்தில் குரு தனது தனித்தன்மையைப் பேணவேண்டும். ஒளிப்பதிவு நாடாவிலிருந்து 'உருப்படித் திருடல்' இடம்பெறக்கூடாது.



## பரதக்கலை மேதை சாந்தினி சிவநேசன்

இரு வேறுபட்ட கலைஞர்களுடையதைத் தொகுக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் தனித்தன்மை இழக்கப்படும்.

**கேள்வி:** ஏனைய நாடுகளில் நடைமுறையிலுள்ள பரதக்கலைப் பாரம்பரியத்திற்கும் நமது பாரம்பரியத்திற்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகள் பற்றித் தங்களது கருத்து யாது?

**பதில்:** புலம்பெயர் நாடுகளில் பரீட்சை விதிகள், போட்டிகளுக்கு அமையவே நடனப்பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. புலம்பெயர்ந்து வேற்றுமொழிக் கலாசாரத்தில் வளரும் பிள்ளைகளும் பெற்றோரும் கூட மிகுந்த பிரயாசைப்பட்டு நடனக்கலையைப் பயில்கின்றனர் - பயிற்றுவிக்கின்றனர்.

அந்த நாடுகளில் காலச் சூழலுக்குள் இருந்து கொண்டும் பரீட்சைகள் நிகழ்ச்சிகள் மூலம் பரதக்கலையை வளர்த்து வருகின்றனர்.

எமது நாட்டில் கலாசாரம் பேணுவது மிகஇலகு. ஆனால், புலம்பெயர் நாடுகளில் அது கடினம். அவ்வாறிருந்தும் பல மைல்கள் கடந்துசென்று சிரமம், பாராது பரதக்கலை பயின்று கலாசாரத்தைப்பேணி வாழ்ந்து வருகின்றமை போற்றத்தக்கது. இதற்கு அங்கு அடித்தளமிடுபவை பரீட்சைகளும் போட்டிகளுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** 'நட்டுவாங்கம்' பற்றி...

**பதில் :** இது ஒரு தனிக்கலை. கண்ணால் பார்த்தோ அல்லது காதால் கேட்டோ நட்டுவாங்க நுணுக்கங்களை அறியமுடியாது. ஒரு குருவின் கீழ் நட்டுவாங்கத்தின் நுட்பங்களைப் போதியளவு பயிற்சி பெற்றால்தான் காலப் பிரமாணத்துடன் இயல்பாக நட்டுவாங்கம் செய்யமுடியும். ஒரு சில நுணுக்கங்களைப் கற்றுவிட்டு 'கடல்' போன்ற பரத நாட்டிய உருப்படிகளுக்கு நட்டுவாங்கம் செய்வது கடினம். போதியளவு பயிற்சியின்றித் தம் விரும்பத்திற்கேற்ப நட்டுவாங்கம் செய்யமுடியாது. நடன நிகழ்வில் நடன மணியின் ஆடல் இயல்புக்கேற்ப நட்டுவாங்கமும் இயல்பாக அமைந்தால்தான் அந்த நடனக் கச்சேரி சோபிக்கும்.

**கேள்வி:** தற்போது வளர்ந்து வரும் இளம் கலைஞர்களுக்கு - குறிப்பாக ஆசிரியர்களுக்கு - நீங்கள் சொல்ல விரும்புவது யாது?

செவ்வி கண்டவர்
**சாம்பவி**

**பதில் :** பொதுவாக இளம் ஆசிரியர்கள் நடனமோ இசையோ கற்று முடிந்ததாக முற்றுப்புள்ளி வைக்க இயலாது. ஏனெனில், அதன் பின்னரே தேடல் அதிகம் வேண்டிக் கிடக்கிறது தாம் கற்ற வித்தையின் வட்டத்துக்குள் நின்றுவிடாது மேலும் நிறைய நாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்க்கவேண்டும். தொலைக்காட்சிகளில் இடம்பெறும் நடனம் சம்பந்தமான பேட்டிகள், கருத்தரங்குகளைப் பார்வையிட வேண்டும். நாட்டியம் சம்பந்தமாக வெளிவரும் கட்டுரைகள் கலைஞர்களின் அனுபவப் பகிர்வுகளை வாசிக்க வேண்டும். இதனால் கலை மேலும் வளர இடமளிக்கப்படுகிறது. எப்போது ஒரு மனிதன் வாசித்தலையோ தேடலையோ நிறுத்துகிறானோ அங்கு கலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது அது இருக்கக் கூடாது.

'தாரமும் குருவும் தலைவிதிப்படி' என்று மூத்தோர்கள் கூறியுள்ளனர். அதற்கமைய மாணவர்களே நல்ல குருவைத் தேடிச் சென்று கலை பயில வேண்டும். இதன் மூலம் அருகி வருகின்ற செய்முறை நுணுக்கங்களை சிறப்படையச் செய்யமுடியும்.

## புரிதல்

மனசின் ஓரத்தில்
ஏதோவோர்
தகிப்பு
கனதியாய்க்
கனக்கிறது!
மனசதுவும்
எங்கெங்கோ
எதிலெதிலோ
பயணித்துப் பின்
எனதிடமே
அடைக்கலமாய்ச்
சரணடைகிறது!
எல்லோரையுமே
எடை போட்டுய்த்தறியும்
மனசு
என்னை விடத்
தானே
முயற்சியாளனென்பதுவாய்
எனை வீழ்த்திச்
செல்கையிற்றான்
எனக்கும் சீற்றம்...
மனசதன் மேல்
ஆனாலும்,
பேசாதிருந்தேன்!
என் மனசுதானே
அது வென்றெண்ணி
ஏனென்றால்,
என்மனசு
அப்படியிருந்ததாற்றான்
சிலரை
உய்த்துணர இயன்றது
என்னால்!

ச.நிரஞ்சனி.

## அன்புமொழி வேண்டல்

உனக்காக
எனக்குள்
நான் வளர்த்தது
கோழைத்தனங்களை....

குழந்தையாக
நான் சிறுத்து
உன் மடியிலிருந்து
அனுபவித்த
தாய்மைதான்
இன்னும் இனிக்கிறது....!

உன் கபடமற்ற
புன்னகையிலும்
நீ தரும்
அன்பு மொழியிலும்
சுகம் தரும்
சின்னச் சண்டையிலும்
கழிந்து போனது
பெறுமதியாக
என் பொழுதுகள்....!

உனக்காக
அன்று நான்
உதறித்தள்ளிய
உலக உறுப்புக்களை
இன்னும்
வெறுக்கிறேன்;
நீ மட்டும்தான்
என்னோடு
கூடியிருக்க வேண்டும்
என்பதற்காய் ....!!!

கு.பா.தீபச்செல்வன்

## பெயரைத் தேடி...

ஈ யொன்று
தன் பெயரை
மறந்து விட்டது

ஈ எல்லா இடங்களிலும்
தேடியது
இறுதியில்
'ஈ' யென்று இளித்த
குதிரையின் வாய்மொழியால்
ஈ
தன் பெயரை
மீட்டெடுத்துக் கொண்டது
இது கதை

நான்
ஒரு பெண்
எனக்கென இட்ட பெயர்...
பள்ளி வயதுகளில்
பரிசுகள் பெற்ற பெயர்...
தந்தையின்
முதலெழுத்தோடாயினும்
தனித்துத் தான்
இருந்தது.

மணவாழ்வு வந்ததும்
மணவாளன் பெயரதனை
மரபென்ற காரணத்தால்
மங்கை நான்
ஏற்றிட்டேன்

மண வாழ்வோ
பொருந்தவில்லை
அவனே தான்
முடிவெடுத்தான்

சட்டத்தின்
முன்னாலும்
ச(ட)ம்பிரதாய -
பின்னணியாலும்
தன்யனானேன்
தலைப்பெயரே
இல்லாமல்

அவன்
அவனாய்த்தானிருந்தான்

என் பெயரைத் தேடி
ஏந்திழை நான்
அலைக்கழிய
இன்னொருவன்
வந்தான்
தன்பெயரை எந்தனுக்குத்
தருவதாய் வாக்களித்தான்

எனக்கென்றே
பெயரில்லை
சொத்துரிமை கொள்ள
நான் என்ன
வெறும் ஜடமா?
ஜடத்துக்கும்
பெயருண்டே
எனக்கென்றேன்
பெயரில்லை?

நான்
முடிவெடுத்தேன்
என் பெயர் என்னவென்று
நானே முடிவெடுத்தேன்

தற்செயலாய்த்
தட்டுண்ட
தடகளப் போட்டி
சம்பியன் சான்றிதழ்கள்
எனை
மீள நினைவுறுத்த
என் பெயரை
மீட்டெடுத்தேன்
என் பெயரை
மந்திரமாய்
மீள மீள
முணுமுணுத்தேன்

எனக்கான
உறவுகள்
எப்போதும் மாறலாம்
அதற்காக
என்பெயரேன்
உருமாற்றம்
உறவேண்டும்

'ஈ' யொன்று
தன் பெயரை
மீடெடுத்துக் கொண்டது
'ஈ'
தன் பெயரை மந்திரமாய்
மீள மீள
முணுமுணுத்துக் கொண்டது

- நா.ஷியமளாம்பிகை

# பெண்களின் வளர்ச்சி இல்லறத்தின் எழுச்சி


பருவ காலத்தில் ஒரு பெண்ணுக்கு பால் உறுப்புகளின் வளர்ச்சி மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் தூண்டுதலால் பாலின உணர்வுகள் கிளர்ந்தெழுவது இயற்கை. ஆனால், ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், படிப்பில் இளம் வயதினர் கவனம் செலுத்த வேண்டும். மேலும் சாதிக்க வேண்டியதை முன்னிறுத்தி வாழ்க்கையை இளைஞர்களும் இளம் பெண்களும் திட்டமிட வேண்டும். உரிய வயதை எட்டியவுடன் அறிவு முதிர்ச்சியுடன் வாழ்க்கை துணையைத் தேர்ந்தெடுப்பதில் இளம்பெண்கள் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

கண்டவுடன் காதலோ அல்லது இனக் கவர்ச்சி அடிப்படையிலோ ஒரு ஆணை பெண் விரும்புவது நல்லது அல்ல. புறத்தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையிலேயே தோன்றும் இதமான உணர்வும் விட்டுக் கொடுத்து பரஸ்பரம் ஒத்துப் போகும் தன்மையுமே உண்மையான காதலாக இருக்கமுடியும். ஒருவருக்கொருவர் மனதளவில் புரிந்துகொண்டு வாழ்க்கையில் இருவரும் சாதனை புரிவதற்கு பரஸ்பரம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இல்லற வாழ்வைத் தொடங்குவதற்கு முன்பு, மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆணும் பெண்ணும் தாம்பத்யம் குறித்து தெளிவான அறிவைப் பெறுவது அவசியம். பாலியல் தொடர்பான விடயங்களை இருவரும் அறிவியல் பூர்வமாகத் தெரிந்து கொள்வது அவசியம்.

உணர்ச்சிகளை - அன்பை பரிமாறிக் கொள்ளும் ஆயுள் களமே திருமணம் என்பதை இன்றைய இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்த உடனேயே அவளைப் படிக்க வைத்து ஆளாக்கி ஒரு நல்ல ஆண் மகனிடம் ஒப்படைக்க (திருமணம்) வேண்டும் என பெற்றோர் ஆசைப்படுவது இயல்பானது. குழந்தைகளைப் படிக்க வைத்து சொந்த காலில் நிற்கும் அளவுக்கு உருவாக்கி அவர்களின் இனிய இல்லற வாழ்வுக்கு அடித்தளமிடுவது பெற்றோரின் கடமை. தோள் வரை வளர்ந்து விட்டால் தோழன் என்ற மனப் போக்கை பெற்றோர் வளர்த்துக் கொள்ளவேண்டும்.



ஆனால், திருமணத்துக்குப் பெரும் பொருளைச் செலவு செய்யும் பெற்றோர், திருமண பந்தத்துக்குத் தேவையான அறிவைக் குழந்தைகளுக்குச் சொல்லித் தர தவறி விடுகின்றனர். இவ்வாறு இல்லாமல் மகளிடம் அன்போடு பழகி இல்லற இன்ப - துன்பங்களை தாய் வெளிப்படையாக விளக்க வேண்டும்.

வயது வந்த தங்களது குழந்தைகளின் மன உடல் மாற்றங்களை தொடர்ந்து பெற்றோர் கவனித்து வரவேண்டும். தங்களது குழந்தைகளின் மீது அக்கறை செலுத்த நேரம் ஒதுக்கவேண்டும். 'செய்யாதே' என்று சொல்வதை விட நட்புடன் பழகி ஒரு விடயத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என அன்புடன் நேர்மறையாகக் கூற வேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால், ஒரு இளம் பெண் தனது பிரச்சினையை எவ்வித பயமும் இன்றி பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு வீட்டில் நட்புச் சூழல் இருப்பது அவசியம்.

ஒழுக்கத்தைப் பெற்றோர் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். ஏனெனில், பெற்றோரின் நடவடிக்கைகளைக் குழந்தைகள் உன்னிப்பாகக் கவனித்து அதன்படி நடப்பது இயல்பானது.

வளமான சமுதாயம் உருவாக... இன்றைக்கு இந்தியா உட்பட உலகம் முழுவதும் ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். பொருளாதாரத் துறையிலும் இந்தியா முன்னேறி வருகிறது. வளமான சமுதாயம் உருவாக வேண்டுமானால் இன்னும் அதிக அளவில் பெண்கள் கல்வி அறிவு பெற்று வாழ்க்கை நெறிகளிலும் சிறந்து விளங்குவது அவசியம்.

பெண்களின் கல்வி அறிவு விகிதத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதன் மூலமும் யாரையும் சார்ந்திராமல் அவர்கள் சுயமாக வாழ்க்கை நடத்த வழி செய்வதன் மூலமும் எய்ட்ஸ் போன்ற நோய்களில் இருந்து அவர்களைக் காக்கமுடியும். பள்ளிகளில், கல்லூரிகளில் இனப் பெருக்க, சுகாதாரக் கல்வியை ஆசிரியர்கள் சொல்லித் தருவதும் அவசியம். 21 வயதை அடைந்தவுடன் திருமணம் மற்றும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கைக் கோட்பாட்டில் உறுதியாக இருந்தால் இனிய இல்லறம் தொடர்ந்து கைகூடும் என்பதைப் பெண்கள் மறந்து விடக்கூடாது

. நன்றி :- தினமணி




## சாதனை



அமெரிக்க விண்வெளி வீராங்கனை ஷேனன் லூசிட். இவர் பல முறை விண்வெளியில் பறந்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர். இவர் செய்த ஆராய்ச்சிகள் அமெரிக்க விண்வெளித் துறைக்கு மிகவும் உதவியாக இருந்தது. இதனால் இவரை பலமுறை அமெரிக்க அரசு விண்வெளி ஆராய்ச்சிக்காக அனுப்பியது.

கிட்டதட்ட ஐந்து முறை விண்வெளியில் பறந்துள்ளார். உலகிலேயே அதிக முறை விண்வெளிக்கு பயணம் செய்த விண்வெளி வீராங்கனை என்ற பெருமையும் இவருக்கு உள்ளது.

இது தவிர 1996ஆம் ஆண்டு விண்வெளியில் பயணம் மேற்கொண்ட போது மற்றொரு பெருமையும் இவருக்கு கிடைத்தது. அதாவது, விண்வெளியில் பறந்த வீராங்கனைகளில் வயதான பெண்மணி யாகத் தேர்வு செய்யப் பட்டார். இந்தச் சாதனைக்குப் பெருமை சேர்க்கும் விதமாக இவருடைய பெயர் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.

## அழகுக்குப் பின்னால்...

*சாதாரணமாக நம்மை அழகுபடுத்துவதற்கு அழகு சாதனப் பொருள்களை வாங்குகின்றோம். அவ்வாறு ஒரு பொருளை வாங்கும் போது எத்தனை பேரின் வீட்டில் பெற்றோரின், சகோதரர்களின் பேச்சிற்கும் ஏளனத்திற்கும் உள்ளாகின்றோம்.*

*'இவ்வளவு காசிற்கு ஒரு கிறீமை வாங்கவேண்டுமா?' எனக் கேட்பார்கள். அவ்வாறு கேட்பவர்களுக்காக இந்தத் தகவலைத் தருகின்றோம். அமெரிக்கர்கள் தங்களை அழகுபடுத்துவதற்காகச் செய்யும் செலவைக் கேட்டாலே மூக்கின்மேல் மட்டுமல்ல தலையிலும் கையை வைத்து விடுவோம்.*

* அழகு சாதனங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 90 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கின்றார்கள்.
* உடல் அழகிற்கான மருத்துவச் செலவு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய்.
* உணவுக் கட்டுப்பாடு என்னும் பெயரில் விசேட உணவுகளுக்காக செலவிடும் தொகை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்.

# முடிவு

கடுகுக்கதை

மூத்தையன் கட்டுக்குளத்தில் குளிப்பதை நினைக்கவே மனம் சந்தோஷித்தது. சித்தியின்ரை பச்சையரிசிச் சோறும், குளத்து மீனும் முட்டைப்பொரியலும் நாவில் நீரை நிறைத்தது. மேனன் வளர்ந்திருப்பான். பிடிவாதக் குணம் குறைந்திருக்குமோ தெரியாது. சித்தப்பா அந்த ஊத்தைச் சாரத்தோடை தோட்டத்தைச் சுத்திக்கொண்டிருப்பார். ஒற்றைக் கண்சின்ராசண்ணை வேட்டைக்குப் போய் மான்வத்தல் கொண்டு வருவார். இப்ப ஆளுக்கு வயதும் போயிருக்கும்.

சின்னவயதில் பண்டார வன்னியன் சிலையைப் பார்த்து அழுததை நினைக்கச் சிரிப்புத்தான் வந்தது. இப்போதெல்லாம் நண்பர்கள் மத்தியில் -

''பண்டார வன்னியன்ரை ஊரவனடா நான்'' என்று மார்தட்டிப் பெருமிதம் கொள்ளமுடிகிறது.

முகமாலை, பளை, இயக்கச்சி என நேரம் போகப்போக பயணத் தூரம் குறைந்து கொண்டிருக்கிறது. அம்மா சுட்டுத்தந்த பனங்காய் பணியாரங்களில் இரண்டை வாயுள் திணித்தேன். சொல்லாமல் கொள்ளாமல் போய் இறங்க சித்திக்கு அதிர்ச்சியாகத்தானிருக்கும்.

ஆனையிறவு....

அடிமைச் சின்னமொன்று அகன்ற மகிழ்வில் காற்றும் மரங்களுடன் மாவீரர் கதைபேச மரங்கள் ஆமோதித்துத் தலையாட்டிக் கொண்டிருந்தன.

எங்கள் உறவுகள் எத்தனைபேர் மாண்டார்கள். அவர்களின் குருதியால் கழுவப்பட்ட வீதியில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். புனிதர்களின் தியாகத்தில் குளிர்காய்வது போன்ற தாழ்வுச் சிக்கல் என்னை உறுத்துகிறது.

வேறுதிசையில் சிந்தித்து மனதை மாற்ற முனைந்தேன். முடியவில்லை! நானும் இந்தத் தேசத்திற்குரியவன் தானே.

சித்திக்குக் காட்டுவதற்காகக் கொண்டு வந்த படங்களில் நானும், அம்மாவும் தங்கைச்சியும் உள்ள படமொன்றைப் பத்திரப்படுத்திக் கொண்டேன். அம்மாவின் கைப்பட ஆக்கிய பணியாரமும் முடிந்துவிட்டது.

இனிமேல் அதிர்ச்சி சித்திக்கு மட்டுமல்ல அம்மாவுக்கும் தான்!

- வினோ

## உருண்டு தொடரும் உயிர்

உச்சிக்கிளை
உயரத்தை
அளந்து கொண்டா
முளைக்கத் தொடங்கும்
விதை

சங்கமிக்கும்
வழியைக்
கண்டுகொண்டா
மலையிலிருந்து
விழத் தொடங்கும்
நதி?

உருண்டு தொடர்கிறது
என்
உயிர்
உன்
பாதத்தை

ஒளியின் ஒளியே!
நேற்று
அதிகாலை
கண்டேன்
ஈயத்தட்டில்
பிச்சை வாங்கியது
உன்னிடம்
சூரியன்

தூரத்திலிருந்தே
உன்னை
வணங்கி
கல்லடுப்பில்
பொங்கல் வைக்கிறேன்

வரங்கள் கேட்காமலே
வீதியில்
நடந்து
என்னுள்

அழகாய்க் கட்டினாய்
பிரமிட்டு

திசை தவறி
என்றேனும் வந்தால்
எட்டிப்பார்

சவமாய்க் கிடக்கிறது
கருதரித்த
ஒரு
பருவச் சொல்.
நீ
உயிரில்
மட்டுமல்ல
என்
கல்லறையிலும்
படரும்
முட்செடியாயினும்.

## விசமுள்

காணியைத்
துப்புரவாக்கியவன்
ஆ...... ஆ..... என்று
காலைத் தூக்கினான்
முள்ளுக்குத்தி விட்ட தாம்
ஊசி கேட்டான்

நெஞ்சுச் சட்டைக்கு
விடுதலை கொடுத்து
முள்ளெடுக்கக் குனிந்து
காலைத் தொட்டாள்

முனகல் நடிப்புக் காரன்
சட்டை யூடே பார்வையை
மெல்ல நகர்த்தினான்

தற்செயலாய் கண்டவளுக்கு
நெஞ்சில்..................
ஆணி அறைந்தது போன்ற
வேதனை!

– ந.வினோதரன்

## ஆத்மாக்களும்பேசும்!

எல்லோருக்கும் தெரிந்ததாய்
ஒரு முகம்
அனைவரது ஏக்கமும்
அந்த வதனத்தை பார்க்கவேண்டும்
திலகமிட வேண்டும் என்பதே.

துப்பாக்கிகளும் குறுக்கே
விழுந்து கிடக்கிறாள்
வெடிகுண்டுகளின் நடுவே
தத்தளிக்கிறாள்.

மீட்பர் இல்லாது – இவள்
வாழ்வு முடிந்துவிடுமோ?

இப்போது,
வேட்டொலிகள் தணிந்து போனாலும்
ஜமதூதர்களால்
மரணத்தின் இன்னொரு அத்தியாயம்
திறக்கப்பட்டிருக்கிறது
கடவுளுக்கே தெரியாமல்!

தாலி கட்டத் துடித்தவர்கள்
வேலியோரப் புல்லாய்
மேயப்படுகிறார்கள்

கல்லறைகள் கனதியான
கனவுகளோடு மௌனமாய்
உடைகின்றன
துரோகமிழைத்த எவரும்
கல்லறைக்குள்ளும்
கொல்லப்படுவார்கள்

விடிந்திடாத தேசம்
விடியும் வரைக்கும்
கல்லறைகளும் போரிடும்

மடிந்து போன – புனித
ஆத்மாக்களும்
விடிவுக்காகப்பேசும்.

- சுதேசிகன்

## ஆராய்ச்சி மணி அடித்து...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைமையில் நமது 'காற்றைத் துரத்தும்' குதிரை வைக்கோல் ஏதும் கிடைக்காதா என்ற ஆவலில் முன்னால் தென்பட்டவைகளை வாயால் கடித்து இழுத்து பார்த்து சாப்பிடக் கூடியவைகளை சாப்பிட்டுக்கொண்டும் அல்லாதவைகளை கைவிட்டும் சென்று கொண்டிருந்தது. அவ்வாறு செல்கையில் தற்செயலாக அந்தவூர் ஆராய்ச்சிமணியைத் தாங்கி நின்ற தூண்களில் ஒன்றில் மோதிக்கொண்டது. அதேவேளை மணியில் பிணைக்கப்பட்டிருந்த கயிறு அதன் முகத்தில் படவே என்னவென்றறியாது கயிற்றை வாயால் கவ்வி இழுத்துப்பார்த்தது. அதனால், ஆராய்ச்சிமணி ஒலிக்கப்பட்டுவிட்டது.

வெகு காலத்துக்குப்பின்னர் ஆராய்ச்சிமணி ஒலித்ததால் ''என்னவோ, ஏதோ நடந்து விட்டது'' என்று நினைத்து ஊர்மக்கள் கூடிவிட்டார்கள் - பஞ்சாயத்துத் தலைவர்களும் கூடினார்கள். மணியை ஒலிக்கச் செய்தது கண்தெரியாத குதிரை - ஆல்தோமை ஒரு காலத்தில் காட்டு கள்வர் களிடமிருந்து காப்பாற்றிய காற்றைத்துரத்தும் குதிரை என்று கண்டதும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். குதிரையின் முறைப்பாட்டை அவர்கள் கேட்காமலே புரிந்து கொண்டார்கள்.

ஆல்தோம் அழைக்கப்பட்டார். காட்டில் கள்வர்களிடமிருந்து அவர் உயிரைக் காப்பாற்றிய காற்றைத் துரத்தும் குதிரைக்கு வாக்களித்தபடி அதை பராமரிக்கத்தவறியதற்காக ஆல்தோம் கண்டிக்கப்பட்டார். அது உயிருடனிருக்கும் வரை தினமும் மூன்று கொத்துகோதுமை வழங்க வேண் டும் - முறையாக பராமரிக்க வேண்டும் - என்று உத்தரவிடப்பட்டார். அவர் அவ்வாறே செயல்படுகிறாரா என்பதைக் கண்காணிக்கவும் ஆள் நியமித்தது கிராம பஞ்சாயத்து.

(ஏ புக் ஒட் டேல்ஸ். றடுகா வெளியீட்டாளர்கள் -மாஸ்கோ, என்ற நூலில் இக்கதை காணப்படுகின்றது.)

# செந்தமிழ்க்காவலனும் செழுந்தமிழ்ப்பாவலனும்




கொடையும் வீரமும் பாரியின் உடன்பிறந்தவை. கொடையாலும் வீரத்தாலும் அவன் புகழ் எங்கும் பரவியது. பாரியின் புகழ் மூவேந்தர்க்குப் பொறாமையை உண்டாக்கியது. நேர்ப் போரில் வெல்லமுடியாத மூவேந்தர் சூழ்ச்சியினால் பாரியைக் கொன்றனர்.

பாரி வீர சொர்க்கம் அடைந்தான். பாரியின் உயிர் நண்பர் கபிலர். பாரி மகளிர்க்குத் திருமணம் செய்து வைப்பதற்காக சில காலம் வாழ்ந்தார். பாரி மகளிர்க்குத் திருமணம் செய்து வைத்த பின்னர் பாரியை நினைத்து வடக்கிருந்து உயிர் நீத்தார். தமிழுக்குப் பெருமை சேர்த்த கபிலர் சிறந்த நட்புக்கு உதாரணமானார்.

*வெற்றிதனை உறும்போதும் அறநெறியில் தவறான்*
*வீழ்ச்சியினை உறும்போதும் அறநெறியில் தவறான்*
*உற்றதொரு நெறிநிற்போர் வீழ்ந்தாலும் கூட*
*உடன் வந்தே அறக்கடவுள் தூக்குமென்பது தறிவான்!*

*பாரியென்னும் பெருவள்ளல் பிறந்திட்ட போதே*
*பண்பு கொடை இரண்டும் அவன் உடன் பிறந்த என்பார்*
*நேரியதன் ஆட்சியினால் மக்கள் உளமெல்லாம்*
*நிலைத்திட்ட தெய்வமென அவன் வாழலானான்!*

*மானிடர்க்கே உதவலொடு பறம்பினிலே வாடும்*
*மலர்க்கொடிக்கும் இரங்கினான் என்னுமொருசெய்தி*
*நானிலத்தே பரவியதால் குன்றில் அவனிருப்ப*
*நற்புகழோ உலகெங்கும் சென்று பரவியதே*

*பொருள் வேண்டிப் புலவரெலாம் வருவார்கள் அவன்பால்*
*பொருள் உணர்ந்து பாடலுக்குப் பொருள் கொடுப்பான் அவனும்*
*அருள் மேவு சிந்தையரால் கபிலரெனும் புலவர்*
*அவனிடத்தில் ஒரு நாளில் மாலை வந்து சேர்ந்தார்!*

*வரிசையறிந்து உபசரிக்கும் பாரியெனும் மன்னன்*
*வண்தமிழில் வல்லவராம் கபிலரினைக் கண்டே*
*பெரிதுவந்தான் கபிலரே பறம்பினில் நீர்வாழ்ந்தால்*
*பெருமை மிகும் பறம்பினுக்கே என உரைத்தே மகிழ்ந்தான்.*

*மூவேந்தர் நிலப்பரப்பால் பெரியவரே எனினும்*
*முற்றியதாம் பொருள் வளத்தால் பெரியவரே எனினும்*
*பாவேந்தர் தமை மதிக்கும் பண்புதனை நோக்கின்*
*பாரியே அவர் நினைக்கும் சிறிய ரென்ச்சொன்னார்!*

*தங்களுக்கோர் மண்டபத்தைத் தந்துவிடுகின்றேன்*
*தங்களது சுற்றமொடும் தங்கிடலாம் தாங்கள்*
*அங்கிருந்தே தமிழ் மொழிக்காம் தொண்டெல்லாம் செயலாம்*
*ஆம்வசதி அத்தனையும் நாம் தருவோமென்றான்.*

*தமிழ்ப் பற்றும் அறப்பற்றும் அல்லாமல் வேறே*
*தனிப்பற்றை அறியாத கபிலரெனும் புலவர்*
*தமிழ்ப்பணிக்கே எனைப் பணித்தாய் தங்குகிறேன் என்றே*
*தங்கினார் சுற்றமொடும் பாரியது நாட்டில்*

*பாரியின் நற்புதல்வியர்கள் கபிலரிடம் சென்றே*
*பார்போற்றும் பெரும் புலவர் தங்களிடம் தமிழைச் சீர்*
*உறவே கற்பதற்குச் சிந்தை மிக விழைந்தோம்*
*செகத்தெமக்கு கற்பித்தே அருள்வீரோ? என்றார்.*

*கற்க விரும்பிடுவோர்க்குக் கல்வியினை வழங்கல்*
*கற்றவர்கள் எல்லோர்க்கும் தலையாய கடனாம்*
*பற்றுளத்தால் முல்லைக்குத் தேரீந்தோன் மக்கள்*
*படிப்புளத்தால் இங்கு வந்தீர் படித்திடலாம என்றார்?*

(வளரும்)

புலவர் ம. பார்வதிநாதசிவம்

# கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் எதுகைமோனை முழக்கங்கள்

**கோ**யில்த் திருவிழா கொடியேற்றத்தோடு தொடங்கும். தேர்தல் திருவிழா தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் தேர்தல் அறிக்கையோடு தொடங்குகிறது எனலாம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் தேர்தல் என்பது அரசியல் கட்சிகளுக்கு வாழ்வா தாழ்வா என்ற போட்டி என்றால் அது மிகையல்ல.

பகவத்கீதையில் தனது உற்றாரோடும் மற்றோரோடும் போர் செய்ய மறுத்துத் தனது காண்டீபத்தைக் கீழே போட்டுவிட்டு உட்கார்ந்துவிட்ட அருச்சுனனை, போர் செய்யத் தூண்டிக் கண்ணன் குளையடிக்கிறான்.

'நீ சத்திரியன்!. போர் செய்வது சத்திரியனுக்கு விதிக்கப்பட்ட தர்மம். எனவே, காண்டீபத்தை எடு, அம்பை விடு, எதிரிகளைக் கொல், போரில் நீ வென்றால் அரசனாக முடிசூட்டி இந்த இராச்சியத்தை ஆண்டு அனுபவிக்கலாம். போரில் தோற்று இறந்துபடநேர்ந்தால் சொர்க்கம் உனக்குக் காத்திருக்கிறது. எனவே போர் செய்யத் துணிந்து விடு!' என்கிறான் கண்ணன்.

ஆனால், தேர்தலில் வெற்றி தோல்வி அப்படி அல்லவென்றால், அரசாளலாம் என்பது சரி! தோற்றால் 5 ஆண்டுகள் அந்த வழக்கு இந்த வழக்கு என்று நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்க வேண்டும். சில வேளைகளில் சிறையும் செல்ல நேரிடலாம்!

முதலில் கூட்டணியுள் உள்ள கட்சிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகுதிகளுக்காகக் கடுமையாகப் போரிட்டன. பின்னர் எநதத் தொகுதி எந்தக் கட்சிக்கு என்ற இழுபறி தொடர்ந்தது. முடிவில் எந்தத் .தொகுதி யாருக்கு என்பதில் மோதல். இப்போது காங்கிரஸ் நீங்கலாக ஏனைய கட்சிகளின் வேட்பாளர் பட்டியல வெளிவந்து விட்டது. காங்கிரசில் வாசன் குழு, இளங்கோவன் குழு என அநேகம குழுக்கள் இருக்கின்றன. வேட்பாளர் பட்டியல் தாமதமாவதற்கு அதுதான் காரணம். பொதுவாக அ.தி.மு.க. தான் வேட்பாளர் பட்டியலை 'முதலில் அறிவிகுகும. இந்த முறை தி.மு.க. முந்திக் கொண்டுவிட்டது.



சில தொகுதிகளில் நட்சத்திர வேட்பாளர்கள் மோதிக் கொள்கிறார்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதியை எதிர்த்து சேப்பாக்கத்தில் அ.தி.மு.க. நேரடியாகப் போட்டியிடவில்லை என்றாலும் அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (தமிழ்நாடு) வேட்பாளர் தாவூத் மியான் கான் போட்டியிடுகிறார்.

ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதாவை எதிர்த்து தி.மு.க. சார்பில் சீமான் போட்டியிடுகிறார். ஆயிரம் விளக்குத் தொகுதியில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மு.க. ஸ்டாலினை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் எஸ்.டி.கே. ஜக்கையன், ராயபுரம் தொகுதியில் அமைச்சர் ஜெயக் குமாரை எதிர்த்து தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் சற்குணபாண்டியன், கன்னியா குமரியில் அமைச்சர் தளவாய் சுந்தரத்தை எதிர்த்து தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் போட்டியிடுகின்றனர்.

**தமிழக தேர்தல் களத்தில்**

மயிலாப்பூரில் தி.மு.க. சார்பில் நடிகர் நெப்போலியனும் அ.தி.மு.க. சார்பில் நடிகர் எஸ்.வி.சேகரும் மோதுகினறனர். மயிலாப்பூர் பிராமணர்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.க. சார்பில பல நடிகர்கள் தொகுதி கேட்டு விண்ணப்பித்தாலும் சேகருக்கு மட்டுமே அ.தி.மு.க. தொகுதி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது.

எடுத்த எடுப்பிலேயே காட்சிகள் விறுவிறுப்பாக ஓடிக் கொண்டிருக்கின்றன. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்டுப் பேசிய ஜெயலலிதா, இந்தத் தேர்தலில் 'தி.மு.க. எனது பரம்பரை எதிரி, அந்தக் கட்சி சந்திக்கும் கடைசித் தேர்தல் இது' என்று தனக்கேயுரிய பாணியில் ஆணவத்தோடு மார்தட்டினார்.

ஜெயலலிதா நடிகையாக அரிதாரம் பூசிக்கொண்டிருந்த காலத்தில் அரசு கட்டிலில் இருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி அதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பாரா என்ன? 'ஆம், இது பரம்பரை பகைதான். பரம்பரை பகை என்று சரித்திர ஆசிரியர்கள் அந்தக்காலத்திலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். அண்ணாவின் ஆரியமாயை படிப்பவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள்' என்று அவர் மறுத்தான் கொடுத்திருக்கிறார். அவர் சொன்னதில் புதைந்து கிடக்கும் உட்பொருள் என்ன என்பது உங்களுக்கும் விளங்கி இருக்கும் என நம்புகிறேன்.

தமிழ்நாடு அடிக்கடி தேர்தல்களைச் சந்திப்பதால் சில வாக்காளர்களுக்குச் சலிப்புத் தட்டலாம். 1998, 1999, 2004 இல் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. 1996, 2001 தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தல் நடந்தது. எனவே, பொதுமேனி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ் நாட்டு வாக்காளர்கள் தேர்தலைச் சந்தித்து வருகிறார்கள்.

சட்டமன்றத் தேர்தல் வரும்போதெல்லாம் தி.மு.க. தலைமையைக் குறிவைத்து வாரிசு அரசியல் விமர்சனங்களை எதிர்க்கட்சிகள் வீச ஆரம்பித்துவிடும். ஏற்கெனவே ஸ்டாலின், அழகிரி ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டில் சிக்கி வறுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலிலும் எதிர்க்கட்சிகளின் முக்கிய ஆயுதமாக இந்த வாரிசு அரசியல் இருக்கப் போகிறது.

நல்ல காலமாக இந்தத் தேர்தலுக்குக் கனிமொழி மற்றும் மு.க.தமிழரசு ஆகியோர் எந்தத் தொகுதியிலும் நிறுத்தப்படவில்லை. சிறிது காலமாக இந்த இருவருக்கும் இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுக்கப்படும் என்ற பேச்சுகள் காற்றில் மிதக்க விடப்பட்டிருந்தன.

தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக வந்த பின்னர் தனது மகன் இளவரசர் ஸ்டாலினுக்கு பட்டம் சூட்டிவிட்டு அரசர் கருணாநிதி முடி துறந்து விடுவார் என அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் பரப்புரை செய்யத் தொடங்கிவிட்டன. அப்படியென்றால் அடுத்த முதல்வர் கருணாநிதிதான் என்று அவர்கள் இப்போதே ஒப்புக்கொண்டு விட்டார்களா?

தி.மு.க. தேர்தல் அறிக்கையைக் கருணாநிதி வெளியிடடார். அது பற்றித்தான் அரசியல் வட்டாரங்களில் மிகவும் பரபரப்பாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

### கவர்ச்சிகரமான வாக்குறுதிகள்

மிகவும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைக் கொண்ட 48 பக்கத் தேர்தல் அறிக்கையை தி.மு.க.சார்பில் கருணாநிதி வெளியிட்டுள்ளார். அதில் முக்கியமானவை பின்வருமாறு.

தந்தை பெரியார் வலியுறுத்திய அனைத்துச் சாதியினரும அர்ச்சகராகலாம் என்ற சமூக சீர்திருத்தக்கொள்கை வெற்றிபெற உடனடியாக உரிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் -

உச்ச நீதிமன்றம் அண்மைக் காலத்தில் திருமணங்கள் நடைபெற்ற மூன்று மாதக் காலத்திற்குள் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று மத்திய - மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. தமிழகத்தில் இச்சட்டத்தை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் -

அறிஞர் அண்ணா காலத்தில் கொண்டுவரப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள சுயமரியாதைத் திருமணச் சட்டத்தைப் போன்ற ஒரு சட்டம் இந்திய அளவிலும் கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்துவோம் -

1996 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் மாவட்டங்கள் தோறும் உருவாக்கப்பட்டன. சாதி, மத பேதமற்ற ஒரு சமுதாயம் உருவாவதற்கு இது ஒரு முன்னோடித் திட்டமென்று பல சமூகவியல் அறிஞர்களால் பாராட்டப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் இத்திட்டம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு கைவிடப் பட்டது. மீண்டும் இத்திட்டம் சீராக இயங்க உரிய நடவடிக்கைகளை எடுப்போம் -

தமிழகத்திலுள்ள எல்லா விமான நிலையங்களிலும் வந்து போகும் விமானங்களிலும செய்யப்படும் அனைத்து அறிவிப்புகளும் தமிழ் மொழியிலும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துவோம் -

தமிழ் அறிஞர்களுக்கு மத்திய அரசின் சார்பில் வழங்கப்படவிருக்கும் விருதுகளுக்கு தொல்காப்பியர் விருது, திருவள்ளுவர் விருது என்று பெயர் வைத்திடுமாறு வலியுறுத்துவோம் -

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்பதற்கு வலியுறுத்துவோம் -

தமிழகத்தில் மொத்தம் உள்ள சுமார் 55 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைப் பயன்படுத்தி, நிலமற்ற ஒவ்வொரு ஏழை விவசாயக் குடும்பத்திற்கும் குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் நிலம் வீதம் வழங்குவோம் -

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற குறிக்கோளை நடைமுறைப்படுத்துவோம் -

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசுக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பட்டப்படிப்பும் பட்டயப்படிப்பும் தொடங்க நடவடிக்கை மேற்கொள்வோம் -

மாணவர்களுக்கு சத்துணவோடு வாரம் இரண்டு முறை, திங்கட்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முட்டை வழங்கப்படும் -

கிராமப்புற இளைஞர்களுக்கு கணனிப் பயிற்சி எட்டாக்கனியாக இருப்பதால் கிராமப்பகுதிகளில் கணனிப் பயிற்சியாளர் நியமிக்கப்பட்டு, இலவசமாகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் -

நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைக்குத் தற்போது கிலோ அரிசி 3.50 ரூபாய் என்று விற்பதற்குப் பதிலாக கிலோ அரிசி இரண்டு ரூபாய் வீதம் தரமான அரிசி வழங்கி தாய்மார்களின் உள்ளத்தை குளிர்விக்கும சாதனை புரிவதுடன், தாய்மார்களின் பொழுதுபோக்குகளை மனதிற்கொண்டு பொதுஅறிவை பரப்புவதற்கும் பயன்படும் வகையில் தொலைக்காட்சி பெட்டியில்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் அறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள் விழாக்களையொட்டி இலவசமாக வர்ணத் தொலைக்காட்சிபெட்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் -

முதியோர், ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற விதவைகள் போன்றவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் இருநூறு ரூபாய் ஓய்வூதியம் 400 ரூபாயாக உயர்த்தப்பட்டு எண்ணிக்கை வரம்பு எதுவுமின்றி வழங்குவோம் -

கிழக்கு கடற்கரை பகுதிகளிலும் மற்றும் கச்சதீவு அருகிலும் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதையும், கடத்தப்படுவதையும், சுட்டுக்கொல்லப்படுவதையும் தடுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் -

கண்ணகி சிலை மீண்டும் கடற்கரைச் சாலையில் அதே இடத்தில் நிறுவுவோம் -

இந்த வாக்குறுதிகளில் கிலோவுக்கு இரண்டு ரூபாய் வீதம் தரமான அரிசி வழங்கித் தாய்மார்களின் உள்ளத்தை குளிர்விக்கும் சாதனை புரிவோம் என்பது கவர்ச்சியான வாக்குறுதிகளாகும்! இப்படியான கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் தமிழக அரசியலுக்குப் புதிதல்ல.

1967 இல் தி.மு.க. தேர்தலில் போட்டியிட்டு முதன் முறையாக ஆட்சியைப் பிடித்தபோதும் இதே மாதிரி ஒரு கவர்ச்சிகரமான வரக்குறுதி அளிக்கப்பட்டது சிலருக்கு நினைவிருக்கலாம்.

அப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி (4.5 கிலோ) அரிசி என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியபோது 'மூன்று படி லட்சியம், ஒரு படி நிச்சயம்' என்று அறிஞர் அண்ணா தட்டை மாற்றிப் பேசினார்.

ஒரு காலத்தில் ஸ்ரீலங்கா அரசியலில் முக்கியம் வகித்த இலவச அரிசி அரசியல் தமிழ்நாட்டில் மீண்டும் வந்திருக்கிறது.

கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் மட்டுமல்ல எதுகை மோனை முழக்கங்களும் தி.மு.கவினால் தாராளமாக எழுப்பப்பட்டன.

காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோசலிசம் இனிக்காது!
கூலி உயர்வு கேட்ட அத்தான் குண்டடிபட்டுச் செத்தான்!
காமராசர் அண்ணாச்சி கடலை விலை என்னாச்சி?
பக்தவத்சலம் அண்ணாச்சி பருப்பு விலை என்னாச்சி?
வெள்ளைக்காரப் பேயை ஓட்டியது காங்கிரஸ் பூசாரி அதற்காக பூசாரிக்கே நம் மகளைத் திருமணம் செய்தா கொடுக்க முடியும்?

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் 'எம்.ஜி.ஆரை மோரில் விஷத்தைக் 'கலந்து கொன்றுவிட்டதாக' ஜெயலலிதாவும் எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தபோது அவரைக் கவிழ்க்கச் சதிசெய்தவர் ஜெயலலிதா என்று ஜானகியும் ஒருவரைஒருவர் குற்றம் சாட்டினார்கள்.

2001 தேர்தலில் 'தி.மு.க. ஆட்சியில் பணப்புழக்கம் இல்லை' என்ற புதிய சீட்டைத் தூக்கிப்போட்டார் ஜெயலலிதா.

'பொற்கால ஆட்சி தொடர உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்' என்று தி.மு.க. சொல்லியது.

கட்சிகளின் வாக்குறுதிகளை எல்லாம் கேட்கும் அல்லது படிக்கும் தமிழக வாக்காளப் பெருமக்களது தலை நிச்சயம் சுற்றும் என்று நம்பலாம். வாக்குறுதிகளை நிறைவேற்றப் பணம் வேண்டுமே? அது எங்கிருந்து வரும் என்பது பூடகமாக வைக்கப்பட்டுள்ளது.

தமிழக வாக்காளர்கள் புத்திசாலிகள். கைக்கு காப்பு, காதுக்குத் தோடு, மூக்குக்கு மூக்குத்தி பணம், பண்டம் என்று வாங்கினாலும் தங்களுக்குப் பிடித்த கட்சிக்கே வாக்களிக்கிறார்கள். அவ்வப்போது ஆட்சியையும் மாற்றி வருகிறார்கள்.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் மாறி மாறித் திராவிடக் கட்சிகளுக்கே வாக்களித்துச் சாதனை படைத்துள்ளார்கள். இந்தத் தேர்தலிலும் அந்தச் சாதனை தொடரும் என்று நிச்சயமாக நம்பலாம்.

- நன்றி : தமிழ் நாதம்

## முஸ்லிம்களுக்குத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் இராணுவசேவையை இனவர்க்கப்படி பிரிப்பதற்கு முயன்றால் மற்றும் பல துறைகளிலும் அத்தகைய இன அடிப்படையிலான பிரிவுகளை ஏற்படுத்த வேண்டிநேரும் என்பது நிச்சயமானதாகும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கெனத் தனியான அலகு, தனியான மாவட்டம் என ஏற்படுத்தப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் நீண்ட காலமாகவே கோரிவருகின்றது. இவ்விதம் முஸ்லிம்களுக்கெனத் தனியான படைப்பிரிவு உருவாக்கப்படுவது, முஸ்லிம்களுக்கெனத் தனியான அலகு வழங்கப்பட வேண்டுமெனக்கோரிவரும் தரப்பினர் தமது கோரிக்கையை நியாயப்படுத்தி வாதாட வழி வகுப்பதாய் அமைந்துவிடும்.

இலங்கை இராணுவத்துள் முஸ்லிம் படைப்பிரிவு அமைக்கப்பட முடியுமானால், அம்பாறை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து முஸ்லிம்களுக்கெனத் தனியானதொரு மாவட்டத்தை உருவாக்குவது தவறாகாது என முஸ்லிம் இனவாத அரசியல் வாதிகள் கோரிக்கை எழுப்பக் கூடும். அத்தகையதொரு நிலை உருவாகுமானால், அத்தகைய முஸ்லிம் இனவாதத் தலைவர்களது கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டி ஏற்படும். மொத்தத்தில் இலங்கை இராணுவத்தில் இத்தகைய முஸ்லிம் படைப்பிரிவொன்றை உருவாக்கும் முயற்சி, தொடர்ச்சியாகப் பற்றியெரியும் பிரச்சினைகளால் துன்பப்படும். கிழக்கு மாகாணப் பொதுமக்களை மீண்டுமொரு தடவை இனவாதச் சிக்கல்களால் அவதியுறும் நிலைக்கு இட்டுச் செல்வதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

இம்மாதம் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜெனிவா இரண்டாம் கட்டப்பேச்சுகளின்போது, அரசு உருவாக்க முயன்று வரும் இந்த 'அக்பர் முஸ்லிம் படைப்பிரிவு' குறித்து அன்டன் பாலசிங்கம் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பக் கூடுமென்பது நிச்சயமே. இலங்கைப் பாதுகாப்புப் படைத்தரப்பு முற்றுமுழுதாக இலங்கையின் இறைமையையும், சுயாதீனத்தையும் மட்டுமன்றி, நாட்டு மக்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்பது உண்மையே.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் இத்தகைய விசுவாசம் காரணமாகவே விடுதலைப்புலிகளது ஈழக்கனவு இது வரை நிறைவேறாத நிலையிலுள்ளது அத்தகைய இராணுவ சேவையில் இனவாத அடிப்படையில் இத்தகைய தனியான முஸ்லிம் படைப்பிரிவொன்றை உருவாக்குவதன் மூலம் நாட்டை மீண்டும் சிக்கலுக்குள் ஆழ்த்துவது எந்த வகையிலும் மஹிந்த சிந்தனைக் கோட்பாடுகளுக்குச் சற்றும் பொருந்தாத நடவடிக்கையே எனக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.